சிந்தாமணி

மார்ச் 1928

. No. M. 1957. WHOLE NUMBER 44. VOL. IV, NO. 8.

பத்திராதிபர் சகோதரி வி. பாலம்மாள்.

Vol. IV.] March 1928. [No. 8.

பொருளடக்கம்.

	பக்கம்.		பக்கம்.
...போத ராம சரிதம்—அர்த்தத்துடன் (சகோதரி வி. பாலம்மாள்)	... 454	மங்கையரின் உரிமைகள் (ஸ்ரீமான் S. தேசிகவிநாயகர்.)	... 479
பெண்மக்களின் விவாக வயது (பத்திராதிபர்)	... 455	அன்பின் பங்கு	... 480
பாங்கி கானம் (காலஞ் சென்ற சிறுமி R. பாப்பம்மாள்)	... 457	கை ராட்டினம் (ஸ்ரீமதி பி. மங்களாபாய்.)	... 486
...றிற் இணங்கு (...ான் A. சந்தனஸ்வாமி, B.A.)	... 458	...(ஸ்ரீமதி ருக்மணியம்மாள்)	... 492
...ன் அல்லது பாதகண்டத்துச் சௌக் ...க்கொடி (ஸ்ரீமதி யாசோதி அம்மாள்)	... 461	தேசியத் தாலாட்டு (ஸ்ரீமான் "கோமதியப்பன்" பாடியது)	... 503
...கல்வி (மிஸ் K. கமலாம்பிகை)	... 463	அலமேலுவின் உபாயம் (ஸ்ரீமதி S. R. ஜயம்மாள்)	... 504
...ானம் (...ான் M. M. N. அய்யர்.)	... 466	ஸ்ரீ கிருஷ்ணனும் அவருடைய உபதேசமும் (ஸ்ரீமான் M. C. கிருஷ்ணசாமி.)	... 506
...மயியும் எளிய வாழ்வும் (...ான் ஆரியூர் வ. பதுமநாப பிள்ளை.)	... 470	காலத்தின் கொடுமை (ஸ்ரீமதி சந்தாம்.)	... 508
...ியுக்தா (சுவாமி அற்புதானந்தர்.)	... 474	திரௌபதியும் சத்தியபாமையும்	... 509
		பெண்களின் தாழ்மை (ஸ்ரீமதி K. கமலாம்பாள்).	511

n. inst ten rep no pop IV

...ர் ஊடு ரூ. 5. All Rights Reserved. வெளி நாடு—$ 4.

**ஸ்ரீமான் கரு. கும. சோமசுந்தரம் செட்டியார் அவர்கள், மைடான், டெல்லி
லிருந்து 12—4—26ல் எழுதுவது :—**

அன்பார்ந்த சகோதரியே !

நமது அருமை நாட்டிற்கும் மொழிக்கும் சமயத்திற்கும் விண்ணவரும் போற்றத்
தக்க வீர புத்திரர்களை—உலகம் புகழத் தக்க உத்தமர்களை—கவியரசர்களைப் பெற்று உதவவேண்
டிய தாய்மார்கள் இந்நாள் அடிமைகளாய், கண்ணிருந்தும் குருடாய்ச் சிற்றின்பப் பொருள்
களாய் மிளிர்வது வருந்தத் தக்கதே. அவர்களை—உலகிற்குப் பராசக்தி அம்சமாயிலங்கும் பெண்
மணிகளை—இவ்விழிய நிலைக்குக்கொண்டு வந்த ஆடவர் செயலும் கண்டிக்கத் தக்கதாகும். இவர்
கள் இந்நிலையை யடைந்ததாலன்றோ, நமது பாரத நாடு ஒளிமழுங்கிக் கிடக்கின்றது. இறைவன
ருளாலும் தம் கூரிய மதியாலும் உணரப்பெற்ற பெரியார் பலர் இப்பொழுது ஆடவரால் ஒதுக்
கித்தள்ளப் பெற்ற அருமைத் தாய்மார்களும் தீண்டாத வகுப்பாரெனப்படுவாரும் முன்னேற்ற
மடைவதற்கான முயற்சியைச் செய்து வருகின்றனர். இச்சமயத்தில் தாங்களும் தங்கள் 'சிந்தா
மணியும்' செய்து வரும் தொண்டினு முயர்ந்தது வேறுண்டோ? ஒவ்வொரு மாதமும் பல
திறம்பட்ட மக்களையும் தங்கள் கொள்கையில் ஈடுபடுத்தும் முறையில் நாவல், கதை, விகடம்
ஆகிய பல வழிகளிலும் விஷயங்களைப் புகுத்தி எழுதி வருவது பற்றி அளவில்லா மகிழ்ச்சி
யடைகின்றேன். நமது சிந்தாமணியின் போதனையாலேயே 'பெண்கள் படிக்கக் கூடாது' என்று
பேசிய ஆண்டில் முதிர்ந்த பெரியார் பலர் இப்பொழுது பெண் பாலார்மீது அனுதாபங்காட்டி
வருவதையும் அடிக்கடி "சிந்தாமணி வந்து விட்டதா", "சிந்தாமணி வந்து விட்டதா" என்று
வினவுவதையும் நான் நேரிற் கண்டிருக்கிறேன். இங்ஙனமாக நற்றொண்டாற்றி வரும் நமது
"சிந்தாமணி" பல்லூழி வாழப் பரமன துணை கூடுவதாக. இத்துடன் இரண்டு புதிய சந்தாதார்
களின் விலாசமுமனுப்பி யிருக்கிறேன். நமது "சிந்தாமணி" நாடெங்கும் பரவ என்னாலியன்ற
தொண்டியற்றுவேன்.

**ஸ்ரீமான் C. V. சங்கரநாராயண ஐயர் அவர்கள், ஹாஸ்பிடல் அசிஸ்டெண்டு, 28—5—25ல்
அலஸ்டாரிலிருந்து எழுதுவது :—**

அன்பார்ந்த சகோதரியே,

தாங்கள் அன்புடன் விடுத்த "சிந்தாமணி" இதழ்கள் வரப்பெற்றேன். படித்து மன
மகிழ்ந்தேன். நம் மடந்தையர் முன்னேற்றத்துக்கு நம் பெண் பாலரே வழிதேடல் அவசியம்.
அந்தப் பொறுப்பைத் தாங்கள் ஏற்றுக்கொண்டிருப்பது ஒரு பெருந்தகையும் பெண்மக்களுக்கே
ஓர் பெருமையுமாகும். எனவே இன்னும் எவ்வளவு விரித்துரைத்தாலும் மிகையாகாது. சமய
மின்மையால் இத்துடன் விடுத்தனன்.

ஸ்ரீமான் S. B. பத்தர் அவர்கள் 23—5—'25ல் டர்பனிலிருந்து எழுதுவது :—

அன்புள்ள சகோதரி அவர்களுக்கு உபயக்ஷேமம். தாங்கள் அனுப்பிய கடிதமும
சிந்தாமணி பத்திரிகையும் கிடைத்தன. வந்தனத்துடன் பெற்றுக்கொண்டேன். தாங்க[illegible]
தேசம் முன்னேற வேண்டுமெனப் பேரவாக்கொண்டவர்களென்பதைத் தாங்கள் [illegible] நம்
துள்ள சிந்தாமணி பத்திரிகையைக்கொண்டு அறிந்து கொண்டேன். அதற்காக யான் ஆரம்பித்
மும் செலுத்துகின்றேன். கடவுளும் தங்கள் முயற்சி விருத்தியுறக் கருணைபுரிவார். வந்தன

ஸ்ரீமான் M. S. ரத்தினசாமி அவர்கள் 25—9—25ல் தைப்பிங்கிலிருந்து எழுதுவது :—

சகோதரீ !

தங்களால் நடத்தப்படும் "சிந்தாமணி" என்ற மாத சஞ்சிகையைக் கண்ணுற்றேன்.
படிக்க மிகவும் ஆனந்தமாயிருந்தது. தாங்கள் பெண்களுக்கோர் தலைமை நாயகமாய் விளங்கு
வது பற்றி நாட்டிலுள்ள பெண்கள் கூடிய சீக்கிரம் மேன்மையடைவார்கள் என்பதில் சந்தேகம்
உளதோ? எல்லாம் வல்ல ஈசன் செயலும் அப்படியே முடிக்கும். நான் இன்று ஒரு வருஷ
சந்தாவனுப்பியிருப்பதைப் பெற்றுக்கொண்டு தயவு செய்து எனக்குப் பத்திரிகையை யனுப்பி

சிந்தாமணி வருஷ சந்தா விவரம்.

நிரந்தர (சாசுவத) சந்தாதார்க்கு உள்நாடு ரூ. 50-0-0. வெளிநாடு டாலர் 40.

	ரூ.	அ.	பை.
மகா ராஜாக்களுக்கு வருஷ சந்தா	50	0	0
ஜமீந்தார்களுக்கு	30	0	0
போஷகர்களுக்கு	25	0	0
நன்கொடையாளருக்கு	15	0	0
அபிமானிகளுக்கு	10	0	0
உள்நாடுகளுக்கு	5	0	0
வெளி நாடுகளுக்கு	6	0	0

M. R. Ry. K. V. Sesha Aiyangar Avl., M.A., B.L., High Court Vakil, 23, Nadu Street, Mylapore, writes under date 9th January 1927 :—

I have always looked forward to the next issue of the "Chintamani" with much interest and its articles have been read by myself and my friends with pleasure and instruction. Though perhaps primarily intended for ladies, its contents will amply repay perusal to gentlemen also. I have no doubt that the journal will grow in popularity and usefulness.

Some Select Opinions on "Chinthamani.

The Military Secretary to H. E. the Governor of Madras, writes under date 5th February 1926 :—

I am desired by Her Excellency to acknowledge receipt of your letter dated February 3rd and to thank you for the four copies of the 'Chinthamani'

Her Excellency wishes all success to the paper which appears to be doing very good work.

The Right Hon'ble Mr. V. S. SRINIVASA SASTRIAR, P. C., writes under date 19th January 1926 :—

I have heard good opinions from competent persons of the *Chintamani*. From what I have seen of it, they seem well deserved. With more support from the reading public and regular contributions from those that combine modern knowledge and Tamil Scholarship, the magazine should become a great popular educator.

Rao Bahadur M.R.Ry. P.R. Vengu Aiyar, Avl.,* M.B.E., *Bangalore, under date 1-5-1926 :—

I have perused the copies of the Journal issued last year which you have so kindly sent me. The articles are well written and I found them interesting and instructive. The aim of the Journal, viz. the improvement of the present status of Tamil-Nadu Ladies, is well kept up and the consistent manner in which the high standard is maintained each month, is indeed praiseworthy. The sincere thanks of the public are due to you for the splendid and useful service you are rendering. I wish the Journal a bright future.

M. R. Ry. G. Ganapati Sastriar Avl., Chief Judge, Pudukotah State, writes under date 12th Feb. 1926.

I am a regular subscriber for 'Chintamani,' the Tamil journal, edited by Sister V. Balammal. It is eagerly read from cover to cover by the women-folk of my house and I have myself gone through considerable portions of it with great interest. It contains, besides a number of well-written and interesting stories, several articles on a variety of important and useful subjects written in a simple, yet elegant style, which are very interesting, informative, and instructive. The journal is in every way a really high-class production and the talented Editress deserves our grateful thanks for her valuable services through its medium in spreading education, especially among women, in the Tamil *Nadu*. The journal deserves to be widely patronised by all lovers of Tamil and by all those who have at heart the advancement of our women, on whom alone depends ultimately the uplift of our country, and I think that it ought to find a place in every Tamil home. I wish the journal every success.

Mr. P. Krishnamurthi Aiyar, B.A., B.L., Chiet Court Vakil, Pudukotah, writes under date 12-8-26, as follows:—

Education of women is the greatest need of the day and to that end every effort should be made. To achieve it, Sister V. Balammal who is highly talented, and fairly advanced in her ideas, moral, intellectual and social, has taken on herself the onerous task of editing and pulishing the vernacular Journal "Chintamani" which from its very commencement has been maintaining a very high standard both in its contribution and its get-up. The success is entirely due to the indefatigable energies of the learned Editor, and Tamil Nadu offers its thanks to her. To the women whom it is generally intended to serve, the Journal is highly interesting, educative, and reforming, placing before them the high ideals of woman-hood set up in our ancient-books of guidance. The Journal deserves to be subscribed for, by every Tamil-knowing household of India, and by those to whom advancement of the woman-hood of India is of great interest.

Sister V. Balammal is also anxious to establish a fairly well-equipped Printing Press to be run solely by women, purposely to offer opportunities of service to some of our educated sisters who may be willing to take up literary work. The movement deserves to succeed. It requires the co-operation of all our patriots and it is earnestly hoped that such co-operation will be forthcoming when the appeal is made.

Mr. N. P. Subrahmanya Iyer, Assistant Secretary to the Government of Mysore, P. W. D. (Retired), under date 30-4-1926.

I have had the pleasure of going through six issues of "CHINTAMANI" which has run into second volume, and am gratified to observe that its talented Editor has striven to keep up the standard of excellence she has originally set before her. It is a high class monthly, as announced on its title page, primarily intended to raise the status of our women, morally, intellectually and socially, and emancipate them from the trammels of unmeaning and pernicious customs which pass for shastric injunctions; as well as from the tyranny of monstrous opinions which consciously or otherwise seek to hold them in perpetual bondage. The crudities of some of their conceptions are exposed, through the medium of simple stories, in a quiet, inoffensive manner. I am sure that, after a perusal of the journal, no woman, for that matter none of its readers, would rest satisfied with the present state of Hindu Society and would fail to be inspired to make an effort, however humble, to set our house in order. I am indeed thankful that one of the Hindu ladies, eminently qualified for the task by her scholarship, both in Tamil and Sanskrit, has come forward to and set her mind on, removing abuses which cloud the vision of our women and are prejudical to their own interests. Every Tamil home should have a copy of the journal. I heartily wish the scholarly Editor success in her bold and timely endeavour to reform our society.

M. K. ACHARYA Avl., M.L.A., writes under date 31-7-25 :—

Among the very small class of highly cultured Indian ladies who combine ancient scholarship with modern outlook and method Sister V. Balambal ranks very high. The best proof of this is found in the high class Tamil Magazine edited by her under the name of 'Chintamani,' whose literary excellence combined with simpilicity, variety and usefulness must strike even a casual reader. The Magazine deserves to be read in every Tamil home,as it combines most harmoniously the spirit both of ancient and of modern India. I commend it to every true lover of the Motherland, to every literary, social, and political worker in Tamil Nadu.

***

RAO BAHADUR A. C. PRANATARTIHARA AYYAR Avl., I.S.O., Kilpauk, writes under date 4-8-25:—

I have gone through several numbers of Sister Balambal's Tamil Journal, the *Chintamani*, and find them to be quite suitable for reading in Hindu homes and Hindu Girls' Schools. The matter is judiciously chosen, varied and interesting and such in the main as to promote the approach to Hindu ideals.

***

M. R. Ry. B. V. SANKARAKAMESWARA AYYAR Avl., B.A., *Superintendent of Schools, Pudukkottai,* writes under date 12-8-25:—

Chinthamani contains interesting articles suited to pupils of Secondary Schools. The subjects dealt with bear on educational topics.

***

The Editor has taken much pains to present to the public a high class monthly journal, which is bound to attain a large measure of popularity among the Tamil speaking peoples of this Presidency.—*West Coast Reformer*, 22-8-24.

***

Though the Editor appears to be well versed in Sanskrit, it is a pleasure to note that the language is fairly free from Sanskrit imports and is not pedantic. We wish every success to the new monthly.—*Justice*, 22-8-24.

***

It is with much pleasure that I heard of a new venture in Tamil journalism, *Chinthamani*, undertaken by that fine worker in the cause of literature and nationalism, Sister Balammal Garu. Her splendid scholarship in Sanskrit and Tamil is a guarantee that the "Chinthamani" will maintain a high standard of excellence. I trust that the Tamil public will liberally subscribe to the Magazine and thus show in a practical way their appreciation of the author's noble efforts and the duty they owe to their mother-tongue.—Mr. C. RAMALINGA REDDY, M. A. (CANTAB.), M. L. C., *Kilpauk, Madras.*

***

The mere fact that "Chinthamani" is being edited by Sister V. Balammal is in itself a guarantee that it will prove to be of immense practical utility in dispelling the cloud of ignorance now enveloping our ladies, and leading them towards emancipation consistent with Sastraic propriety.—*Arya Matha Samvardhini.*

The Hindu under date 11-4-'25 writes:—

Sister V. Balammal has done a service to the cause of the women of this Presidency by her starting "CHINTHAMANI," a Tamil Monthly, intended to raise the present status of women both politically and socially. "CHINTHAMANI" promises to fulfil that function under the able editorship of the scholarly lady. The current number of the Journal which is before us, opens with an editorial which emphasises the need for convincing the opponents of women-emancipation by explaining to them what the new movement really means, and by clearing certain very common misconceptions regarding it. A special feature of the Journal is that moral, national and domestic ideals are brought before the readers in a quiet, unobtrusive way, through the medium of stories and dialogues. This number contains contributions on a variety of subjects, including one on the Baby-Welfare Movement in the Western countries.

Mr. G. SRINIVASA AYYAR, B.A., L.T., *Headmaster, Ramaswamy Chettiar's Town High School, Chidambaram*, writes under date 2-3-'25, as follows :—

I find "Chinthamani" very suitable for school pupils. Its Contents are educative as well as instructive; and its language may be taken as a model of expression in Tamil.

I have read through some of the numbers of the *Chintamani* edited by Sister Balammal and I am of opinion that in respect to the subjects treated they are of vital interest to the Tamil women of the present generation and that in matter of style and language this is not in any way inferior to the journals of this kind. This is a journal that should be read by women of all classes and creeds in their homes and by the girls in their schools.—Rev. FRANCIS KINGSBURY, Kilpauk, 25th July 1925.

I have read with pleasure the first chapter of your journal. There is need for intensive work among the women of Madras. I am glad you have taken up the task. The contents are very interesting. If the succeeding ladies take up the standard, it would be of great service to Madras ladies.—Mr. T. V. SESHAGIRI AYYAR, *Retired High Court Judge, Madras*, 24-8-24.

Of the many magazines in Tamil I have come across, 'Chintamani' is by far the best. Let me tell you why. Its Tamil is simple, homely, idiomatic. Its articles are well conceived and short, making it possible for the most laborious lady to read and finish one of them in a single day. The subjects written upon are such as our girls ought to be very much interested in.—Mr. S. V. RANGASWAMI AIYANGAR, B. A., *Manager, Oxford University Press, Madras,* Sept. 4, 1924.

Some Select Opinions on "Chinthamani."

Dewan Bahadur T. RANGACHARIAR, C. I. E., Dy. President, Indian Legislative Assembly, writes under date 29th Dec. '25 as follows:—

I have been a regular subscriber to the monthly magazine "*Chinthamani*" edited by that talented and well-known lady Sister Balammal and occasionally read it also. My daughters take a copy each and read it regularly. The magazine is written in homely and beautiful Tamil. The choice of the subjects is most appropriate and well conceived for educating our ladies in worldly knowledge and social evils. The magazine is run on advanced conservative lines,—neither too radical nor violently reactionary. It is thoroughly readable from page to page. It deserves large support at the hands of the Tamil reading public. It will be a very useful magazine for students of both sexes.

K. A. NARAYAN, Esq., c/o Messrs. Paterson Simons & Co., Ltd., Kuala Lumpur, writes:—

I may say that those who have been regular readers of "Chintamani" are very appreciative, especially womenfolk are jubilant over some of your picturesque and telling articles.

Wishing you continued prosperity and rapid increase in subscribers.

T. S. SANKARASUBBU, Esq., M.A., B.L., Law Officer, Ramnad, writes under date 30—12—1925 as follows:—

I had an occasion to go through one of the volumes of your most invaluable and interesting magazine. I am sorry I did not make my acquaintance with it sufficiently early. "Your Chintamani is a beacon-light to Indian womanhood."

P. G. Naicker Esq., Durban, 25th April 1925

Sister Balammal,

I thank you for your letter of the 20th March and in enclosing herewith Postal Order for 6/8 being the year's subscription, I desire to place on record my deep appreciation of your services to the womanhood of India.

The necessity of a journal as that edited by you has been keenly felt for some time and consequently the appearance of your Journal is at a most opportune moment.

In wishing you every success, it is my fervent wish that you will long be spared to continue that noble work before you.

Goonarathinum, Esq., Durban, Natal; 14th March 1925.

Dear Sister,

I have been endeavouring to procure orders for your journal and so far have been successful in persuading a few to become subscribers. I may add that "Chinthamani" is very interesting and fills a long-felt want in the home life of our Tamil Sisters both in India and abroad.

CHINTHAMANI.

A HIGH CLASS TAMIL MONTHLY.

(Devoted mainly to the cause of Indian Women.)

EDITOR SISTER V. BALAMMAL.

IV.] March 1928. [No. 8.

श्री शारदायै नमः ।

श्रीरामचन्द्रपरब्रह्मणे नमः

20762௨

சிந்தாமணி

ஸுபோத ராம சரிதம்

COMPOSED AND ANNOTATED BY
SISTER V. BALAMMAL
DAUGHTER OF
Late Dr. A. R. VAIDYANATHA SASTRIAR, M. A., M. B. & C. M.

(All Rights reserved by the Authoress)

सुबोधरामचरिते

॥ अथ सुन्दरकाण्डमारम्भः ॥

चण्डरुचिवंशमौक्तिकमण्डनभूतं ह्यखण्डगुणसिन्धुम् ।
आखण्डलादिवन्द्यं प्रचण्डदोर्दण्डमण्डितं नौमि ॥

दशकण्ठहृतां सीतां विचेतुं मारुतात्मजः ।
महेन्द्रशैलशिखरादुदस्थादम्बरान्तरे ॥ १ ॥

मारुतात्मजः ஹனுமார் **दशकंठहृतां** ராவணனால் அபகரிக்கப்பட்ட **सीतां** சீதாப்பிராட்டியை **विचेतुं** தேடுவதற்காக **महेन्द्रशैलशिखरात्** மகேந்திர பருவதத்தின் உச்சியிலிருந்து **अम्बरान्तरे** ஆகாய வீதியில் **उदस्थात्** எழும்பினார் ॥ १ ॥

आपृच्छ्य पथि मैनाकं जित्वा च सुरसां ततः ।
निहत्य सिंहिकामब्धेस्तीरमाप स मारुतिः ॥ २ ॥

सः அந்த **मारुतिः** மாருதியானவர் **पथि** வழியில் **मैनाकं** மைனாக பருவதத்தை **आपृच्छ्य** விசாரித்து **सुरसां** சுரஸை என்றவளை **जित्वा** ஜயித்து **सिंहिकां च** சிம்ஹிகை என்றவளையும் **निहत्य** கொன்று **ततः** பிறகு **अब्धेः** கடலின் **तीरं** கரையை **आप** அடைந்தார் ॥ २ ॥

तामालोक्य पुरीं लङ्कां त्रिकूटशिखरे स्थिताम् ।
असङ्ख्यैः स्वर्णकलशैरावृतां विस्मितोऽभवत् ॥ ३ ॥

सः ஹனுமார் **त्रिकूटशिखरे** திரிகூட மலையினுச்சியில் **स्थितां** இருப்பதாயும் **असङ्ख्यैः** கணக்கற்ற **स्वर्णकलशैः** பொற்கலசங்களால் **आवृतां** நிறைந்ததாயும் உள்ள **तां** அந்த **लङ्कां** இலங்கையென்ற **पुरीं** பட்டணத்தை **आलोक्य** பார்த்து **विस्मितः** ஆச்சரியமுற்றவராக **अभूत्** ஆனார் ॥ ३ ॥

(To be continued)

7/15 ... N2458
N2758

சிந்தாமணி

தமிழ் நாட்டுப் பெண்மணிகளின் முன்னேற்றத்தை முக்கியமாகக்கொண்டு வெளிவரும் ஓர் உயர்தர மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

பத்திராதிபர். சகோதரி வி. பாலம்மாள்.

மலர் IV.] பிரபவ—பங்குனி. [இதழ் 8.

பெண்மக்களின் விவாக வயது.

(பத்திராதிபர்.)

(392-வது பக்கத் தொடர்ச்சி.)

பெண்களின் விவாகம் வேறு, சம்மத வயது வேறு என்று பிரித்துப் பார்ப்போமாயின் பெண்களுக்குப் பன்னிரண்டு வயதே விவாகத்திற் கேற்ற வயதெனக் கூறுவோம். காதல் மணமென்றும் கடிமணமென்றும் கூறப்படும் சொற்கள் செவிக்கு இன்பம் விளைவிப்பனவாயிருத்தலன்றித் தற்காலம் காதல் மணம் சாத்தியமாவென்பதை ஆலோசித்தலவசியம். நடையுடை பாவனைகளும் தோற்றமும் ஆடம்பரமாக அமைந்துள்ள இந்நாளில் வயதடைந்த பருவப் பெண் தனக்கேற்ற கணவனைத் தேர்ந்தெடுத்தல் எளிதல்ல. காதல் என்பது ஒருமைப்பட்ட மனப்போக்கை ஆதாரமாகக் கொண்டதன்றி அழகையோ அந்தஸ்தையோ பொருளையோ பட்டப் பரீட்சையையோ மதித்து ஏற்படுவதன்று. நெடுநாட் பழக்கத்தால் இருமனம் ஒன்றுபடுமன்றி திடீரென ஒன்றுபடலசாத்தியம். இது பற்றியே மேனாட்டார் தம்மில் கோர்ட்ஷிப் என்ற முறையை வைத்து அதனால் சில சமய மேற்படக்கூடிய அபாயங்களையும் நிர்வகிக்கக் கூடிய மனத்துணிவையும் சமூக வழக்கத்தையும் பெற்றிருக்கின்றனர். ரைனால்ட்ஸ் என்ற மேனாட்டு நாவலரின் நூல்கள் பெரும்பாலும் இக்கொடுமையை வெளிக்காட்டிச் சீர்திருத்தம் கோரி எழுதப்பட்டுள்ளன என்பதைக் கண்டுகொள்ளலாம். நம்மில் இவ்வழக்கம்கைக்கொள்ளமுடியவேமுடியாது. இவ்வாறாயின் வீட்டிலிருக்கும் பருவப் பெண் தன் மனதிற்கிசைந்த ஆடவனைத் தேர்ந்தெடுத்தல் எங்ஙனம் சாத்தியப்படும்? உலகம் அன்பு மயம். உலக வாழ்க்கை அன்பு மயம். மானிட வாழ்வின் முன்னேற்றம் அன்பு மயம். இவ்

வன்பை ஆதாரமாக்கி சுயநலம், பிறநலம் இரண்டிற்குமுழைத்தல் மனிதர் கடமை. எங்காரியத்திலும் கோபம், தைரியம், அதிகாரம், சுயேச்சையென்ற குணங்களுடன் வாழும் ஆடவனுக்குச் சாந்தம், அமைதி, பொறுமை, அடக்கம் என்ற பெண்ணினத்தின் சக்தியைக் கூட்டுறவாக அடைந்தாலன்றி மேன்மையுற முடியாது. பெண்களும் இவ்வாறே பிறவிக் குணமாயுள்ள இவைகளுடன் ஆடவர் குணங்களை ஏற்று நடக்கவேண்டியவர்களாயிருக்கின்றார்கள். மனவொற்றுமைக்குச் சில அம்சங்கள் சமானமாக இருத்தல் அவசியம். பெற்றோர்களாலே இப்பொறுப்பு இனிது நிறைவேற்றப்படக்கூடியதாக விருக்கின்றது. கணவனின் தொழில், முயற்சி, ஊக்கம் இவைகளை அனுசரித்து நடத்தலே இல்லாளின் கடமையாயிருப்பதால் பெண்மகள் பன்னிரண்டு வயதிற்கு மேல் பெற்றோரால் தக்க வரனுக்களித்து விவாகிக்கப்பட்டுப் பதினெட்டு வயதிற்குமேல் குடும்ப நிர்வாகத்தை ஏற்று நடத்துவாளாயின் அத்தம்பதிகளிடையே காதலும் ஒற்றுமையும் பூரணமாயமைந்திருக்கத் தடையே கிடையாது. தன் நிலைமைக்கேற்ற இடத்தில் பெற்றோரால் விவாகம் செய்து கொடுக்கப்பட்ட பெண்பால் தனக்கேற்பட்ட கணவனின் குடும்பத்தை நிர்வகிக்கக்கூடிய பயிற்சி பெறுவதற்குச் சில காலம் ஏற்படல் வேண்டுமாகையால் இம்முறையில் குறைந்தது ஐந்து வருடங்களேனும் பயின்று தன் கல்வியை ஒரு முறையாக முடித்து, பருவ வயதடையுமுன்பே தனக்கென ஏற்பட்டுள்ள கணவன்பால் தனது பூரண அன்பையும் காதலையும் செலுத்தி ஒற்றுமையாக ஓருயிரும் ஈருடலுமாக வாழ்க்கையில் ஈடுபடக்கூடிய காலம் பதினெட்டு வயதளவே ஆகும். அதன்றி விவாகம் பதினாறு வயதில், முதற்பிரசவம் பதினேழு வயதில், இருபது வயதுக்குள் நான்கு குழந்தைகள். முடிவில் தேக பலமற்று ஒளியற்று உற்சாகமற்று சவக்குழியை எதிர் பார்த்தவண்ணமிருப்பதால் மட்டும் பெண்ணுலகம் முன்னேற்றப்பட்டு விட்டதாக நினைத்தல் சரியன்று. வயது முதிர்ந்த ஆண் பெண் இருவரும் தமக்குள் ஒன்றிரண்டு விஷயங்களிலன்றி எல்லாவற்றிலும் ஒரே நோக்கமுள்ளவர்களாக ஏற்படல் அரிதிலும் அரிது. சிறு வயதில் கலியாணமும் பதினெட்டு வயதிற்குமேல் குடும்ப வாழ்க்கையும் என்ற முறையே பெண்களுக்கேற்றதாம். உண்மையான பல தத்துவங்களையும் அனுபவத்தையும் உணராது பெண்களின் விவாக வயது பருவ வயது கடந்து இருக்கவேண்டுமாயின் இந்நவீன முறையில் இந்தியப் பெண்களின் வாழ்க்கை உயர்வுறுமாவென்பதைச் சீர்திருத்தவாதிகள் நன்கு ஆலோசிப்பார்களாக.

சுபம்.

EVERY HOUSE
SHOULD STOCK A BOTTLE OF
AMRUTANJAN
THE BEST PAIN BALM.
Price As. 10 a bottle.

பாங்கி கானம்.

(காலஞ்சென்ற சிறுமி R. பாப்பம்மாள்).

அறிவறிய வுண்மை யடி பாங்கிமரே யந்த
வருமைதனை யாரறிவார் பாங்கிமாரே. (அ)

ஆகாச பூதமைந்தும் பாங்கிமாரே அங்கே
யாவரணக் கூட்டமடி பாங்கிமாரே. (ஆ)

இசையாத் தவமகிமை பாங்கிமாரே இங்கே
இச்சென்மம் யாமடைந்தோம் பாங்கிமாரே (இ)

ஈயாத லோபியர்கள் பாங்கிமாரே இவர்
இறந்துன்ப மியாமறிவோம் பாங்கிமாரே. (ஈ)

உலகமெலா முணர்ந்தருளும் பாங்கிமாரே யவன்
புண்மை யுருவான வண்டி பாங்கிமாரே. (உ)

ஊதியமா யவனடியைப் பாங்கிமாரே நித்தம்
உள்ளமதில் கொண்டிடுவோம் பாங்கிமாரே (ஊ)

எல்லாப் பிறப்பு மடி பாங்கிமாரே எங்கள்
இருவினையின் பாகமடி பாங்கிமாரே. (எ)

ஏவாவினை யகலப் பாங்கிமாரே யிவன்
இணையடியே தஞ்சமடி பாங்கிமாரே. (ஏ)

ஐயஞ் சிறிதளவு பாங்கிமாரே அன்பின்
அலங்காரம் வேண்டுமடி பாங்கிமாரே. (ஐ)

ஒப்புறவு வேண்டுமடி பாங்கிமாரே யுள்ளம்
ஒத்திருக்க வேணுமடி பாங்கிமாரே. (ஒ)

ஓதாத பெண்டீர்கள் பாங்கிமாரே யுலகில்
உதவாப் பிணமயோ பாங்கிமாரே. (ஓ)

ஔவியம் பேசாதீர் பாங்கிமாரே அந்த
வறிவினைத்து மேகிவிடும் பாங்கிமாரே. (ஔ)

அஃகஞ் சுருக்காதீர் பாங்கிமாரே அந்த
ஔவை மொழி யடியோ பாங்கிமாரே. (ஃ)

கருமத்தின் காரியத்தால் பாங்கிமாரே இந்தக்
கடும் பிறவி வாய்த்ததடி பாங்கிமாரே. (க)

ஙகரம் வளைவதுபோல் பாங்கிமாரே, ஞாலம்
நம்மை வளைத்ததடி பாங்கிமாரே. (ங)

சங்கை தவிர் ஞானமடி பாங்கிமாரே தக்க
சதாமுத்தி நிலையமடி பாங்கிமாரே. (ச)

ஞயம்பட வுரைப்பதற்குப் பாங்கிமாரே ஞானம்
நற்கல்வி வேண்டுமடி பாங்கிமாரே. (ஞ)

இடம்பட விளங்குவண்டி பாங்கிமாரே யவன்
யவ்விடத்து முள்ளவண்டி பாங்கிமாரே. (ட)

இணக்கமறிந்தவண்டி பாங்கிமாரே யவன்
இல்லாவிடமுமில்லை பாங்கிமாரே. (ண)

தத்துவந் தாண்டினவன் பாங்கிமாரே தக்கன்
தலையறுத்த கள்ளனடி பாங்கிமாரே. (த)

நன்றி மறவாண்டி பாங்கிமாரே நம்மை
நாடோறுங் காப்பவண்டி பாங்கிமாரே. (ந)

பன்றிக்குப் பாலதனைப் பாங்கிமாரே பார்த்துப்
பாங்காய்க் கொடுத்தவண்டி பாங்கிமாரே. (ப)

மந்திரியாய்ப் பாண்டியற்குப் பாங்கிமாரே மற்றும்
மறவாமல் தந்தவண்டி பாங்கிமாரே. (ம)

இயலாப் பெருந்தவமும் பாங்கிமாரே இவன்
இப்பொழுதே தந்திடுவன் பாங்கிமாரே (ய)

இரவலருக் கெப்போதும் பாங்கிமாரே இனி
இல்லை யென்றுசொல்லாதீர் பாங்கிமாரே. (ர)

இலக்குவைக்குஞ் செய்கருமம் பாங்கிமாரே இந்த
இழிவகற்ற வேண்டு மடி பாங்கிமாரே. (ல)

வந்தவழி நாமறியோம் பாங்கிமாரே வையம்
வாழ்த்திடவே வாழ்வமடி பாங்கிமாரே (வ)

இழித்தலிரு வினையை யினிப் பாங்கிமாரே யெம்மான்
எப்போ தருளுவனோ பாங்கிமாரே (ழ)

இளமை தவிருமுனே பாங்மாரே இந்த
இனியதமிழ், மறிவோம் பாங்கிமாரே (ள)

இறந்தால் பிறப்பகலப் பாங்கிமாரே இங்கே
யினியதவஞ் செய்வமடி பாங்கிமாரே. (ற)

இனம் பெரியோர் கூட்டமதில் பாங்கிமாரே என்றும்
இறைவ னி நப்பனடி பாங்கிமாரே. (ன)

இணக்கமறிந்திணங்கு.

(ஸ்ரீமான் A. சந்தனஸ்வாமி, B.A.)

இம் மண்ணுலகின்கண் மனமொத்த தோழருடன் கூடி அளவளாவி மகிழ்வெய்வதைவிட மானிடர்க்கு வேறு இன்பம் யாதுமிலது. ஆயினும் முன்பின் யோசியாமலும் ஆய்ந்தோய்ந்து பாராமலும் கண் மூடித்தனமாய் ஒருவன் வேறொருவனை நேசனாகக் கொள்ளற்பாலது. சகல கலைகளையும் ஐயந்திரிபவறிந்த மேதாவிகளும் மூர்க்கரோடிணங்கினால் மூர்க்கரேயாவர். அவர் கற்ற கல்வியும் விழலுக்கிறைத்த நீரெனவாகும். குற்றமற்ற கலைகளனைத்தும் ஓதிய நற்குண நற்செய்கைகளையுடைய நல்லாருடைய நட்பு ஒருவனை நல்வழிப்படுத்தும். அதுவன்றி அவனுக்கு ஈசனருள் உய்க்கும். நற்கூர்ந்தவனானாலும் நல்லார் உறவினைப்பெற்றவனாயின் ஒருவன் செல்வத்திற் சிறந்த சீமானாவான். மதி நுட்பமற்றவனாயிருப்பினும் ஒருவன் மேலோரை அடையும் பாக்கிய முடையவனாயிருப்பின், அறிவிற் சிறந்த சிகாமணியாவான். நல்லோர் உற்றவிடத்து உதவி புரிவார்; நம்மைத் தக்கவழியிற் செல்லச் செய்வார்; பரமமோட்சானந்த பாக்கியத்தை நாமடையும்படி செய்வார்; பாபப்படுகுழியாகிய நரகத்தில்விழாதபடி நம்மைக் காத்து இரட்சிப்பார்; நல்லறிவு புகட்டுவார்; எந்நாளும் நமக்கு நன்மையே செய்வார்.

“நல்லிணக்க மல்லது அல்லற் படுத்தும்.” கெட்டவர் கூட்டத்தில் சேர்ந்த ஒருவனைக் கேடுகள் பல சூழும். இவ்வுலகில் மாத்திரமன்று, மறுஉலகிலும் துன்பம்வரும். கெட்டவர் சகவாசம் கொடிதினும் கொடிது. கெட்டவர்கள் நாகப் பாம்பை ஒத்தவர்கள். பாம்புக்குப் பால்வார்த்து வளர்ப்பதைப்போல் நாம் அவரைப்போற்றி ஊட்டினாலும், அசடர் நமக்குத்தீங்கே இழைப்பார்கள். கற்றறியார் செய்யும் கடுநட்பு தாம் கூடி உற்ற உழியும் தீமை நிகழ்வு உள்ளது. ஆதலால் கெட்டவர் சகவாசம் கொடியது. அவர்களுடன் கூடுவோர் நல்லவராயிருந்தாலும் விரைவில் துஷ்டராவர். பல கொடிய தொழில்களைச் செய்வர். கள், சாராயம் முதலிய லாகிரி வஸ்துக்களைப் பருகி மதியிழந்து, மான மிழந்து, நல்லோர் கூட்டுறவை வெறுத்து, தாய் தந்தையர் மனம் நோகச் செய்து, சீர்கெட்டு, சிறப்புக் குன்றி, நாடோடியாய் இருக்க இடமின்றி, குடிக்கக் கூழின்றிச் சுற்றித்திரிவர். பசி மிகுதியால் திருடி வயிர்வளர்க்க ஆரம்பிப்பர். விலைமாதர் வீட்டில் குடியிருப்பர். சகலவித ஈனத் தொழில்களைச் செய்வார். அந்தோ! கெட்டவர் வயப்பட்ட பாலனும் சீலனாவனோ? ஆதலால் தான் அருங்குழவிகளைப் பெற்றெடுத்த தாய் தந்தையோர் அதோடு தம் கடமை முடிந்ததென்று எண்ணாமல், அவர்களை நல்வழியில் நடத்தி, நற்புத்தி புகட்டி, நல்லோரோடிணங்கச் செய்து ‘இப்புதல்வனைப் பெற்ற மாதா பிதா உப்புயர்வற்றவர்’ என்று உலகமெலாம் புகழுமாறு தத்தம் பிள்ளைகளைக் கவனமுடன்வளர்க்க வேண்டும். ‘இளமையிற் கல்’ என்பது போல் இளவயதிலேயே அவர்களுக்குக் கல்வி கற்பித்து அவயதில் முந்தியிருக்கச் செய்யவேண்டும். முயற்சியுடையார் இகழ்ச்சியடையார் என்றவாறு அல்லும் பகலும் ஆழ்ந்த கவலையுடன் தாய் தந்தையர் தம் பிள்ளைகளின் முன்னேற்றத்திற்காக முயல்வாராயின் எல்லாம் வல்ல இறைவன் அவர்களையும் அவர்கள் பிள்ளைகளையும் ஆசீர்வதித்து, இம்மையிலும் மறுமையிலும் அவர்களுக்குப் பரமானந்த பாக்கியத்தைத் தந்தருள்வாரென்பது திண்ணம்.

கெட்டவர் கூட்டத்துச் சேர்ந்து மதிகெட்ட ஒருவனின் கதையை இங்கு சொல்வோம்.

முன்னர் ஜயசீலன் என்பானொருவன் தனவந்தர்களாகிய தன் தாய் தந்தையரை விட்டு, வெளி ஊர் சென்று சம்பாதிக்கலானான். அவனுக்கு மாதமொன்றுக்கு சம்பளம் நூறு ரூபாய். அதில் ஒரு காசு கூடப் பெற்றோர்க்கு அனுப்புவதில்லை. எல்லாவற்றையும் தானே செலவிட்டு வந்தான். இவன் அதிக நல்லவன். கடவுள் பக்தியுள்ளவன், தயாளசீலன், இரப்போர்க்கு இல்லையென்று சொல்லான். இவ்விதமாய்ச் சன்மார்க்கத்தில் இவன் குறைவின்றி ஜீவிப்பதைச் சில கொடியவர் கண்டு, இவனிடமுள்ள பணத்தை அபகரிக்கவும் இவனைக் கெடுக்கவும் எண்ணி, இவனிடம் வந்து நல்லவர்களைப்போல் நடித்து இவன் நட்பைக் கவர்ந்தனர். வெகு சீக்கிரத்தில் துற்போதனையாகிய கடும் விஷத்தை இவனுக்கு ஏற்றி விலைமாதரின் வீட்டிற்கு அழைத்துக்கொண்டு போயினர். அங்கே அவன் ஆடல் பாடல்களிலும் விலைமாதர் மையல்களிலும் உழன்று வருநாளில், ஒரு நாள் அவன் தனியாக ஒரு பெரிய பூஞ்சோலையில் உலாவவந்தான்.

அங்கே ஒரு மரத்தடியில் மிக்க ரூபலாவண்யமுள்ள யௌவன மாது ஒருவள் உட்கார்ந்திருக்கக்கண்டான். அவளைக்கண்டு மதிமயக்கங்கொண்ட ஜயசீலன் அவளை நோக்கி, “அழகிற் சிறந்த அணங்கே! நீ யார்? இங்கு தனித்திருக்கக் காரணம் யாது?” என்று வினவினான். அதற்கு அக்கற்புக்கரசி, “ஐய! நான் என் இங்குவந்தேன் என்று நீர் ஏன் கேட்கிறீர்?” என்று பதிலுரைத்தாள். ஜயசீலன் இதைக் கேட்டுத் திடுக்கிட்டானானாலும் தளராமனத்துடன் அவளையணுகி காதல்தீபற்றியெரியும் கண்களுடன் அவளைப்பார்த்து, “மதிவதன மாதர்க்கரசி! நீ என்னை மணம்புரியக் கடிதினில் வருவாய்” என்றான்.

அம்மொழிகளைக் கேட்ட கற்புக்கோரணிகலமென விளங்கும் மங்களவல்லி என்னும் அம்மாதர்க்கரசி “அறிவற்ற சிறுவ! நின் அறிவிருந்தவாறு மிகநன்று! நன்று!! நீகொண்ட எண்ணம் நிறைவேறக் கூடியதே! அழகிற் சிறந்த ஆண்சிங்கமாகிய நீ நல்லறிவுபடைத்தவனாயிருப்பாய் என்றெண்ணினேன். என் எண்ணத்திற்கு முற்றும் மாறுபடக் காண்கிறாய். உனக்கு எள்ளளவும் ஞானமில்லைபோலும். நீ நல்லவரது பிள்ளையாகக் காணப்படினும், உண்மையிலேயே நீ நாயினும் இழிந்தவனாக இருக்கின்றனையே! அந்தோ! பரிதாபம்! மூர்க்கருடன் இணங்கியதால் வந்துற்ற கேடு இதுவென எண்ணுகிறேன். இணக்கமறிந்திணங்கு என்னும் முதுமொழியை மறந்தனையே. நல்லாருடன்கொண்ட கேண்மை வளர்பிறைச் சந்திரனைப்போல் நாடோறும் நன்றாக வளர்ந்துகொண்டே வரும் என்றும், கெட்டவரது நட்பானது கேடுகள் பலவிளைத்து, ஒருவனைக்

கொடிய நரகத்திற்கு ஆளாக்குவதன்றி முடிவில் கெட்டழியும் என்பதையும் மறந்தனையோ? உனக்கென்ன பித்தம் பிடித்திருக்கிறதா ? உன்னைக் கெடுத்த கொடும் பாபிகள் யாரோ ? தெய்வம் அவர்களைச் சும்மா விடாது. இனிமேலாகிலும் நீ நல்லவருடன் இணங்கி நல்லவனுவாய். ஆ ! உன் எண்ணத்தின் அழகே அழகு. உன்னைப் போன்ற மதியீனர் எவ்வுலகிலும் இரார். பெண்களை இச்சித்து ஆடவர் அடைந்த கேடுகளை நீ என்றும் வாசித்ததில்லையா ? சீதையைத் தூக்கிச் சென்ற இராவணன் தன்னுடைய உறவின் முறையாருடன் அழிவுற்றதைப் பற்றி நீ கேள்விப்படவில்லையா ? கீசகன் திரௌபதியை விரும்பி மடிந்ததை நீ அறியாயா? பெண்களின் மேல் மோகங்கொண்டு எண்ணிறந்த ஆடவர் ஆழ்நரகில் வீழ்ந்து மட்டற்ற துன்பமுற்றதைப்பற்றி அறிந்திருந்தும், நீ அவர்களைப்போல் நடக்க நினைத்தனையே ! உன் மதியின்மையைப்பற்றி என்னென்று சொல்வேன்! உன் எண்ணம் இழிந்தது, ஆதலால் உன் மனத்தைத் திருத்திக்கொள். நல்லோரை அணுகி, அவரை நம்பி, அவர் உயர்ந்த ஒழுக்கங்களைப் பார்த்து நடந்து சன்மார்க்கனுய் இருப்பின், உனக்கு யாதினும் உயர்ந்த பதவி கிடைக்கும். சதாகாலமும் நித்தியானந்தப் பேரின்பப் பெருங்கடலில் மூழ்கி, எந்நாளும் எல்லாம் வல்ல சச்சிதானந்தக் கடவுளை வாழ்த்தி ஆராதித்து இருப்பாய். மாதரைக் கண்ணெடுத்தும் பாராதே ; மதிகெட்டு அலையாதே ! மனித உடம்பு நீரின் மேற் குமிழி. மங்கையர் உடம்பினழகு செல்வம் இளம்புல் இளவயது முதலியவைப்போல் தோன்றி உடனே அழியும் தன்மையுடையது. ஆதலால் பெண்ணை நம்பிப் பேயாகாதே. நன்னெறிக்குக் கேட்டைத் தேடாதே ! மாதர் நட்பை வேம்பென மதி. சான்றோர் உறவைப் பாலும் பழமுமாகக் கருது. கடவுளை நம்பி இரு. அவர் உன்னைக் கைவிடமாட்டார். நல்லாருடன் கூடு ; வேசியர்பால் உனக்குள்ள நட்பை விடு, உன் கெட்ட கூட்டாளிகளை அறவே மற ; பேரின்ப வீட்டைத்தேடு" என்று காமக்கடலில் மூழ்கிய ஞானக் கண்ணில்லா ஜயசீலனை நோக்கிப் பல நீதிகளைக் கற்பித்து அவ்விடத்தை விட்டகன்றாள்.

மங்களவல்லியின் பதிலைக் கேட்ட ஜயசீலன் வெட்கமும் துக்கமும் சுமந்த மனத்தினனுய் மனவாட்டத்தினுல் முகவாட்டமடைந்து அவ்விடத்தை விட்டகன்று தன் கெட்ட நண்பரைத் துறந்து பெற்றோர் வீட்டையடைந்து உடம்பின் இழிவையும், உயிரின் உயர்வையும், உலக இயல்பையும், அசடர் துர்க்குணத்தையும், அதனுல் தனக்குண்டான தீங்கையும், அவமானத்தையும் நினைத்து, என்று மழியாத பொருளாகிய அமலனுடைய திருவருளைப் பெற்று அவரை யடைந்து அழியா இன்பத்தில் இருப்பதற் குரிய நீதிகளை ஆராய்ந்து அவைகளின்படி நடக்கலானுன்.

[குறிப்பு :—' இணக்கமறிந்திணங்கு ' என்னும் இவ்வியாசம் முன்மாத சஞ்சிகையில் தோன்றியிருப்பினும் ஒரு விஷயத்தைப்பற்றி இருவர் எழுதப்புகுந்தால் அதிலேற்படும் தாமதமியங்களை கவனிக்கப்புகின் இருமனமும் ஒன்றுபடுகிறது என்பதை நிரூபிப்பதற்காக மறுபடியும் இம்மாத இதழிலும் வெளிவந்துளது.—மானேஜர்.]

நூர்ஜஹான் அல்லது பரதகண்டத்துச் சௌந்தரியக் கொடி.

(ஸ்ரீமதி பாகீரதி அம்மாள்.)

(398-வது பக்கத் தொடர்ச்சி)

அத்தியாயம் முப்பத்தைந்து.

ஏச்வரன் ஒருவனே. ஆனுல் துராக்கிரகத்தால் தமது தர்மமே மேலென நினைத்துப் பிறரது தர்மங்களைத் துச்சமாக மதித்து ஒருவரோடொருவர் சண்டையிட்டுச் சாந்தத்தைப் பங்கஞ் செய்துவந்த எண்ணிறந்த ஜனங்களுக்குச் சரியான புத்தி புகட்ட எந்த மகா புருஷன் ஓர் புதிய தர்மத்தை ஸ்தாபித்தனனே அவன் இந்த ஜகத்தோருக்கு உபதேசஞ் செய்து சிக்கந்தரா நந்தவனத்தில் இப்பொழுதும் வசித்து வருகின்றனன்.

அக்பரது மரணச் செய்தி இந்துஸ்தானமுழுவதும் அதிசீக்கிரம்பரவியது. வயல்களில் உழுது கொண்டிருந்த குடியானவர்கள் தமது வேலைகளை நிறுத்தி வீடுகளுக்குத் திரும்பினுர்கள். வியாபாரிகள் கடைகளை மூடினுர்கள். எழெட்டு நாட்களுக்கு ஜனங்கள் யாவரும் தம்தம் உத்தியோகத்தைக் கவனியாது பற்பல விடங்களிற் கும்பல் கூடிப் பாதுஷாவின் குணதிசயங்களைப் பற்றிப் புகழ்ந்தார்கள். கிராமங்களிலிருந்த வாலிபர்கள் யாவரும் தமது பிதாவே இறந்ததாக நினைத்து மரங்களின்கீழ் ஒருமித்து வீற்றிருந்து கண்களில் நீர்வடிய தில்லீச்வரனது குணத்தைக் குறித்துப் பேசினுர்கள்.

முதலாவது மனிதன்:—தமது குழந்தைகளைப் போலவே பிரஜைகளெல்லோரையும் நமது பாதுஷா பாவித்துவந்ததால் இந்த இராஜ்யத்தில் நாம் சாந்தம் எனும் சுகத்தை யடைந்திருந்தோம். ஆகா ! இவ்வளவு புண்ணியசீலனுன தர்மாத்மாவை நாம் மறுபடியும் அடையப்போகின்றேமா ?

இரண்டாவது மனிதன் :—அக்பர் பாதுஷாவின் ஔதார்யமென்ன ! தூரதிருஷ்டி என்ன ! நன்றுய் விளைந்தகாலத்தில் தானியங்களைச் சேகரித்து வைத்து, மூன்று வருடங்களுக்குமுன் வந்த பஞ்சத்தில் அவற்றை எல்லோருக்குங் கொடுத்துக் காப்பாற்றினுர். பஞ்சமிருந்ததென யாராவது அறிய இடமிருந்ததா ?

மூன்றுவது மனிதன் :—ராஜாவென்றுல் இவரன்றே ராஜா ! பிரஜைகளைப் புத்திரர்களாகப் பாவிப்பதே ராஜாக்களது முக்கிய கருமம். இதை நமது அக்பர் பாதுஷாவே நிறைவேற்றினுர். இன்று இந்த இந்துஸ்தான முழுதும் ஏழைகளது குடிசைகள்முதல் தனவந்தரது மாளிகைவரை சிறியோர் பெரியோர், ஸ்திரீ புருஷர்கள் யாவரும் பாதுஷாவைக்குறித்தே விசனமுற்று உட்கார்ந்திருக்கின்றனர்.

நான்காவது மனிதன்:—அக்பர் பாதுஷாவை அவதாரமெனச் சொல்லவேண்டும். கடவுள் எவ்வண்ணம் எல்லோரையும் ஒரே சமமாகச் சம்ரட்சணை செய்கின்றுரோ அவ்வண்ணமே அக்பர் இந்து, மகமதியர் முதலிய பல வருணத்தோரையும் தர்மத்தோரையும் அன்புடன் ஆதரித்தனர். இந்துஸ்தானத்தில் இதுவரை இப்படிப்பட்ட சாந்தி சுகங் கிடைத்ததில்லை.

ஐந்தாவது மனிதன்:—இனிமேல் அஃதெல்லாவற்றையும் மறந்துவிடும். இளவரசன் இப்பொழுது பாதுஷாவாயிருக்கின்றனன் என்பதை நினையும் (எனப் பகர்ந்துகொண்டே நாலாபக்கங்களிலும் நோக்கினன்).

ஒரு வியாபாரி:—போதும், போதும், சுவர்களுக்கும் காதிருப்பதாகச் சொல்லுகிறார்கள். எவனாவது ஒரு ஒற்றன் காதில் விழும்பட்சத்தில் உம்மைப் பின்கட்டாய்க் கட்டிக்கொண்டுபோய் விடுவான். விண்ணுலகடைந்த பாதுஷாவை ஸ்துதிசெய்தும் அவரது புத்திரனை நிந்தித்தும் பலன் யாது? அக்பர் செய்துள்ள நன்மைகளைத் தற்சமயம் புகழ்வதிற் பலன் யாது? நமது கஷ்டகாலமெனக் காலத்தைக் கழிக்கவேண்டியதுதான். ஈச்வரனுக்கன்றோ நம்மைக் காக்கும் பாரம்!

ஓர் சிறுவன்:—ஈச்வரன்மேல் என்ன தப்பிதம்? நீங்கள் எல்லோருஞ் சேர்ந்தன்றோ அரசனை ஈச்வரனாகச் செய்கின்றீர். நாயின் வாலைப் பத்து வருடங்கள் கட்டி வைத்திருந்தாலும், மறுபடியும் அவிழ்த்துவிட்ட மாத்திரத்தில் பழையபடி வளைந்து மேல் நோக்குமே.

இச்சிறுவனது வார்த்தைகளைக்கேட்டு அவ்வியாபாரி நடுக்கமுற்று "போதும், போதும், உனது பாண்டித்தியம். எந்த சமயத்தில் என்ன சொல்லவேண்டுமென்றுகூடத் தெரியவில்லை. நாக்கில் நரம்பில்லாவிடில் இப்படியா பிதற்றுவது? அரசன் என்னவானாலும் அரசனே. விஷ்ணுவின் அவதாரமன்றோ? அவர் என்ன செய்தபோதிலும் பிரஜைகள் பேசாது சகித்திருக்கவேண்டும். நாம் போன ஜன்மத்திற் செய்துள்ள கருமப்படி எவ்வளவு சுகங் கிடைக்குமோ அவ்வளவுதான் இந்த ஜன்மத்திற் கிட்டும். வாருங்கள் போவோம், போதும் இவ்வாதம். நமது துர்ப்பாக்கியத்தால் பாதுஷா மரணமடையப் பிறரைத் தூஷித்துப் பலன் யாது?" என்றனன்.

இவ்விதம் பகர்ந்தபின் அவ்வியாபாரி திடீரென எழுந்திருந்து தன் குமாரனை நோக்கி, "அடே! இங்கே வீண் வம்பு பேசி உட்கார்ந்திருப்பதில் யாதொரு அர்த்தமுமில்லை. சீக்கிரம் வீட்டிற்குப் போய் நமது ஆஸ்திபாஸ்திகளைப் பத்திரப்படுத்தி வைக்கலாம் வா. இனிமேல் கிழிந்த வஸ்திரங்களை யணிந்து பிச்சைக்காரனைப்போற் பாசாங்கு செய்யவேண்டும். தனவந்தனைப்போலிருந்தால் சீக்கிரம் வினை சம்பவிக்கும் என்பதிற் சந்தேகமில்லை" என்றனன்.

அக்பரது மரணத்திற்குப்பின் இவ்வண்ணம் ஒருபுறம் சம்வாதம் நடந்துகொண்டிருக்க மற்றொருபுறம் இளவரசன் சலீம் மிக்க தடபுடலாய் தில்லி சிம்மாதனத்தில் உட்கார ஏற்பாடுகளைச் செய்தனன். தன் தந்தையின் உத்திரக்கிரியைகள் பூர்த்தியாவதற்குள் ஜோசியர்களால் ஏற்படுத்தப்பட்ட ஓர் சுபமுகூர்த்தத்தில் மொகலாயரது மயூராசனத்தில் வீற்றனன். ஆயிரக்கணக்கான பீரங்கி குண்டுகளின் சத்தத்தால் ஆக்ரா நகரமுழுதும் அதிர்ச்சியுண்டாயிற்று. சிம்மாதனமேறியபிறகு சில வருடங்கள் உத்தமமாய் இராஜ்ய பரிபாலனஞ் செய்து வந்ததைப்பற்றிக் கீழ்க்கண்ட ஜாகீர் நாமாவால் தெரியவருகிறது. "பாதுஷாவின் ராஜ்யாபிஷேகத்தின் ஞாபகார்த்தமாக தேசத்தில் ஆயிரக்கணக்கான கிணறுகள் வெட்டப்படும்; தேச முழுவதிலும் இருபதினாயிரம் சத்திரங்கள் கட்டப்படும்; ஆறுமாதம்வரை எதற்கும் வரியில்லை; ஏழைகளுக்கு ஔஷதங்கள் கொடுத்துதவும்பொருட்டு சர்க்காரால் எண்ணிறந்த வைத்தியசாலைகள் ஏற்படுத்தப்படும்; குடிகளுக்குள் வாதங்கள் ஏற்படும் பட்சத்தில் பாதுஷாவிடம் பிராது செய்தால் சரியான நியாயங் கிடைக்கும்; அரண்மனையின் கதவருகிற்

காணும் கயிற்றை இழுத்தால் பாதுஷாவின் மஹாலிற் கட்டப்பட்டிருக்கும் சுவர்ண மணியின் நாதத்தைக் கேட்டு பாதுஷா தர்பாருக்கு வந்து பிராதைக் கேட்டு அவர்களுக்குச் சரியான நியாயத்தைக் கொடுப்பார்; பாதுஷாவின் இராஜ்ய முழுவதிலும் எப்பொழுதும் சூரியன் பிரகாசிக்கட்டும்; சர்வ ஜகத்திலும் அவரது கீர்த்தி பரவட்டும் என ஈச்வரனைப் பிரார்த்திக்கின்றோம்".

மகுடாபிஷேக தினத்தில் இந்த ஜாகீர்நாமா பற்பல இடங்களில் வாசிக்கப்பட்டது. பிறகு பாதுஷா யானைமேலேறி ஊர்கோலம் வந்தனன். பத்துப் பதினைந்து நாட்களுக்கு ஆக்ராவில் பெருத்த உற்சவமாயிருந்தது.

(தொடரும்.)

பெண்கள் கல்வி.

(மிஸ் K. கமலாம்பிகை)

உலகின்கண்ணே வாழும் மனிதர்களாலே தேடற்பாலனவாகிய பொருள்கள் கல்விப்பொருள், செல்வப்பொருள் என இரண்டாம். கல்வியானது கற்றற்குரிய நூல்களைக் கற்றல். அது அறியாமையாகிய இருளை நீக்கும்.

கல்வி இம்மை, மறுமை இரண்டிற்கும் துணையாய் நிற்கும். கல்வியைச் சிறிது கற்றமாத்திரத்தில் விடாது மேன்மேலும் கற்றல் வேண்டும். மணற்கேணியைத் தோண்டுந்தோறும் ஊற்றுநீர் சுரந்து பெருகிக்கொண்டே வருதல் போல, கல்வியைக் கற்குந்தோறும் அறிவு வளர்ந்துகொண்டே வரும். நீர் ஆம்பல் அந்த நீரினுடைய உயரத்தினளவாகவே உண்டாகும். அதுபோல ஒருவருக்கு நுட்பமாகிய அறிவானது அவர் கற்ற நூலினளவாகவே உண்டாகும். "கைப்பொருள் தன்னில் மெய்ப்பொருள் கல்வி" என ஆன்றோர் கூறினர். கல்வி, வறுமை முதலிய துன்பங்கள் வந்தவிடத்தும் உதவியாய் நிற்கும். கல்வியே அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நான்கு உறுதிப்பொருளையும் அடைவதற்குச் சிறந்த துணையாகும். ஆதலால் கல்வியே எல்லாவற்றிற்கும் காரணமாக விருக்கின்றது. கல்வியறிவு ஆடவர், பெண்பாலார் என்னும் இருபாலார்க்கும் அவசியம் வேண்டும்.

பாரதகண்டத்திலே பண்டைக்காலத்திருந்த பெண்மணிகள் கல்வியினாலும், தெய்வபக்தியினாலும், தேசபக்தியினாலும், கற்பினாலும், வீரத்தினாலும், பலவேறு பிற நலங்களாலும் தலைசிறந்து விளங்கினார்களென்பது புராதன நூலாராய்ச்சி யுடையோர்கள் துணிபாகும். அக்காலத்தில் இத்தேசம் எவ்வாறு மேனிலை யடைந்திருந்தது! கன்ம வசத்தாலோ அன்றி வேறெவ்வகையாலோ தற்காலம் அந்நிலை குன்றி உலக்கை தேய்ந்து உளிப்பிடி ஆயது போலாகிவிட்டது.

பெரிய புராணத்திற் காணப்படும் காரைக்காலம்மையார், மங்கையர்க்கரசியார், திலகவதியார் முதலிய பெண்ணரசிகள் கல்வியறிவொழுக்கங்களிற் சிறந்து விளங்கிச் சிவபதமடைந்தனர். ஔவையார், வெள்ளிவீதியார் முதலியோர் எவ்வாறு கல்வியறிவு நிரம்பப் பெற்றிருந்தனர்! ஔவையார் அருளிச்செய்த ஆத்திசூடி, கொன்றைவேந்தன் முதலிய நூல்கள் எத்துணை சிறப்புடையன! அவர் சங்கங்களிற் சென்று அநேக புலவர்களுடன் வாதாடினாரென அவர் சரித்திர வாயிலாக அறிகின்றோம். அவர்கள் அக்காலத்து ஆடவர்களுடன் கல்வி யறிவில் சமத்துவமுடையவர்களாய் விளங்கினர். அக்காலப் பெண்மணிகளின் கல்

வித்திறமை, கற்பு மேம்பாடு முதலியவற்றை அவர்கள் சரித்திரங்கள் வாயிலாக அறியலாம்.

பெண்பாலார் நீதிசாஸ்திரம், சங்கீத சாஸ்திரம், வைத்திய சாஸ்திரம், பாகசாஸ்திரம் முதலிய பலவற்றையும் நன்கு அறிந்திருத்தல் வேண்டும். அவர்கள் தாய்மொழியிலும் நன்றாகக் கல்வி பயிற்றப்படல் வேண்டும். தாய்மொழியை நன்றாகக் கற்றுக்கொண்டே ஏனைய பிற மொழிகளைக் கற்றல் வேண்டும். அப்படியன்றிப் பெற்றோர் வறுமையினால் வருந்த மக்கள் பிறதேசங்களிற் சென்று தானஞ் செய்வதுபோல் தாய் மொழியைக் கல்லாது பிறமொழியைக் கற்றல் முறையாகாது.

ஒவ்வொரு தேச ஏற்றத் தாழ்வுகட்கும் அவ்வத் தேசப் பெண்பாலரே காரணராகின்றனர். எந்த தேசத்துப் பெண்கள் கல்வியறிவாற் சிறந்து விளங்குகிறார்களோ அந்த தேசம் முன்னேற்றமடைவதற் கையமில்லை. தாயானவள் கல்வியறிவுடையவளா யிருந்தாற்றான் பிள்ளைகளை நன்னிலைக்குக் கொண்டுவர முடியும். உதாரணமாக, கல்வியறிவுடைய பெண்மணிகளிருக்கும் குடும்பங்களையும் கல்வியறிவில்லாத பெண்களிருக்கும் குடும்பங்களையும் பார்க்கலாம். கல்வியறிவுடைய தாய் எவ்வகையான கஷ்டமடைந்தாலும் தன் பிள்ளைகளைக் கல்வியறிவால் மேம்பட்டவர்களாக்கவே விரும்புவாள். கல்வியறிவில்லாத தாய் கல்வியின் பெருமையை அறியாதவளாதலால் அதனை அவர்களுக்குப் புகட்ட விரும்பாள். குழந்தைகள் இளமையில் தாய்மாருடைய பழக்கங்களையே பழகுகின்றனர். "தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்" என்றவாறு ஒருவர் பெரும்பான்மையும் இளமையிற் பழகிய பழக்கம் நன்மையாயிருந்தாலுமென், தீமையாயிருந்தாலுமென், அதுவே மரண பரியந்தம் அவரைத் தொடரும். பெண்கள் கல்வியைக் கவனியாது தேசமுன்னேற்ற மடையவேண்டுமென்னும் எண்ணம் சுவரை இடியவிட்டுச் சித்திரம் வரையத் தீர்மானித்தல்போலும்.

பெண்கள் கல்வி கற்பது புது முறையன்று, பழமையான வழக்கமே. இது இவ்வாறிருக்கவும் தற்காலத்தில் சிலர் பெண்களுக்குக் கல்வியறிவு அதிகம் வேண்டியதில்லையென்றும், கற்பது புது முறையென்றும் பலவகையான அபிப்பிராயமுடையவர்களா யிருக்கின்றனர். பெண்களுக்குக் கல்வி யவசியமில்லையென்று சொல்பவர் உணவும் அவசியமில்லையென்று சொல்லலாமே! தேக சுகத்திற்குச் சூரிய வெளிச்சமும் சுத்தக்காற்றும் சுத்தாகாரமும் எவ்வாறு அவசியமோ அதுபோல அறிவு வளர்ச்சிக்குக் கல்வி அவசியம் வேண்டும்.

உலகத்திலுள்ள பலவகையான ஜீவராசிகளுள்ளும் மனிதருக்கு மாத்திரம் பகுத்தறிவுண்டு. பல பிறவிகள்தோறும் பிறந்திறந்துழன்று, பின்பு முன்செய்த நல்வினை வந்து பொருந்த, பரமபதியாகிய சிவபெருமானை அறிந்து வழிபட்டு முத்தி யின்பம் பெற்றுய்தற்குக் கருவியானதும், எழுவகைப் பிறப்பினுள்ளும் அருமையுடையதுமாகிய மக்கட் பிறவியை யெடுப்பார்கள். அப்படி அரிதில் கிடைத்த மக்கட் பிறவியால் கல்வியறிவில்லாது பயனடைதல் முடியாது. கல்வி கற்றவரையும் கல்லாதவரையும் ஒப்ப நோக்குமிடத்து கல்வியறிவுடையவர் மனிதராகவும், கல்வியறிவில்லாதவர் விலங்குகளுக்குச் சமமாகவும் கருதப்படுவாரெனில், கல்வியறிவில்லாத மகளிர் ஆடவருடன் சமத்துவமாக இல்லற தருமத்தைச் செவ்வனே நடத்துவதெப்படி? சில விடங்களில் பெற்றோர் தம் பிள்ளைகளில் புத்திரருக்கே கல்விப்பொருள் அவசியம் வேண்டுமென்றும், புத்திரிகட்குச் செல்வப்

பொருள் மாத்திரம் அவசியம் வேண்டுமென்றும் கருதி பெண்மணிகளைக் கல்வி கற்க விடுகின்றார்களில்லை. கல்வி கற்பது பொருளீட்டுவதற்கு மாத்திரமன்று; அறிவின்பொருட்டே. ஆடவர்கள் பொருளீட்டினாலும் பொருளைத் தக்கவாறு பேணுவதற்குப் பெண்களுக்குக் கல்வியறிவு அவசியம் வேண்டுமன்றோ?

கல்வியறிவுடைய பெண்கள் தங்கள் கடமைகளை நன்றாய் நிறைவேற்றுவர். கல்வியறிவில்லாத பெண்கள் கடமைகளை நன்றாய் நிறைவேற்றமாட்டார். அவர்கள் தம்மை யறியார்; தங் கடமைகளை யறியார்; அவற்றை நிறைவேற்றும் வழியறியார்; அவற்றை நிறைவேற்றாது விடுவதனால் வரும் கஷ்டநஷ்டங்களையும் அறியார்; அவர்கள் ஒருவாறு தங் கடமைகளை யறிந்தபோதிலும், வறியவர் தங் கடமைகளை நிறைவேற்றக் கஷ்டமடைவதுபோலவும், இருள் நிறைந்த வழியே விளக்கின்றிச் செல்பவர் இடருறுவதுபோலவும் நிறைவேற்றக் கஷ்டப்படுவர்.

பெண்மணிகளுக்குக் கல்வி யறிவிருந்தாற்றான் அவர்கள் புராதனகாலத்திருந்த மாதரசிகளின் கல்வித் திறமை, கற்பு மேம்பாடு முதலியவற்றைச் சரித்திரங்கள் வாயிலாக வாசித்தறிந்து அதன்வழி யொழுகுவர். கற்புடைய மடவாராலாகாத காரியம் ஒன்றுண்டோ? சாவித்திரி தன் கற்பு மேம்பாட்டினாலேயே இயம தருமராசனுடன் வாதாடித் தன் கொழுணன் உயிர் மீட்டார்.

"மனைமாட்சி யில்லாள்க ணில்லாயின் வாழ்க்கை
யெனைமாட்சித் தாயினு மில்"

என்ற தெய்வப்புலமைத் திருவள்ளுவ நாயனார் அருள் வாக்கின்படி இல்லறத்திற்குத் தகுந்த நற்குண நற்செய்கை மனையவளிடத் தில்லாதாயின் அவ்வில்வாழ்க்கை எவ்வளவு சிறப்புடையதாயினும் பயனில்லையாகும். பெண்பாலார் மந்திரி புத்தி யுடையவர்களா யிருக்க வேண்டுமென்று நூல்களிற் சொல்லியிருக்கின்றது. கல்வியறிவில்லாத பெண்கள் எவ்வாறு மந்திரிபுத்தி யுடையவர்களா யிருப்பர்? அவர்கள் வேண்டிய சமயங்களில் தக்க புத்திமதிகளைக் கூறுவதெப்படி?

கல்வியறிவில்லாதவர்களது மனதில் அறியாமை குடிகொண்டிருக்கும். ஆனால் கற்றவர்கள் மனமோ பரிசுத்தமானதாயும் மேலான எண்ணங்களுக்கு உறைவிடமாயுமிருக்கும். அவர்கள் சத்திய வசனத்தையே விரும்புவர். "கற்றாரைக் கற்றாரே காமுறுவர்" என்றவாறு கற்றறிந்தவர்களைக் கற்றவரே விரும்புவர். ஏனையோர் விரும்பார். கல்வியறிவில்லாத பெண்கள் எவ்வளவு அந்தஸ்துடையவராயினும் நன்கு மதிக்கப்படமாட்டார். இரண்டு கண்களும் ஒரு பொருளைப் பார்ப்பதுபோலவும் ஊசியும் நூலும் ஒருவழி செல்வதுபோலவும் இல்லற தருமத்தை இருவரும் ஒற்றுமையாக நடத்த வேண்டியிருப்ப ஒருவர் கல்வியறிவுடையவராகவும் ஒருவர் கல்வியறிவில்லாதவராயுமிருப்பின் ஒற்றுமையாக நடத்துவதெப்படி?

இங்கே குறிக்கும் கல்வியானது பட்டதாரிகளாய் மாத்திரம் வருவதுமன்று. பாடசாலைகளில் மாத்திரம் கற்பதுமன்று. நீதி நூற்களைக் கற்று அதன்வழி யொழுகுவதேயாம். பெண்மணிகள் எவ்வகையான சகல சிறப்புக்களுடனிருந்தாலும் கல்வியறிவில்லாதிருப்பின் முருக்கம் பூவுக்குச் சமமாவார். அவர்களுக்குக் கல்வியறிவே சிறந்த பூஷணமாகும். பெண்கள் கல்வி அவசியம் என்று எழுதுவதனாலும் பேசுவதனாலும் மாத்திரம் பயனில்லை. இருள் நிறைந்த அறையில் அகப்பட்டு வழிகெட்டுத் தடுமாறுகின்றவர்க்கு ஓர் ஒளிக்கிர

ணம் சுகத்தைக் கொடுப்பதுபோல அறியாமையாகிய இருளில் அகப்பட்டு முன்னேற்றமடைய வழியறியாது தடுமாறுகின்றவர்களுக்குக் கல்வியறிவு சுகத்தைக் கொடுக்கும். பெண்மணிகளின் பரிதாப நிலையைக் குறித்து விடா முயற்சியுடனும் ஒற்றுமையுடனும் பிரயாசைப் படவேண்டும்.

பெண்கள் கல்வி தழைத்தோங்கி முன்னேற்றமடைய எல்லாம் வல்ல இறைவன் திருவருள் புரிவாராக!

இன அபிமானம்.

(ஸ்ரீமான் M. M. N. அய்யர்.)

முன்னொரு காலத்தில் பாடலிபுர மென்னும் நகரத்தில் விக்கிரகேசரி என்று ஒரு அரசனிருந்தான். அவனிடம் சகல ஐசுவரியங்களுடன் சகல நற்குணங்களும் குடிகொண்டிருந்தன. அவனிடம் சூடாமணி யென்றொரு கிளி இருந்தது. அது சகல சாஸ்திரங்களையும் அறிந்ததாயும் சாபத்தினால் பூமியிற் பிறந்ததாயும் இருந்தது. அவ்வரசனுக்கு சசி என்றொரு புதல்வனிருந்தான். அவன் அக்கினியின் உபதேசத்தினால் மகத தேசத்தரசன் புதல்வியான சந்திரப்பிரபை என்பவளை மணந்து கொண்டான். அவளிடமும் அத்தகைய ஞானம் பொருந்திய ஸோமிகை என்றொரு பெண் கிளி இருந்தது. அப்பால் அவ்வாண் பெண் ஆகிய இரு கிளிகளும் ஒரே கூட்டில் வசித்து வந்தன. ஒரு சமயம் சூடாமணி யென்னும் கிளி ஸோமிகையைப் பார்த்து, "காதலீ! நீ எப்பொழுதும் என்னை விட்டுப் பிரியக்கூடாது; நான் உன்னிடம் மிகவும் காதல் கொண்டிருக்கிறேன்" என்றது. பெண் கிளி அதைக் கேட்டு, 'நான் புருஷன் சேர்க்கையை விரும்பவில்லை, ஏனெனில் புருஷர்கள் தீயோர்களாயும் நன்றி மறந்தவர்களாயும் இருக்கின்றனர்!' என்று சொல்லிற்று. பின்பு சூடாமணி, 'புருஷர்கள் துஷ்டர்களன்று; பெண்களே துஷ்டர்கள்; கொடிய மனமுடையவர்கள்' என்று சொன்னது. இவ்வாறு இவ்விரு பறவைகளுக்கும் விவாதம் மிகுந்தது. பின்பு அப்பறவைகள் ஒவ்வொன்றும் ஜயித்தவர் தோற்றவருக்கு அடிமைப் படவேண்டுமென்று தீர்மானித்துக்கொண்டு, தங்கள் விவாதத்தைத் தீர்த்துக் கொள்வதற்காக ராஜகுமாரனிடஞ் சென்றன. ராஜ குமாரன் அவ்விவாதத்தைக் கேட்டு, பெண் கிளியைப் பார்த்து, 'புருஷர்கள் நன்றி மறந்தவர்கள் என்பதை நீ நிரூபணஞ் செய்' என்று கட்டளையிட்டான். உடனே ஸோமிகை தன் கொள்கையை ஸ்தாபிப்பதற்காக ஓர் சரிதையைச் சொல்லத் தொடங்கிற்று.

காமந்தகி என்றொரு நகரமிருந்தது. அதில் அர்த்ததத்தன் என்றொரு வியாபாரி இருந்தான். அவன் பெருஞ் செல்வம் படைத்தவன். அவனுக்கு தனதத்தன் என்றொரு புதல்வன் உண்டாயினன். அவனுக்குப் பதினைந்து வயது நிறைந்ததும் அவனது தந்தை விண்ணுலகடைந்தனன். பிறகு அவன் நாடோடியாய்த் திரியும் வைதாரிகளுடன் சேர்ந்து சூதாடுவதும் கள்ளுண்பதுமாகக் காலங் கழித்து வந்தான். தீயோர் பலரும் அவனைத் தீயொழுக்கத்தில் ஒழுகச் செய்தனர். துன்பமென்னும் மரத்திற்குத் தீயோர் சேர்க்கை வேரல்லவா? சொற்பகாலத்திற்குள் அவன் பொருள் முழுவதையும் இழந்து வறுமையால் வருந்தினான். பின்பு தன் தேசத்தில் இருப்பதற்கு வெட்கி, தன் தேசத்தை விட்டு தேசாந்திரத்திற்குச் சென்றான். இவ்வாறு சென்று

சந்தனபுரம் என்ற நகரத்தை அடைந்தான். போஜனம் செய்வதற்காக ஒரு வியாபாரியின் வீட்டிற்குள் நுழைந்தான். அவ்வியாபாரி, அவன் வந்ததும் நல்வரவு கூறி, குலகோத்திரம் விசாரித்து, அவன் நற்குலத்தினுதித்தவனென்றும் தெய்வாதீனமாய் வந்தவனென்றும் நினைத்து, தன் பெண்ணான ரத்தினவதியைப் பொருள்களுடன் அவனுக்கு விவாகஞ் செய்து கொடுத்தான். பின்பு தனதத்தன் தனது மாமன் வீட்டிலேயே சுகமாக வசித்து வந்தான். இவ்வாறு நாட்கள் சில சென்றதும், வறுமையை மறந்தவனான தனதத்தன் மீண்டும் தன் தேசஞ் செல்ல விரும்பினான். பிறகு மூர்க்கனாகிய அவன் தன் மாமனிடம் விடை பெற்றுக்கொண்டு, சர்வாபரணங்களால் அலங்கரிக்கப்பட்ட தன் மனைவியை ஒரு கிழவியுடன் அழைத்துக்கொண்டு தன் தேசத்திற்குக் கிளம்பினான். அவன் இவ்வாறே ஓர் அரண்யத்தை அடைந்து, அங்கு கள்ளர் பயமுண்டென்று பயமுறுத்தித் தன் மனைவியின் ஆபரணங்கள் யாவற்றையும் வாங்கிக் கொண்டான். சூது முதலிய தீயொழுக்கத்தில் பற்றுடையவர்களின் மனம் கத்தியினும் குரூரமானதன்றோ? அப்பாவி, நற்குணமமைந்த தன் மனைவியையும் கிழவியையும் பொருளிற்காகக் கொல்லத் தீர்மானித்து, ஒரு பெருங் குழியில் தள்ளி விட்டு, மாயமாய் மறைந்து விட்டான். அத்தீயோன் சென்றதும் அக்கிழவி அக்குழியில் விழுந்து இறந்து விட்டாள். ரத்தினவதியோ எங்கும் காயம்பட்டு இரத்தம் பெருக, ஓர் கொடியைப் பிடித்துக்கொண்டு மெதுவாய்க் குழியினின்றும் வெளிக் கிளம்பி, கதறிக்கொண்டே தான் வந்தவழியே தன் தந்தையின் வீட்டை யடைந்தாள். 'என் இவ்வாறு அலங்கோலத்துடன் திரும்பி வந்து விட்டனை?' என்று பெற்றோர் வினவ, ஸாத்வியான அப்பெண், 'வழியில் திருடர்கள் எங்களை மடக்கிக் கொண்டனர்; அவர்கள் என் கணவனையும் எங்கேயோ கொண்டு போய் விட்டனர். கிழவி ஓர் குழியில் விழுந்து இறந்து விட்டாள், நான் தெய்வாதீனமாகப் பிழைத்து வந்தேன், பாட்டைசாரி ஒருவன் கருணைகூர்ந்து என்னைக் குழியினின்று கரையேற்றினான்'! என்று சொன்னாள். பெற்றோர் இதனைக் கேட்டு மிகவும் வருந்தி அவளைத் தேற்றினர்.

அப்பால் தனதத்தன் தான் கொள்ளையடித்த பொருள் முழுவதையும் சூது முதலியவற்றில் செலவு செய்துவிட்டு, 'நான் மீண்டும் மாமனார் வீடு சென்று மீண்டும் பொருள் சம்பாதிக்கலாம்' என்றெண்ணி மாமனார் வீடு வந்து சேர்ந்தான். அவன் தூரத்தில் வரும்பொழுதே அவன் மனைவி பார்த்தாள், உடனே அவள் அப்பாவியின் பாதங்களில் நமஸ்கரித்து, தன் பெற்றோரிடம் தான் மறைத்துக் கூறிய விஷயமனைத்தையும் தெரிவித்தாள். கணவன் துஷ்டனாயிருந்தாலும் பதிவிரதைகளின் மனம் மாறாதல்லவா? பிறகு அவன் பயமற்று, மாமனார் வீடு சென்று, மாமனாரை நமஸ்கரித்தான். மாப்பிள்ளையைக் கண்டதும் மாமனார் மிகவும் மகிழ்ந்தார். தெய்வாதீனமாகத் தன் மருமகன் கள்வர்களிடமிருந்து தப்பி வந்ததற்காக விருந்து செய்து கொண்டாடினார். பிறகு அந்த தனதத்தன் மாமனார் வீட்டில் தன் மனைவியுடன் சுகமாய் வசித்து வந்தான்.

ஒருநாள் அப்பாவி இரவில் செய்த காரியத்தைச் சொல்லவும் நாகூசுகின்றது. அஃதென்னவென்றால், தன் மனைவி மெய்மறந்து தூங்கும்பொழுது அவன் அவளைக் கொன்று, அவளது ஆபரணங்களையெல்லாம் எடுத்துக் கொண்டு, ஒருவர் கண்ணிலும் படாமல் தன் தேசத்திற்கு ஓடிவிட்டான். பிறகு அவளது பெற்றோர் தங்கள் அறியாமைக்கு மனநொந்து வருந்தினர். இத்தகைய புருஷர்கள்

நன்றி மறந்த பாபிகளே யாவர்' என்று பெண் கூறி முடித்தது. பிறகு ராஜகுமாரன் புன்னகை புரிந்து சூடாமணியைப் பார்த்து, 'நீ இப்பொழுது உன்னபிப்பிராயத்தை நிரூபணஞ் செய்!' என்று சொன்னான். உடனே ஆண் கிளி, 'மன்னவ! ஸ்திரீகள் விஷமமான பிடிவாத முள்ளவர்கள்; கெட்ட சரித்திர முடையவர்கள்; குரூரமான மனமுடையவர்கள். இதற்குப் பின்வரும் சரிதை அத்தாட்சி யாகும் என்று சொல்லத் தொடங்கிற்று.

ஹர்ஷவதி என்னும் நகரத்தில் தர்மதத்தன் என்று ஒரு வியாபாரி இருந்தான். அவன் அநேக கோடிப் பொருள்களுக்குத் தலைவனாயிருந்தான். அவனுக்கு வசுதத்தை யென்றொரு பெண்ணிருந்தாள். அவள் சர்வாங்க சுந்தரியா யிருந்தாள். அவள் தந்தைக்கு உயிரினும் பன்மடங்கு பிரியமாயிருந்தாள். அவளது பெற்றோர் அவளுக்குத்தக்க செல்வம், யௌவனம் முதலியவற்றை யுடையவனும், மிகவும் அழகுவாய்ந்தவனும், தாமிரலிப்தமென்னும் நகரத்தில் வசிப்பவனுமான சமுத்திரதத்தனென்னும் வியாபாரிக்கு அவளை விவாகஞ் செய்து கொடுத்தான். பிறகு ஒரு சமயம் சமுத்திரதத்தன் தன்னிருப்பிடஞ் சென்றான். அப்பொழுது பெற்றோர் வீட்டிலிருக்கும் அப்பெண் தூரத்தில் ஒரு வாலிபன் வருவதைக்கண்டு, அவனிடம் காதல் கொண்டு, தன் தோழிகள் மூலமாக அவனை வரவழைத்து, அவனையே கணவனாகக் கொண்டு விட்டாள். இவ்வாறு அவள் பிரதிதினம் அவனுடன் காலத்தைப் போக்கி வந்தாள்.

பின்னொரு சமயம் அவளுடைய கணவன் தன் தேசத்திலிருந்து தன் மாமனார் வீட்டுக்கு வந்தான். உடனே மாமி முதலியோர் அவனுக்கு விருந்து செய்து, இரவில் பெண்ணை அலங்கரித்துப் புருஷன் இருக்கும் அறைக்கு அனுப்பினர். அவளது கணவன் அவளை எவ்வளவு வேண்டியும் பிறரிடம் பற்றுள்ள அவள் தூங்குவதுபோல் நடித்தாள். பிறகு கணவனும் வழி நடந்த சிரமத்தால் தூங்கி விட்டான். பிறகு ஊர் ஜனங்கள் யாவரும் தூங்கும் பொழுது ஒரு திருடன் சுரங்கம் வைத்து அவ்வறைக்குள் நுழைந்தான். அந்தப் பெண்ணோ அப்பொழுது கள்வனை அறியாமல் எழுந்து மறைவாய் வெளிக்கிளம்பினாள். கள்வன் இதைக் கண்டு, மனமுடைந்து, 'நான் எந்த நகைகளுக்காக இங்கு வந்தேனோ, அந்நகைகளை யெல்லாம் எடுத்துக்கொண்டு இவள் வெளியே போகின்றாள். இந்நள்ளிரவில் இவள் எங்கே போகிறாளென்று அறியவேண்டும்!' என்று தீர்மானித்து, அப்பெண்ணைப் பின் தொடர்ந்தான். அவளும் சந்தனம், புஷ்பம் முதலியவற்றுடன் கூடிய தோழியுடன் சேர்ந்து பூங்காவனத்திற்குச் சமீபத்திலுள்ள ஒரு சோலைக்குச் சென்றாள். அங்கே குறித்த விடத்தில் காவற்காரர்களால் கள்வனென்று தீர்மானித்துக் கழுத்தில் கயிறு கட்டி அடித்து மரத்தில் தொங்கவிடப்பட்ட தன் கள்ள புருஷனைக் கண்டாள். அவள் அவனைக் கண்டதும் வருத்தத்துடன் பூமியில் விழுந்து கதறினாள். பின்பு அவனை மரத்திலிருந்து இறக்கிக் கீழே வைத்து, சந்தன முதலியவற்றைப் பூசிப் புஷ்பத்தால் அலங்கரித்தாள். அவ்வுடலில் உயிர் இல்லை. ஆனால் ஒரு பிசாசு அதில் நுழைந்திருந்தது. உடனே வசுதத்தை காமத்தினால் அவனது முகத்தைத் தூக்கி முத்தமிடவே, அவன் உடலிலிருந்த பிசாசு அவளது மூக்கைத் துண்டித்து விட்டது. உடனே அவள் மிக வருந்தித் திரும்பிப் போனாளாயினும், ஒருவேளை உயிர் இருக்குமோவென்று திரும்பிவந்து பார்க்கையில் அவன் பிணமாய்க் கிடந்தான். பிறகு அவள் பயந்து நடுங்கி அழுதுகொண்டே மெதுவாகத் தன் வீடுபோய்ச் சேர்ந்தாள். இவற்றை

யெல்லாம் பார்த்த கள்வன், 'அந்தோ! இப்பாபி ஏன் இவ்வாறு செய்கிறாள்? ஸ்திரீகளின் மனம் மிகவும் கொடியது. ஆதலின் இவள் இன்னும் என்ன செய்கிறாளென்று பார்ப்போம்' என்று சிந்தித்து மீண்டும் அவளைத் தொடர்ந்தான். அவள் வீட்டில் நுழைந்ததும் உரக்கக் கதறிக்கொண்டு "ஐயோ! என்னைக் காப்பாற்றுங்கள்! என் கணவனென்னும் பகைவன் பிழைசெய்யாத எனது மூக்கைத் துண்டித்துவிட்டான்" என்று சத்தஞ் செய்தனள். அக்குரலைக் கேட்டு பரிஜனங்கள் யாவரும் விரைவில் எழுந்துவந்தனர். இச்சத்தத்தால் அவள் கணவனும் விழித்துக்கொண்டான். பிறகு அவள் தந்தை அங்கு வந்து பெண்ணின் மூக்கு வெட்டுபட்டிருப்பதைப் பார்த்துக் கோபங்கொண்டு மாப்பிள்ளையைக் கட்டும்படி கட்டளையிட்டான். மருமகனோ இன்னது செய்வதென்றறியாது மௌனமாயிருந்தான். ஒன்றும் பேசவில்லை, பிறகு இவ்விஷயத்தை யாவரும் அறிந்தனர். அக்கள்வனும் இதையறிந்து கொண்டு தன்னிருப்பிடஞ் சென்றான். இரவும் முடிந்தது. பிறகு மருமகன் மாமனாரால் ராஜசபைக்குக் கொண்டுபோகப்பட்டான். மூக்கறுபட்ட வஸுதத்தையும் அவ்விடஞ் சென்றனள். அரசன் இவ்விஷயமனைத்தையும் கேட்டு 'இவன் தன் மனைவியைக் கெடுத்தவன்' என்று தீர்மானித்து அம்மருமகனைச் சிரச்சேதம் செய்யுமாறு கட்டளையிட்டான். நிரபராதியாகிய அவன் கொலையாளிகளால் வாத்திய கோஷத்துடன் கொலைக்களத்துக்குக் கொண்டு போகப்படும்பொழுது, அக்கள்வன் அங்கு வந்து அதிகாரிகளின் தலைவனைப் பார்த்து, "நிரபராதியாகிய இவனை ஏன் கொலைக்களத்திற்குக் கொண்டுபோகிறீர்கள்? நடந்த விஷயம் முழுவதையும் நான் அறிவேன். என்னை அரசன் முன்னிலையில் கொண்டுபோய் விட்டால் நான் நடந்தவற்றைத் தெரிவிப்பேன்" என்றான். உடனே தலைவன் அவனை அரசனிடம் கொண்டுபோய்விட்டான். உடனே கள்வன் ஆதிமுதல் இரவில் நடந்த விஷயமனைத்தையும் அரசனிடஞ் சொல்லி "வேந்த! என் வார்த்தையில் நம்பிக்கை இல்லாவிடில், அம்மூக்கு அந்தப் பிணத்தின் வாயில் இருப்பதை இப்பொழுதே பார்க்கலாம்" என்றான். அரசன் அதைக்கேட்டுச்சேவகர்களைப் பார்த்து வரும்படி கட்டளையிட்டான். அவர்கள் கள்வன் கூறிய தன்மை எனக் கூறினர். உடனே வேந்தன் அவனைக் கொலையினின்றும் விடுவித்து, துஷ்டையாகிய வஸுதத்தையின் செவிகளை அறுத்துத் துரத்திவிட்டான். அவள் பெற்றோரின் பொருள் முழுவதையும் அரசன் பறிமுதல் செய்துகொண்டான். அன்றியும் அரசன் அக்கள்வனைக் கிராமத்தலைவனாக நியமித்துக்கொண்டான். ஆதலின் ஸ்திரீகள் குரூரமான மனமுடையவர்கள்."

இவ்வாறு கிளி சொல்லி முடித்ததும் அதற்கு இந்திரசாபம் முடிந்தமையால் சித்திரதன் என்னும் கந்தருவனாகித் தேவரூபத்தையடைந்து சுவர்க்கத்தை யடைந்தது. உடனே அப்பெண் கிளியும் திலோத்தமை என்னும் தேவஸ்திரீயாகி சுவர்க்கத்தை யடைந்தது. பிறகு அந்த ராஜகுமாரன் "அத்தகைய புருஷன் எவனாகிலும் ஒருவன் எப்பொழுதாவது தீயொழுக்கமுள்ளவனா யிருக்கக்கூடும், ஸ்திரீகளோ பெரும்பான்மையும் தீயொழுக்கமுள்ளவர்களாகக் காணப்படுகின்றனர்" என்று தீர்மானித்தான்.

பெண்கள், புருஷர்களென்னும் இருதிறத்தாருக்கும் கற்புடைமையோடு கூடிய ஒழுக்கம் வேண்டும். அது தீமைகளை நீக்கி நன்மைகளையுண்டுபண்ணும். ஒழுக்கத்தினுஞ் சிறந்த செல்வமில்லையாம். ஆதலின், அதனை யாவரும் கைப்பற்றவேண்டும்.

பிறப்பு நெடுவாழ்க்கை செல்வம் வனப்பு
நிலக்கிழமை மீக்கூற்றங் கல்வி நோயின்மை
இலக்கணத்தா லிவ்வெட்டு மெய்துப வென்றும்

ஒழுக்கம் பிழையாதவர்
ஒழுக்கம் விழுப்பந் தரலா னொழுக்கம்
உயிரினு மோம்பப் படும்.

சுபம்.

மனிதப் பிறவியும் எளிய வாழ்வும்.

(ஸ்ரீமான் ஆரியூர் வ. பதுமநாப பிள்ளை.)

இன்பவடிவாயிலங்கும் இறைவனது இன்னருள் விளையாட்டின்வழி இயங்கிவரும் இந்நிலவுலகத்தை வெறுப்போர் சிலர், விரும்புவோர் சிலர். உலகமனைத்தும் வெறும் பொய்த்தோற்றமென்றும், மாயையென்றும், இவ்வுலகத்தோடு ஒட்டி வாழும்வரை உண்மைநிலை உணர்தல் அரிதென்றும், ஆதலால் உண்மையை உணர்ந்து இறைவனது இணையடிகளை எய்த எண்ணுவோர் இவ்வுலகோடு எவ்விதத் தொடர்புமின்றி எல்லாவற்றையும் விட்டுவிட்டுத் தனித்து வாழ்தலே மெய்ஞ்ஞானமென்று வாசாஞானம் பேசித் திரியும் போலி வேதாந்திகள் இந்நாளில் மிகப் பலராயினர். இத்தகையோர் இம்மானிட வாழ்வே இழிபுடையதென்றும், நிலையற்ற இவ்வுடலைப் பேணுதல் அறியாமையென்றும், இவ்வுடலினை வருத்தி வருத்தி வாட்டிவாட்டிப் பழகிவந்தாலன்றி மெய்ஞ்ஞானம் விளையாதென்றும் பேசித் திரிவர். அந்தோ! என்னே இவர்தம் பேதமை! "எண்ணரிய பிறவிதனில் மானிடப் பிறவி தான் யாதினு மரிதரிதுகாண்!" என தவப் பெருஞ் செல்வராம் தாயுமானாரும், "மனிதப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே" எனத் தமிழ்வேதமும் வியந்துகூறும் பெறுதற்கரிய பிறவி, நல்லன இவை, தீயன இவை என்று பிரித்துணர்த்தும் பகுத்தறிவாகிய ஆறுவது அறிவுடைய இப்பிறவி, இறைவனை எய்தற்குரிய உண்மை ஞானத்தை ஊட்டும் பிறவி இம்மானிடப் பிறவியோ வெறுக்கற்பாலது! இதன் மாண்பை அளவிட யாரே வல்லார்! உண்மைநிலை உணர்ந்து, அல்லாதவற்றினின்றும் மன மொழி மெய்களால் அகன்று, எவ்வுயிரிலும் இறைவன் உறைவதுகண்டு, அனைத்துயிர்க்கும் அன்பு பூண்டு, இறைவனது இணையடிகளை எய்துதற்குச் சிறந்த சாதனமாக நிற்கும் இம்மனிதப்பிறவியை மாயை சூழ்ந்ததென்றும் துன்பம் நிறைந்ததென்றும் இழித்துக் கூறி, அதனாற் பெறற்பாலதாய அரிய பேற்றை இழந்து "காயமாவது பொய்யடா, இது காற்றடைத்ததோர் பையடா" என்று பாடித் திரிவதினும் சிறந்ததொரு பேதமையுண்டோ!

மற்றும் அத்தகைய போலி வேதாந்திகள் புவனப் பொருள்களை வெறுக்கின்றார்களேயன்றி, அவற்றின்மேலுள்ள ஆசையை உண்மையில் துறக்கின்றாரில்லை. உலகத்தில் இயற்கைவழி இன்ப வாழ்வு நடத்தி, இறைவனை இறைஞ்சும் அரிய பேற்றையும் இழக்கின்றார். சுருங்கக்கூறின் எல்லா நலங்களுக்கும் ஏதுவாய் நிற்பதும், ஆண்டவன் அகமகிழ்ந்து உறைவதற்கு இடமாயிருப்பதும், ஏனைய எப்பிறவியினும் மேம்பாடுடையதுமான இவ்வுடலைச் செல்வச் செருக்கினால், வரம்பற்ற பெருந் தீண்டியினால் கொழுமைபெற வளர்த்து டாம்பீக வாழ்வில் பயில்வித்து, உண்மைநிலை தெளியாது இறைவனைச் சிறிதும் நினையாது வீணே மாளச்செய்வது பெரும் பாபமாம். அவ்வாறே, போலி வேதாந்தம் பேசி உற்றார் உறவினரை நடுத்தெருவில் அலையவிட்டுச் "சிந்தையை அடக்கியே சும்மா விருக்கின்ற திறமின்றி" உலகப் பொருள்களனைத்தையும் பொய்யெனக்கொண்டு, உடலை வாட்டி வருத்தி இரண்டுங் கெட்ட துன்ப வாழ்வு நடாத்துவதும் பாபமேயாம். ஆதலின், இவ்விரண்டினிடையே இலங்கும் எளிய வாழ்வே என்றுங் குன்றாத உண்மையின்பம் பயப்பதாம். 'அங்கிங்கெனாதபடி எங்கும் ப்ரகாசமாய்' பரந்து நிற்கும் பரம்பொருளை மெய்ப்பொருளாகக் கொள்வோர்க்கு இறைவனது திருவருள் விளையாட்டிற்கு நிலைக்களனாக விளங்கும் இவ்வுலகமும் அவனது அருட்படைப்புக் குட்பட்ட உயிர்கள் அனைத்தும் மெய்ப்பொருள்களாகவே தோன்றும். ஆதலின், இத்தகைய உண்மைநிலை உணர்ந்த பெரியோர்கள் உலகை மாயையென வெறுத்து, எல்லாவற்றையும் விட்டுவிட்டு ஓடி உலகிற்குப் புறம்பாக வாழார்.

ஆண்டவனது அருளுருவாகவே அனைத்தையும் நோக்கும் அம்மெய்யறிவாளர்கள் போலித் துறவு வாழ்வையாதல், டாம்பீக வாழ்வையாதல் மேற்கொள்ளாது, எவ்வுயிர்க்கும் அன்பாயிருந்து இயற்கைவழி நின்று எளிய வாழ்வு நடாத்துவர். ஆசையெனும் கொடிய பேய் அப்பெரியோரை அணுகவும் துணியாது. 'நில்லாதவற்றை நிலையென் றுணரும் புல்லறிவாண்மை கடை' எனுமுண்மை உணர்ந்து, உலகப்பொருள்களின் மேலுள்ள அவாவை அத்தகையோர் முற்றும் அறுப்பர். 'உண்பது நாழி உடுப்பது நான்கு முழம்' என்ற பழமொழிப்படியும், 'போதுமென்ற மனமே பொன்செய்யும் மருந்து' எனும் முதுரைப்படியும் கிடைத்தமட்டில் திருப்திகொண்டு அவாவைப் புறங்காண்பர் அம்மெய்ஞ்ஞானிகள். ஆதலின், எளிய வாழ்வே உண்மை வேதாந்த நிலை பெறுவிப்பது என்பது தெளிவு.

உள்ளமட்டும் கள்ளம் கரவின்றி, ஆடம்பர வாழ்க்கையை அனுபவித்துத் தீர்த்துவிட்டால் ஆசை தீர்ந்துவிடுமன்றோ? என்று சிலர் வினவுவர்; உண்மை அற்றன்று. உலகப் பொய்யின்பத்திற் றிளைக்கத்திளைக்க வெறுப்பை விளைக்காது, டாம்பீக வாழ்வானது மேன்மேலும் பொய்யின்பப் பொருள்களை விரும்பி நிற்கச் செய்யும் முகத்தால் அவாவை வளர்ப்பதாகும். போலி வேதாந்த வாழ்வோ எனின், வறுமையின் கொடுமையாலோ, பகை காரணமாகவோ, வேறு பல காரணங்களை முன்னிட்டோ, பொருள்களை விடுத்து வீட்டைவிட்டு ஓடி, வெளியில் அலைந்து திரியும்போது, அகத்தை அடக்கியாளும் ஆற்றலும், உண்மையில் அவாவை அறுத்தலும் வாய்க்கப்பெறாமையால், மீண்டும் மீண்டும் பழைய நினைவுகளைப் பல முறைகளில் ஊட்டி அவாவை அவாவச் செய்வது.

ஆதலின், உண்மையில் இறைவனை எய்த விரும்புவோரும் உண்மைநிலை தெளிய விரும்புவோரும் மேற்கூறிய இருவகைத் தன்னலங்களுமின்றி 'ஆண்டவனுக்குத் தொண்டுசெய்வதென்பது, அவனுகந்த உயிர்கட்குத் தொண்டு செய்வதேயாம்' எனும் உண்மை கண்டு 'எவ்வுயிரும் பராபரன்றன் சந்நிதியதாகும், இலங்குமுடலுயிரனைத்தும் ஈசன் கோயில்' என்பதைக் கருத்திலிருத்தி 'உள்ளதே போதும், நான் நானெனக் குளறியே ஒன்றைவிட்டொன்று பற்றிப் பாசக்கடற்குளே வீழாமல் மனதற்ற பரிசுத்த நிலையை யருள்வாய்!' என ஆண்டவனை நோக்கி வேண்டுவாராக.

அன்றியும், மானிட வாழ்வில் உணவும் உடையுமே மற்றெல்லாவற்றைக்காட்டிலும் இன்றியமையாது தேவையாயிருக்கின்றன. அவையிரண்டுமின்றி இவ்வுலகில் வாழ்வுநடாத்துவது அரிதினுமரிது. உணவுக்கேற்றவாறு

குணமும், உடைக்கேற்றவாறு பாமர உலக மதிப்பும் ஏற்படுகின்றன. இவ்விரண்டனுள், உடையைக்காட்டிலும் உணவே மிகமிக இன்றியமையாததாகின்றது. உடலை ஓம்புவதற்காக இயற்கைவழி எளிய உணவு கொண்டு எளிய வாழ்வு நடாத்தி மெய்யின்ப மெய்துவது விடுத்து, வறுமையின் கொடுமையால் பல்லாயிரக்கணக்கான ஏழைமக்கள் அரை வயிற்றுக் கஞ்சியும் அகப்படாது தவிக்கும் இவ்வாரிய பூமியிலே, செல்வச் செருக்கினால் செயற்கை வழி உடலோம்ப முனைந்து நின்று இராஜோ குணத்தை வளர்ப்பனவும், அளவுக்கு மிஞ்சியளவுமாய கொழுமையான உணவுகளை, பெருந் திண்டியை ஒருநாளில் பலவேளைகளில் உட்கொண்டு வாழும் டாம்பிக வாழ்வு எவ்வளவு பாதகச் செயலேயாகும்! செல்வர்களே! ஏழைகட்கு இரங்குங்கள். உங்களது டாம்பிக வாழ்வில் நாடோறும் செலவாகும் விலையுயர்ந்த கொழுமை உணவுகளை ஒழித்து, ஆரோக்கியமளிக்கும் சாதாரண உணவுகளையே கொள்வீர்களாயின், அச்செயலால் எத்தனை ஏழைமக்களது ஒட்டிய வயிற்றை நிறப்பலாகு மென்பதைச் சிறிதே சிந்தித்துப் பாருங்கள்! நிற்க.

எளிய வாழ்வை மேற்கொண்ட பேரறிவாளர்கள் 'சென்றது கருதார், நாளை சேர்வது நினையார்.' அவாவை வளர்த்து அல்லற்படுத்திப் பலவிதப் பிணிகளையும் கூட்டுவிக்கும் கொழுமையான உணவுகளை வெறுத்து விலக்கி, இயற்கை வழி நின்று சத்துவ குணத்தை வளர்க்கும் எளிய உணவைக்கொண்டு உடலோம்பியும், ஒல்லும்வகை பிறர்க்குதவியும் வாழ்வர். ஆதலின், உண்டியைப்பற்றிய அவா அத்தூயோரை அலைப்பதில்லை. எளிய வாழ்வு முறையிற் சிறந்தது நாச்சுவையடக்கலாம். நாவை அடக்கியாளப் பயின்றோர்க்கு வேறெச்செயல்தான் அரிதாம்? கொழுமை உணவு ஆசையையும், நாளடைவிற் பிணியையும், தன்னலத் தறுகணாண்மையையும் வளர்க்கும் இயல்பினது. எளிய உணவோ ஆரோக்கியத்தையும் பற்றின்மையையும், பரோபகார சிந்தையையும் விளைக்கும் தன்மையது. காய் கனி கிழங்கு முதலிய எளிய உணவு கொண்டு எளிய உடை உடுத்தி வாழ்ந்த பாண்டவர்கள் உள்ளத்திலே அன்புத் தேன் பிலிற்றிக்கொண்டிருந்தமையும், இராஜோ குணத்தை வளர்க்கும் கொழுமை உணவுகளை உட்கொண்டு பகட்டான ஆடைகளை அணிந்து வாழ்ந்த துரியோதனன் முதலியவர்கள் மனத்திலே அழுக்காறும் வெஞ்சினமும் பொங்கிக் கொண்டிருந்தமையும் கவனிக்கற்பாலன. மற்றும்,

எளிய உணவு கொண்டு இயற்கையோடிசைந்த வாழ்வு நடாத்தி மெய்யின்பமெய்தினோர், இந்நாட்டில் மட்டுமே இருந்தனரென்பதில்லை. அத்தகையோர் மேலை நாடுகளிலும் இருந்தனர். அவர்களுள், சிலரது அமுத மொழிகள் வருமாறு:—

I. "நாவினுக்கு உருசி தரும் அறுசுவை உண்டிகளை அதிகச் செலவு செய்து டாம்பிகத்துடன் உண்பதை ஒழித்து, தேகம் நிற்பதற்குரிய டாம்பிகமற்ற சாத்விக ஆகாரத்தை உண்ணலே சிறந்தது."

—ருஷிய மகான் லியோ டால்ஸ்டாய்.

II. "எதை உண்போம், எதைக் குடிப்போம் என்று உங்கள் ஜீவனுக்காகவும், எதை உடுப்போம் என்று உங்கள் சரீரத்திற்காகவும் கவலைப்படாதிருங்களென்று உங்களுக்குச் சொல்லுகின்றேன். ஆகாரத்தைப்பார்க்கிலும் ஜீவனும், உடையைப்பார்க்கிலும் சரீரமும் விசேஷித்தவைகளல்லவா? ஆகாயத்துப் பறவைகளைக் கவனித்துப் பாருங்கள். அவைகளையும் உங்கள் பரமபிதா பிழைப்பூட்டுகிறார்; அவைகளைப் பார்க்கிலும் நீங்கள் சிறந்தவர்கள் அல்லவா?"

—கிறிஸ்து

இனி, எளிய வாழ்வின் மற்றொரு அம்சமாகிய எளிய உடை உடுத்தி வாழ்தலைப்பற்றிச் சற்று உரைத்தல் பொருந்தும். மானங் காப்பதற்குப் போதியவளவில் கையால் நூற்று, கையால் நெய்யப்பெற்ற கதர்த் துணியை அணிதலே சாலச் சிறந்ததாம். ஏழைமக்கள் எண்ணிறந்தோர் அரையில் அணியப் போதிய கந்தையுமின்றித் தவிக்கும்போழ்து செல்வச் செருக்கினால் பரிசுத்தமற்ற பகட்டான விலையுயர்ந்த பட்டுத் துணிகளையும், வைர அணிகளையும் உபயோகிக்கும் செல்வர்களே! உண்மை மதிப்பு உடையிலில்லை; உள்ளத்திலேதான் உள்ளதென்பதை உன்னுங்கள். "மகான் முரட்டுத்துணியை அணிந்துள்ளார்; ஆனால் அவர்தம் இருதயத்தில் விலையற்ற மாணிக்கம் ஒளிவீசுகிறது" என்பது சீனதேசத்து மகான் லெயோத்ஸெவின் பொன்மொழி. "நான் சுதேச உடை தரித்திருக்கின்றேன். ஏன்? அது இயற்கையானது; இந்தியனுதற்குரியது. ஐரோப்பியரைப் பின்பற்றி, அன்னார் உடை அணிவது நமது ஈனத்திற்கும் மானபங்கத்திற்கும் பலக்குறைவிற்கும் அறிகுறியாகும். எளிமைக்கும் விலைக்குறைவிற்கும் சுகாதாரத்திற்கும் உரிய நாட்டு உடையை விலக்குவது சிறந்த தேசீயப் பாபம்" என்பன காந்தியடிகளின் அமுதமொழிகள். "கதரின் சிறப்பை உள்ளபடி உணர்ந்தோர் எளிய வாழ்வின் மேன்மையையும் அறிந்து கொள்வார்கள். எளிய வாழ்க்கை துறவு நிலையன்று; அவ்வாழ்க்கையில் நமது உடைகள் குறைவாயிருக்கும்; ஆனால் அவை அதிகநாள் நீடித்திருப்பனவாயும் இயற்கையழகு பொருந்தியனவாயுமிருக்கும். நமது உணர்வு கிளர்ச்சி தருவதாயிராது; ஆனால் உடலுக்கு உரந்தருவதாயிருக்கும். எளிய வாழ்வு உயர்நாகரிக வாழ்வாகும் எளிய வாழ்வு முறையில் பருப்பொருள்கள் ஒளிபெறுகின்றன" என்பன ஸ்ரீமதி நோரா ரிச்சார்ட்ஸ் எனும் ஆங்கிலப் பெண்மணியின் அனுபவ உரைகள். டாம்பிக வாழ்க்கையில் செருக்கிக் கிடக்கும் சீமாட்டிகளே, சீமான்களே! மேற்காட்டிய பொன்மொழிகளைக் கருத்திலிருத்தி, இனியேனும் ஏழைகள்பால் இரக்கங்கொண்டு இயன்றவரை உதவிபுரிந்து, இன்பமும் மதிப்பும் ஆடம்பர வாழ்விலில்லை என்பதை ஓர்ந்து, எளியவாழ்வு முறையையே மேற்கொண்டு நாட்டுக்கு நலஞ் செய்ய முன்வாருங்கள்.

இவை எளிய வாழ்வில் திளைத்தின்பமெய்திய காந்தியடிகளின் அமுதமொழிகள்: "எளிய வாழ்வு உண்மையில் என் அகவாழ்வையும் புறவாழ்வையும் ஒற்றுமைப்படுத்திற்று. பழைய (ஆடம்பர) வாழ்க்கையைவிட அது உண்மையோடியைந்ததாயிற்று. என் ஆன்மா ஆனந்தக்கடலில் மூழ்கித் திளைத்தது". எளிய வாழ்விற்கு முற்காலத்தில் பெயர்பெற்ற எமது அருமைச் செந்தமிழ் மணித்திருநாட்டீர்! பொருட்செல்வம் படைத்தீர்! தமிழ்நாட்டுத் தாய்மாரே! கற்புக்கரசிகளாம் காரிகைகாள்! நீங்கள் மனந்திரும்பின் ஆடவருந் திருந்துவர்; அம்மட்டோ! நாடே திருந்தி நலம்பெறும். ஆதலின் சகோதரிகாள்! அடியேனது புன்மொழிகளையும், ஆன்றோர்களது பொன்மொழிகளையும் நன்கு சிந்தித்துப் பார்த்து எளிய வாழ்வே மெய்யின்பந் தருவதென்பது தெளிந்து, முன்னோர் நன்னெறி பற்றி மெய்யின்பந் திளைக்க முன்வாருங்கள்!

இராணி சம்யுக்தா.

(சுவாமி அற்புதானந்தர்.)

அவுத் பிராந்தியத்தின் கனௌஜ் அரசன் இராஜா ஜய சந்திரன் என்பான். இவன் மகம்மதுகோரி இந்தியாவைப் படையெடுத்த நாட்களில் இருந்தனன். இவனுக்கு சம்யுக்தாவென்ற ஒரு குமாரி இருந்தனள். இவள் அழகு மிக்கவளெனவும், கல்வித்திறமைகொண்டிருந்தவளெனவும் அப்பிராந்தியத்தில் வதந்திகளிருந்ததினால் அவளை மணம் புரிய அநேக மன்னர்களின் குமாரர்கள் ஆசை கொண்டவர்களாக இருந்தனர். எனவே இவளின் சுயம்வரம் ஒன்றை அமைக்க ஸ்ரீமான் ஜயசந்திரராஜன் முன்னிட்டு, பண்டைய வழக்கப்படி இக்கன்னிகை தனக்கிஷ்டப்பட்டவரை மாலை சூட்டிக்கொள்ள அவுத்தின் மன்னர்களின் மக்களையெல்லாம் நிமந்தரித்திருந்தனன். இதே சமயத்தில் தானும் அவுத் பிராந்தியத்தின் மகுடாதிபதியென சிம்மாசனம் ஏறுவதற்கென ஒரு ராஜசூய யக்ஞத்தையும் செய்ய முற்பட்டனன். அவுத்தின் மன்னர்கள் இச்சம்யுக்தா இராஜ கன்னிகையின் அழகைச் செவியுற்று அக்கன்னிகையை இச்சித்திருந்ததைப் போலவே, இப்பிராந்தியத்தின் மன்னர்களும் இராஜா ஜயசந்திரனின் தீரவீர பராக்கிரமத்தில் பயபீதிகளடைந்தவர்களாகவே யிருந்தனர். ஆனால் டெல்லியின் அரசனாகிய பிருதிவிராஜன் மட்டும் இம்மன்னனின் பராக்கிரமங்களில் பயங்கொள்ளாதவனாகியும், இக்கன்னிகையின் ரூபலாவண்யத்திலும், கல்வித்திறமைகளிலும் மனம் மயங்கினவனாகவும் இருந்தனன். ஆகவே இவ்விருவிஷயங்களுக்கு அழைப்புக் கடிதங்கள் அனுப்பப்பட்ட சமயத்தில் அவுத்தைச் சுற்றியுள்ள மன்னர்கள் அனைவரும் அழைப்புக்கிணங்கி இராஜசூய யக்ஞத்தில் தம் காணிக்கைகளைக் கொடுப்பதற்கும் சுயம்வரத்தில் தம் வல்லமைகளை விளங்கச் செய்வதற்கெனவும் முற்பட்டனர். எனினும் இப்பிருதிவி ராஜன் மட்டும் இவ்விராஜசூய யக்ஞத்தை நிராகரிக்கவும், இச்சுயம்வரத்திற்கு வேறு உபாயத்தைத் தேடியும் இருந்தனன். மன்னர்களையும், அவரவர்களின் இராஜ புத்திரர்களையும் வரவேற்ற ஸ்ரீமான் ஜயசந்திர மகாராஜன் பிருதிவி ராஜன் தன் அழைப்பை அங்கீகரித்து வரவில்லையெனத் தெரிந்து கோபாவேசனாகி, இவ்விராஜனைப் (பிருதிவிராஜன்) போல ஒரு உருவத்தைச் செய்வித்து அதற்கு ஒரு சேவகனைப்போல ஆடையை அணிவித்து, இராஜசூய யக்ஞம், சுயம்வரம் ஏற்பட அலங்கரிக்கப்பட்டிருந்த மாளிகையின் வாயிலில் வைக்கச் செய்தனன். இம்மாளிகையின் உட்செல்பவர்களை யெல்லாம் இங்கு அவரவர்களின் செருப்பைக் கழற்றி விட்டுச் செல்ல ஆக்ஞாபித்தனன்.

இராஜசூய யக்ஞம் நடந்து மகாராஜா ஜயசந்திரன் கனௌஜின் மகுடாதிபதியாகச் சிம்மாசனம் ஏறினன். அவுத்தின் மன்னர்களும் ஏனைய நாட்டின் மன்னர்களும் தத்தம் கப்பங்களையும் காணிக்கைகளையும் அளித்தனன். இவர்களுக்கெல்லாம் பலவித மரியாதைகளையும் வெகுமதிகளையும் அளித்தனன். பின்னர் இச்சம்யுக்தாவின் சுயம்வரம் ஏற்படலாகிற்று. இவ்வமயம் இக்குதூகலத்தில் ஈடுபட்டிருந்தவர்களெல்லாம் பிருதிவிராஜனுக்கு மகாராஜா ஜயசந்திரன் ஏற்படுத்தியிருந்த அவமானத்தையும் அவமரியாதையையும் கண்டு மனம் நொந்தவர்களாக இருப்பினும், இம்மன்னனின் கோபாவேசத்திற்குள் ஆளாகாதபடியே, யாதொன்றும் சொல்லாமல், அறிந்தும் அறியாதவர்கள் போலிருந்தனர். சுயம்வர பேரிகை முழங்கினவுடன், நல்லுடை நல்லாபரணம் தரித்து இராஜ குமாரி சம்யுக்தா, கையில் புஷ்பாகாரம் ஏந்தி மாளிகையினுள் பல தாதிகளின் படை சூழ வந்து இங்கும் அங்கும் கண்ணோட்டமிட்டுத் தனக்குகந்த மணமகனைக் கவனிக்கலாகினள். மாளிகையிலமர்ந்திருந்த மன்னர்களும் இளவரசர்களும் சிமிட்டாத கண்களுடன் இவ்விராஜ குமாரியைப் பார்த்த வண்ணமாகவே யிருந்தும், சம்யுக்தா இவர்களை எல்லாம் உகந்த மன்னர்களெனப் பாராட்டாமல், தன் தகப்பன் கோபாவேசத்தினால் நிராகரித்து மாளிகையின் வாயிலண்டை விக்கிரசொரூபமாக செருப்புகள் கழற்றுவதற்கென ஏற்படுத்தியிருந்த இடத்தில் வைக்கப்பட்டிருந்த ஸ்ரீமான் பிருதிவி ராஜனின் கழுத்தில் தன் கையிலிருந்த மாலையைப் போட்டுப் பணிந்து நிற்கலாகினள். மாளிகையிலிருந்த மன்னர்களும் இளவரசர்களும் மிக்க கோபாவேசர்களாகி இராஜ கன்னிகை சம்யுக்தாவைத் தூஷிக்கலாகினர்கள். இக்கன்னிகையின் பிதாவான மகாராஜாதிராஜனாகிய ஜயசந்திரனும் தன்னை மதியாது இருமாப்படைந்து, தன் இராஜசூய யக்ஞத்தில் அரசர்கள் தனக்குச்செய்யவேண்டிய காணிக்கை, கப்பம் முதலியவைகள் செய்யாத விரோதியென நிராகரிக்கப்பட்டு, விக்கிரக ரூபமாக சேவகர்களின் உடையை அணியச் செய்யப்பட்டிருந்த பிருதிவி ராஜனுக்கு மணமாலை சூட்டினளே எனக் கண்டு மிக்க சினங்கொண்டவனாகித் தன் குமாரியைக் கடிந்து பேசி, உடனே சிறையிலடைக்கும்படி கட்டளை யிட்டனன்.

மந்திரிகளும் சேனாதிபதிகளும் மற்றுமுள்ள உத்தியோகஸ்தர்களும் இராஜாதிராஜனின் கோபத்திற்கு அஞ்சி, தம் வீரர்களினால் சம்யுக்தா இராஜ கன்னிகையைச் சிறையிட்டுச் சென்று கைதியாக்கினார்கள். இக்கன்னிகையின் மாதா மாதா சிரோன்மணியாகிய மகாராணியாரும் இன்னும் இவ்வம்மையின் உறவினர், உற்றார், சுற்றத்தார் யாவரும் மிக்க திகிலடைந்தவர்களாகி, இராஜ கன்னிகையின் தலைவிதியை நொந்தவர்களாகி, அரசனின் கோபத்திற்கு அஞ்சினவர்களாகி, யாதொன்றும் சொல்லக் கூடாதவர்களாகி, சிறையாகின துர்ப்பாக்கியத்தைச் செவியுற்றுக் கண்ணீர் ததும்பினவர்களாயும் சொரிந்தவர்களாயும் இருந்தனர். கனௌஜ் மகுடாதிபதியின் இராஜசூய யக்ஞம் பிருதிவிராஜனின் அவமதிப்பிலும், இம்மகுடாதிபதியின் குமாரியின் சுயம்வரம், இராஜ கன்னிகையின் சிறைவாசத்திலும் ஏற்படவே, இக்குதூகலத்திற்கு விஜயம் செய்திருந்த மன்னர்களும் இளவரசர்களும் தத்தம் நாடுகளுக்குத் திரும்பலாகினார்கள். இவ்விரு செய்திகளும் வட நாடு முழுவதிலும் பரவலாகின. டெல்லியிலும் பரவி, ஸ்ரீமான் பிருதிவிராஜனும் செவியுறலாகினன். தன்னை இராஜசூய யக்ஞத்தில் அவமதித்த விவரத்தையும், தனக்குச் சுயம்வரத்தில் இராஜ கன்னிகை சம்யுக்தா மணமாலை சூட்டினதையும், இதற்காகச் சிறை புகுந்ததையும் கேள்விபுற்று, தன் படைகளைத் தயாரித்து, கனௌஜ் மன்னனுக்கும் முன்னாடி தெரிவிக்கலாகினன். சில நாட்களில் பெரும்போர் பிருதிவிராஜனுக்கும் ராஜா ஜயசந்திரனுக்கும் ஏற்பட்டது. இப்போரில் ராஜா ஜயசந்திரன் தோல்வி யடையலாகினன். கனௌஜும் பிருதிவிராஜன் வசமாகியது. இராஜ கன்னிகை சம்யுக்தையும் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டனள். உடனே டெல்லிக்கு எடுத்தேகப்பட்டனள். டெல்லியில் மிக்க ஆரவாரத்துடன் விவாகிக்கப்பட்டனள். இராஜா ஜயசந்திரனும் கைதியாக டெல்லிக்கு எடுத்தேகப்பட்டிருந்தனன். விவாகமான பின்னர், இராணி சம்யுக்தாவின் வேண்டுகோளிற்கிணங்கி, ஜயசந்திரன் விடு

தலையடைந்து, தன் அரசியலில் சென்று அமரவும் செய்யப்பட்டனன். சம்யுக்தாவின் உற்றார், உறவினர், சுற்றத்தினர்கள் இப்போரில் ஜயசந்திரன் கைதியாக்கப்பட்டதினால், இங்கும் அங்கும் ஓடி அடைக்கலம் புகுந்து ஒளித்திருந்தவர்கள் யாவரும் கனௌஜ் திரும்பி மகாராஜாதிராஜன் ஜயசந்திரனுடன் நல்வாழ்வை வாழவும், தம் அருமை இராஜ கன்னிகை பிருதிவிராஜனுக்கு மணம் புரியப்பட்ட விபரம் கேட்டு ஆனந்த பரவசமாகவுமாகினார்கள்.

இராஜா ஜயசந்திரன் டெல்லியிலிருந்து விடுபட்டுக் கனௌஜில் இராஜ்ய பரிபாலனம் செய்ய முற்பட்டும் அடங்கா வஞ்சத்தைக் கொண்டிருந்தனன். சில மாதங்களின்பின், மகம்மது இந்தியாவின் படையெடுப்பில் ஈடுபட்டுப் பல நகரங்களைக் கொள்ளையிட்டும், பல கோயில்களை இடித்தும், பல ஆண்பெண்களைச் சிறை செய்தும் வந்தனன். இவைகளை அறிந்த பிருதிவிராஜன் தன் நகரத்தைச் சூழ்ந்திருந்த இந்து மன்னர்களை ஒருங்கு சேர்த்துத் தம் நாட்டைப் பாதுகாப்பதற்கெனவும், தம் மதத்தைச் சீர்குலையச் செய்யப்படாது தடுப்பதற்கெனவும், தம் நாட்டுப் பெண் இனங்களின் பதிவிரதா தன்மைகளை நிலைநாட்டுவதற்கெனவும் முற்படல் வேண்டுமென ஆலோசிக்க முயலுகையில், கனௌஜின் மகுடாதிபதியாகிய ஜயசந்திரனைத் தவிர மற்றவர்கள் எல்லோரும் ஒருங்கு கூடினார்கள். இப்படை மகம்மதியர்களுடன் போர்புரிய திரேளரி என்ற இடத்தில் முற்பட்டது. மகம்மது கோரி தோல்வியுற்றுப் பெரும் நஷ்டத்தையடைந்து உயிர்தப்பி ஓடினான். இதைக்கேட்ட ஜயசந்திரன் மிகவாகப் பாதிக்கப்பட்டு அடங்காச் சினம் கொண்டவனாகினான். பிருதிவிராஜனின் வெற்றிகள் இவனைப் பலவகையில் பாதித்தன. இவன் உடனே மகம்மது கோரிக்குத் தூதர்களை அனுப்பினான். திரும்பிவந்து படையெடுத்தால் பெரும் உதவியைப் புரிவதாக வாக்களித்தனன். தானும் தன் படையுடனும் சேனாதிபதிகள், மந்திரிகள் முதலியவர்களுடனும் சேருவதாகச் சொல்லியனுப்பினன். இன்னும் இவ்வமயத்தினுள் பிருதிவிராஜனுடன் சேர்ந்திருக்கும் ஏனைய இந்து அரசர்களின் ஒற்றுமையைப் பிரித்துவிடுவதாகவும் வாக்குறுதி கூறியனுப்பினன். இவைகளையெல்லாம் கேட்ட மகம்மது கோரி பெரும் படையைத் திரட்டி டெல்லிமீது படையெடுக்க முயன்றனன். தன் வாக்கின் பிரகாரம் ஜயசந்திரன் தன் மந்திரிகள், சேனாதிபதிகள், படைவீரர்கள் சூழ மகம்மது கோரியை எதிர் நோக்கி வரவேற்று ஆரவாரிக்கலானான். இவைகளைச் செவியுற்ற பிருதிவிராஜன் இப்போரில் ஈடுபடும்படி ஏனையர்களை அழைக்க முற்பட்ட யுக்திகளெல்லாம் வீணாயின. ஒவ்வொருவரும் ஏதோ சாக்குப் போக்குகளைச் சொல்லி திரண்டுவாராமல் தனிப்படவே நின்றுவிட்டனர். எனினும் பிருதிவிராஜன் தன் படையைத் திரட்டி யமுனை ஆற்றங்கரையில் போர்புரியவே தயாராயிருந்தனன்.

அடுத்த கரையில் ஜயசந்திரன் பெரும் படையுடன் மகம்மது கோரியை வரவேற்கவெனத் தாமதித்துக்கொண்டிருந்தனன். இவைகளை அறிந்த மகாராணி சம்யுக்தா தன் கணவன் இவ்வமயம் ஜபம் கொள்வது கூடாத காரியமென நன்குணர்ந்தவளாகி, ஒரு இரவு ஆடவனைப்போல போர்வீர உடுப்பை அணிந்து ராஜா ஜயசந்திரனைக் காண யமுனை நதிக்கு இப்புறமிருந்த மாளிகையிலிருந்து புறப்பட்டுத் தனியே சென்று அங்கு காவலில் இருந்த வீரர்களிடம் விண்ணப்பித்துக்கொண்டனள். இவ்வீரர்கள் உடனே ஜயசந்திர ராஜனிடம் சென்று ஒரு வாலிப வீரன் தங்களைக் காண வந்திருக்கின்றான் என்றனர். இதைக்கேட்ட மகாராஜா ஜயசந்திரன், 'என்ன! வாலிப வீரனா? எதிரிகளின் படையிலிருந்தா வந்துள்ளனன்? என்ன வேண்டுமென்கின்றனன்?'

என்று வினவவே, 'அவன் ஏதோ தங்களிடம் சொல்லவேண்டுமென்கின்றனன்' என்றனர். 'அப்படியானால் உடனே அவனை இட்டுவாருங்கள். நீங்கள் அவனை இங்கு விடுத்துவிட்டு வெளியில் நில்லுங்கள்' என்று சொல்லித் தன் உடைவாளை உடனே எடுத்து வைத்துக்கொண்டு எதிர்பார்த்திருந்தனன். வீரர்கள் இவ்வாலிபனை இட்டுச் சென்று, உடைவாளைக் கையில் ஏந்தி அமர்ந்திருந்த ராஜாதிராஜனாகிய ஜயசந்திரன்முன் விட்டுவிட்டுப் பின்வாங்கி நின்றனர். இவ்வாலிபன் ராஜா ஜயசந்திரனைக் கண்டவுடனே போர்வீர நமஸ்காரம் செய்ய, அரசனும் 'என்ன செய்தி?' என்று வினவினான். 'நான் உம்முடைய ஆசீர்வாதத்தைப் பெற வந்துள்ளேன். நான் என் நாட்டையும், என் நாட்டின் மதத்தையும், கோயில்களையும், பெண்களின் பதிவிரதா தர்மத்தையும் பாதுகாக்கப் போர்புரிய முற்படலாகியிருப்பதனால் உங்களது ஆசீர்வாதம் பெறவே வந்துள்ளேன். பெற்றோரின் ஆசீர்வாதம் யுத்த அரங்கத்திற்கு மிக்க முக்கியமானது' என்றனன். இதைச் செவிசாய்த்த ராஜா ஜயசந்திரன் மிக்க வியப்புற்று சிலநேரம் பதுமைபோல் நிற்கலானான். உடனே இவ்வாலிபன் யாரென கவனிக்க முற்படுகையில் இவ்வாலிபன் தன் புதல்வியாகிய சம்யுக்தாவெனக் கண்டு பிரமித்து, 'நீதான் இதற்கெல்லாம் காரணம், போய்விடு, இப்போது முடியாது' என்றனன். எனினும் இவ்வாலிபன் 'பிதாவே,' அங்ஙனம் சொல்லலாகாது. உமது இந்துமதக் கோயில்களின் சீரழிவைப் பாரும். உமது நாட்டுப் பெண்களின் பதிவிரதா தர்மம் சீர்குலைவதைப் பாரும். உமது நாட்டின் கிராமங்கள், நகரங்கள் சூறையாடப்படுவதைப் பாரும்' என்று பிரார்த்தித்தனள். இவைக்கும் செவிசாய்க்காதவனாக 'போதும், போதும், வெளியே போ, ஒன்றும் முடியாது' என்று சொல்லவே, 'பிதாவே! என் விண்ணப்பங்களெல்லாம் வீணாகவா போகவேண்டும்? நீர் உம்முடைய பெண்ணை முன்னர் கொன்றுவிட்டுத்தான் பின்னர் மகமதியர்களினால் எனது தாய்மார்கள், சகோதரிகள் முதலிய இந்தியப் பெண்களின் பதிவிரதா தர்மத்தைப் பங்கப்படுத்தச் செய்யலாகும். ஓ பிதாவே! வெட்கம், மிக்க வெட்கம். நீர் மகம்மது கோரியுடன் சேர்ந்து உமது நாட்டை இஸ்லாத்திற்கு அடிமைப்படவா செய்ய இந்துவாகப் பிறந்து என்னையும் உமது குமாரியாகப் பெற்றீர்?' எனச் சினந்து கண்டிக்க முற்படவே, ஜயசந்திரன் தன் கூடாரம் விட்டு வெளியே சென்று 'என்னைப் பார்க்கவந்த வாலிப வீரனை அவன் இருப்பிடத்திற்குச் செல்லச் செய்துவிடுங்கள்' என ஆக்ஞையிட்டுவிட்டுத் தான் குதிரை சவாரியாகி மகம்மது கோரியின் காம்பிற்குச் சென்றுவிட்டனன். வீரர்களும் உடனே அக்கூடாரத்தினுட்புகுந்து இவ்வாலிபனைத் தன்னிடம் ஏகும்படி ஆக்ஞாபிக்கப்பட்டிருப்பதாகச் சொல்லவே, தானும் மௌனமாகத் திரும்பி யமுனை நதியின் இக்கரைக்கு வந்து தன் மாளிகையின் உட்புகுந்துவிட்டனள். இங்கு பிருதிவிராஜனும் தான் இவ்வமயம் வெற்றிகொள்ளப் பல சந்தர்ப்பங்களைக் கொண்டில்லையென நன்குணர்ந்தவனாகி மிக்க ஆழ்ந்த சிந்தனையில் எவ்விதம் தன் நாட்டையும், தன் மதத்தையும், தன் பெண்மக்களையும் பாதுகாப்பது என யோசித்துக்கொண்டிருந்தான். இராணி சம்யுக்தாவும் தன் தகப்பனிடம் சென்று மன்றாடியது ஒரு பிரயோஜனத்தையும் அளிக்கவில்லையே என்ற ஏக்கங்கொண்டவளாகி, தன் வாலிப உடையைக் களைந்தெறிந்து பெண் உடை தரித்துப் பெரும் சிந்தனையில் தன் மாளிகையிலிருக்கலானாள்.

சற்று நேரத்திற்கெல்லாம் பிருதிவிராஜன் இராணி சம்யுக்தாவின் மாளிகைக்குச் சென்று

நடைபெறப்போகும் யுத்தத்தின் முடிவைக் கூறி, அதிகாலையில் தான் தன் படையை இந்து தர்மத்தின் பாதுகாப்பிற்கெனவும், இந்துப் பெண்களின் பதிவிரதா தர்ம பரிபாலனத்திற்கெனவும் நடாத்திப் போர்புரிய அரங்கமேறத் தீர்மானித்து விட்டதால், தான் உயிருள்ள அளவும் போர்புரிவதாகவும் இதில் தன் படை வீரர்களும் பின்வாங்கார்களெனவும் உறுதி கூறி, 'சம்யுக்தா, நீ டெல்லிக்கோட்டையை எதிரிகள் தாக்காத வகையில் பாதுகாத்துக்கொண்டிருக்கவேண்டும்' எனச் சொல்லிப் பிரியலாகினன். இதைச் செவிசாய்த்த சம்யுக்தா மகாராணி 'அப்படியே செய்குவேன்! எதிரிகள் கோட்டையின்மீது ஆக்கிரமணம் செய்ய வலுவடைந்தவர்களாகுவரேல், கோட்டையினுள் ஒரு பெண் இனத்தையும் காணார் என்பதைமட்டும் பிரிய நாயகனாகிய உமக்குத் தெரிவித்துக் கொள்கின்றேன்' என்றனள். இவ்விதமான சம்பாஷணையின் பின்னர் இருவரும் பிரிவுற்றனர். அதிகாலையில் படைகளை அரங்கமேற்றிப் போர்புரிய பிருதிவிராஜன் முற்பட்டனன். கோட்டையைப் பாதுகாக்கப் பெரும் படையை அணிவகுத்துப் பிருதிவிராஜனின் உடைகளை அணிந்து மகாராணி சம்யுக்தா பிருதிவி இராஜனைப் போலவே வீரர்களின் தலைமை வகித்தனள். யுத்தம் ஆரம்பமாகியது. சில நாட்கள், வாரங்கள் ஆகின. இருதிறத்தினர்களும் யமுனை நதிக்கு அக்கரையிலும் இக்கரையிலும் இருந்தனர்கள். யமுனையைத் தாண்ட முற்படும் மகம்மது கோரியின் படையைத் தாக்கித் திரும்பச் செய்துகொண்டே பிருதிவிராஜனின் படைகளிருந்தன. மகாராணி சம்யுக்தாவும் தன் கோட்டையை எதிரிகள் தாக்கக்கூடாது எதிரிகள் படைகளைப் பின்வாங்கச் செய்துகொண்டே இருந்தனள். இவ்வம்மையாரைப் பின் பற்றி டெல்லியின் பெண்மணிகள் பலர் வீரர்களின் வேடம் பூண்டு தம் நகரத்தின் கோட்டையைப் பாதுகாக்கவும் முற்பட்டனர். எதிரிகள் கோட்டைக்கு முன்புறம், யமுனைக் கப்புறமுள்ள கிராமங்களையும் நகரங்களையும் கைப்பற்றினதினால் உணவுப்பண்டங்களின் தினசரி வரத்து குறைவாகவே இம்மகாராணியார், தம்வசமிருந்த நல்லுணவுகளைத் தன் படைக்கு அளித்துவிட்டு தான் சில வாரங்கள் ஒருவேளை போஜனமருந்தியும், சில நாட்களில் ரொட்டியும் தண்ணீரும் அருந்தியுமே இருந்தனள்.

முடிவாகச் சில மாதங்களில் பிருதிவிராஜனின் சேனை முறியடிக்கப்பட்டு, பிருதிவிராஜன் பல காயங்களடைந்து போர்க்களத்தில் மாண்ட வீரர்களின் குவியல்களின் அருகில் கீழ்வீழ்ந்து மாண்டனன். முகம்மது கோரி முற்றிலும் ஜயமடைந்து ராஜா ஜயசந்திரனைப் போற்றலானன். இச்செய்தி டெல்லிக்கெட்டவே, சம்புக்தா மகாராணி ஒரு பெரும் நெருப்பை வளர்த்து தன் பெண்வீர சமூகத்துடன் நெருப்பில் வீழ்ந்து மாண்டனள். ஜயசந்திரன் இச்செய்தி கேட்கவே தன் அரும் புதல்வியின் பதிவிரதா தர்மத்தைச் சிந்தித்தவனாகி விசன சாகரத்தில் ஆழ்ந்து தன் படை வீரர்களை விட்டுப் போர்க்களத்தில் மடிந்த இந்து வீரர்களுக்கு தகனக்கிரியை நடாத்தும்படி ஆக்ஞாபிக்க, பிருதிவிராஜன் தன் வீரர்களுடன் வீர சுவர்க்கமேகினன். டெல்லியின் அரசியாகிய சம்புக்தாவும் அவள் சகாக்களாகிய பெண்வீரர்களும் தம் பதிவிரதா தர்மத்தைக் காப்பதற்கென அக்கினிக்கிரையானார்கள். ஜயசந்திரன் தன் மதியீனத்தை நினைத்து நினைத்துப் புண்பட்டவனாகி தன் படையுடன் கனௌஜ் ஏகினன். இரண்டாம் ஆண்டில் இவன் நண்பனாகிய மகம்மது கோரி கனௌஜின்மீது படையெடுத்து முறியடித்து ஜயசந்திரனைச் சிரச்சேதம் செய்தனன். அவ்வுத் நாடும் அதன் சுற்றுப்புறமும் டெல்லி மகம்மதிய அரசியலின் கீழாயின.

மங்கையரின் உரிமைகள்.

(ஸ்ரீமான் S. தேசிகவிநாயகர்.)

கும்மி.

மங்கையராகப் பிறப்பதற்கே—நல்ல
மாதவம் செய்திட வேண்டுமம்மா
பங்கையக்கை நலம் பார்த்தலவோ—இந்தப்
பாரில் அறங்கள் வளருமம்மா. (1)

அல்லும் பகலும் உழைப்பவரார்? உள்ளத்
தன்பு ததும்பி யெழுபவரார்?
கல்லும் கனியக்கசிந்துருகித்—தெய்வ
கற்பனை வேண்டித் தொழுபவரார்? (2)

ஊக்கமுடைந்தழு மேழைகளைக்—காணில்
உள்ளமுருகித் துடிப்பவரார்?
காக்கவே, மற்றுளோர் தூங்கையிலே—இரு
கண்ணிமை கொட்டாதிருப்பவரார்? (3)

சிந்திய கண்ணீர் துடைப்பவரார்? பயம்
சிந்தைய கன்றிடச் செய்பவரார்?
முந்து கவலைபறந்திடவே—ஒரு
முத்தமளிக்க வருபவரார்? (4)

உள்ளந்தளர்வுறு நேரத்திலே—உயிர்
ஊட்டும் உரைகள் உரைப்பவரார்?
அள்ளியெடுத்து மடியிருத்தி—மக்கள்
அன்பைப் பெருக்கி வளர்ப்பவரார்? (5)

ஆவிபிரியு மவ்வேளையிலே பக்கத்
தன்போட கலாதிருப்பவரார்?
பாவி யமனும் வருத்திடாமல் ஈசன்
பாதம் நினைந்திடச் செய்பவரார்? (6)

நீதியிறந்தலை வம்பருமே நல்ல
நேர்வழி வந்திடச் செய்பவரார்?
ஓதியமான மிழந்தவரை—உயர்
உத்தமராக்க முயல்பவரார்? (7)

ஏங்கிப்புருஷனைத் தேடியழுமந்த
ஏழைக் கிதஞ்சொல்லி வாழ்பவரார்?
தாங்கியதந்தை யிழந்தவரைத் தினம்
சந்தோஷமூட்டி வளர்ப்பவரார்? (8)

சின்னஞ் சிறியவயதினிலே ஈசன்
சேவடிக் கன்பெழச் செய்பவரார்?
உன்னுமிளமைப் பருவமெலாம் களிப்
புள்ளம் பெருகிடச் செய்பவர்யார்? (9)

மண்ணக வாழ்வினை விட்டெழுந்து மனம்
மாசிலா மாணிக்கமா யொளிர்ந்து
விண்ணகவாழ்வை விரும்பிடவே நிதம்
வேண்டிய போதனை செய்பவர் யார்? (10)

அன்பினுக்காகவே வாழ்பவரார்? அன்பில்
ஆவியும் போக்கத் துணிபவரார்?
இன்பவுரைகள் தருபவரார்—வீட்டை
இன்னகையாலொளி செய்பவரார்? (11)

இப்பெரும் நற்கருமங்களெலாம் உமக்
கீசனளித்த உரிமைகளாம்
மெய்ப்பணி வேறுமுலகிலுண்டோ இன்னும்
வேண்டில் பெறும் வரமொன்றுளதோ? (12)

மங்கையராகப் பிறந்ததினால் மனம்
வாடித்தளர்ந்து வருந்தவேண்டாம்
தங்குபுவியில் வளர்ந்திடும் கற்பக
தாருவாய் நிற்பதும் நீரலவோ? (13)

செம்மையிற் பெற்ற குணங்களெலாம் நீவிர்
செய்வினையாலே திருத்துவிரேல்
இம்மைக்கடன்கள் முடிந்திடவே—மோக்ஷம்
எய்திச் சுகமாயிருப்பீரே. (14)

அன்பின் பங்கு.

II.

(443-வது பக்கத் தொடர்ச்சி.)

அன்ன பூரணி அம்மாள் கலியாண வேலைகளை எல்லாம் விரைவாகச்செய்ய ஆரம்பித்தனள். இவ்விஷயத்தில் யாதொரு குறைவுமுண்டாகாமல் மிகவும் மேன்மையாக இருக்க வேண்டுமென்பது அய்யருடைய விருப்பம். அதற்கேற்றபடி சகலமும் அவருக்கு அநுகூலமாயிருந்தது. ஏனென்றால், பிதுரார்ஜித சொத்து ஏராளமாயிருந்த தல்லாமல் இவரும் அத்துடன் பணம் சேர்த்திருந்தமையால் பணத்திற்குக் குறைவேயில்லை. வீட்டில் சகல அதிகாரமும் அன்னபூரணி அம்மாள் கையிலிருந்தது. அவள் ஒரு காரியத்தை நினைத்தால் அது நிறைவேறித்தான் தீரவேண்டும். ஏனென்றால் அவளுக்கு மறுத்துப் பேசுகிறவர் ஒருவருமிலர். குப்புசாமி ஐயரே அவளுக்குப் பயப்படுவார். இதைப்பற்றி கிளப் முதலிய இடங்களில் அவருடைய சிநேகிதர்கள் குப்புசாமி ஐயரை எப்போதும் பரிகாசம் செய்வார்கள். எந்த சமயத்திலும் குப்புசாமி ஐயர் சட்டென்று சம்மதம் கொடுக்க மாட்டார். மனைவியின் அனுமதியின்றி அவர் யாதொன்றும் செய்யத் துணியார். இது மாத்திரமன்று, மனைவி எதைச் சொன்னாலும் அவர் செய்யத்தான் வேண்டியதாயிருக்கும். அதனால் வீட்டில் வெளியில் எங்கும் அன்னபூரணியம்மாள் மிக்க செல்வாக்குள்ளவளாயிருந்தாள். குடும்பக் காரியங்களிலும் மற்ற விஷயங்களிலும் வீட்டிலுள்ள மனைவியின் யோசனைப்படி நடப்பதே நம்மவர்களின் குடும்ப முன்னேற்றத்திற்குக் காரணமென்பதை மறுப்பாரில்லை. ஆனால் தீர்க்க ஆலோசனையின்றி நினைத்தபடிக்கெல்லாம் எந்தக் காரியத்தையும் அன்னபூரணி அம்மாள் செய்வதும், அது நேர்த்தியாயிருப்பதாகவே குப்புசாமி ஐயர் தலையை அசக்குவதும் அக்குடும்பத்தில் வழக்கமாயிருந்தது. அது போலவே இக்கலியாண விஷயத்திலும் அன்னபூரணி அம்மாள் முற்பட்டாள். ஒவ்வொரு காரியமும் அன்னபூரணி அம்மாள் இச்சைப்படியும் உற்சாகத்தின்படியும் செய்யப்பட்டது. கலியாணமும் குறைவின்றி நிறைவேறியது. சம்பந்தியும் நல்லவர்களாகவே கிடைத்திருந்தனர். அவர் மிக்க தனவானாயிருந்தார். அவருக்கு இந்து ஒரே புதல்வி தானிருந்தாள். காலவழக்கப்படி அவர் அவளுக்குக் கல்வி கற்பித்திருந்தனர், அழகிய முகமும், மதுரமான வார்த்தையும் வைபவத்திற்குத் தக்கபடி ஆடையாபரணமும் இவைகளால் அவள் லக்ஷ்மியைப் போலவே இருந்தாள். இத்தகைய அழகிய பெண்ணை மருமகளாக்கிக் கொண்டு அன்னபூரணி அம்மாள் மனமகிழ்ந்தாள். முதல் இரண்டு தடவை இந்து புக்ககம் வந்தபோது வீட்டிலிருக்கும் சில்லரை வேலை செய்வதிலும் மாமியார் இஷ்டம் போல் அலங்கரித்துக்கொண்டு மாமியாருடன் சுற்றுவதற்கும் சரியாயிருந்தது. தன் இச்சைக்கு மாறுதலாய் விவாகம் செய்துகொண்ட போதிலும் அதனால் தன் அன்னைக்கும் சகோதரிக்கும் உண்டான ஆனந்தத்தைக்கண்டு அப்புவுக்கும் சமாதான முண்டாயிற்று.

III.

வஸந்த காலம் சிறுவர் முதல் பெரியோர் வரையில் சாதாரணமாக எல்லோருக்கும் ஆனந்தத்தைக் கொடுக்கக்கூடியது. யௌவனப் பருவத்திலுள்ள வாலிபர்களுக்கும் யுவதிகளுக்கும்

ஆனந்தத்தைக் கொடுப்பதில் புதுமை என்ன? அன்று வருஷப் பிறப்பாயிருந்தது. எல்லோரும் அறுசுவையுடன் கூடிய போஜனத்தைப் புசித்திருந்தமையால் ஆங்காங்கு படுத்துப் புரண்டு நித்திரை செய்து கொண்டிருந்தனர். இந்து மாத்திரம் மருமகளானபடியால் சற்று சோம்பலை விலக்கிக் காப்பி தயாரித்துக் கொண்டிருந்தாள். பண்டிகையாயிருந்த படியால் இன்று விசேஷமான ஆபரணங்களையும் அணிந்திருந்தாள். பாலிய திசை நீங்கி யௌவன பருவத்தில் பிரவேசிக்கும் இப்பெண்மணி காப்பிப் பாத்திரங்களை எல்லாம் பணிக்காய் வைக்கும்போது ரத்தினாபரணங்கள் அணிந்த அவளுடைய திரண்டுருண்ட கைகள் அசைய அவள் மிகவும் மனோகர மூர்த்தியாய்க் காணப்பட்டாள். இதே சமயத்தில் அப்பு மாடியிலிருந்து எழுந்து கீழே வந்தான். வரும்போது பின் பக்கத்து மாடியில் தாயாரும் சகோதரியும் படுத்துக் கொண்டிருப்பதைப் பார்த்திருந்தான். கீழே வந்து பார்த்தால் சுப்புத்தம்பியும் ஊஞ்சலில் படுத்து வெய்யிற் காலத்து சுகமான நித்திரையின் ருசியைப் பூரணமாக அனுபவித்துக் கொண்டிருந்தான். உள்ளே வந்து பார்த்தால் ஓர் ரம்மியமானக் காட்சி அவன் முன்னிலையில் காணப்பட்டது. இச்சையில்லாமலிருந்த போதிலும் அவனுடைய கண்கள் அங்கு நாடின. வீட்டில் எங்கும் சாந்தமாயிருப்பதைக் கண்டு அவன் ஓர் அடி எடுத்து முன்னுக்கு வைத்தான். ரசிகனில்லாத இம்மனிதன் கூடச் சற்று மனம் மாறினான். யௌவனம் என்னும் அரசன் தன் அதிகாரத்தை அவன் பேரில் செலுத்தலானான். இரண்டடி முன்னுக்குப் போய் அவன் புன் சிரிப்புடன் 'காப்பி ஆய்விட்டதா' எனமெல்லக் கேட்டான். தன் காரியத்திலாழ்ந்திருந்த இந்து இதைக் கேட்டு திடுக்கிட்டு, தலையை நிமிர்ந்து பார்த்த போது அனுபவமில்லாத ஒருவித லஜ்ஜையானது அவளைச் சூழ்ந்துகொண்டது. லஜ்ஜையினால் அவள் முகமானது சிவந்தது. கையிலிருக்கும் காப்பிப் பாத்திரங்கள் கீழே விழுந்து விடும்போல் அவளுக்குத் தோன்றியது. அவள் வாயினின்றும் வெளிவரும் வார்த்தைகளைக் கேட்க ஆத்திரங்கொண்டவனாய் அவன் மறுபடியும் சொன்னான் "காப்பி ஆயிற்றா?" என்று.

அப்பொழுது மிகவும் மதுரமான குரலுடன் "இல்லை" எனனும் ஒரே வார்த்தை அப்புவுக்குக் கேட்டது. அப்புவும் யாராவது வந்து விடுவார்களோ, நல்லவேளை, ஒருவரும் எழுந்திருக்காமலிருக்கவேண்டுமே என்கிற பயத்தினால் இங்குமங்கும் பார்த்துக்கொண்டே மாடிக்கு சென்றான். செல்லும்போது ஓர் அழகிய முகத்தை தனது உள்ளத்திற் பதிய வைத்துக் கொண்டு போனான்.

அப்பு வந்தபோது யாராவது வந்து விடுவார்களோ, யாராவது பார்த்து விடுவார்களோ என்று இரண்டு மூன்று விதமாக அவள் மிகவும் பயந்தாள். அந்த பயமென்னும் பாரம் இப்பொழுது தான் இந்துவுக்குக் குறைந்தது. அத்துடன் அந்த சமயம் இவ்வளவு சீக்கிரத்தில் எப்படி முடிந்து விட்டதென்று அவளுக்கு ஒரு விதமான வருத்தமுமுண்டாயிற்று. 'அந்த உருவத்தை மறுபடியும் எப்பொழுது காண்பேன்? இத்தகைய மதுரமான வார்த்தைகளுடன் என்னுடன் எப்பொழுது பேசுவார்? புன் சிரிப்புடன் என்னை எப்பொழுது பார்ப்பார்'? என்கிற இத்தகைய எண்ணம் முதன் முதல் மனதிலுதித்தது. இச்சம்பவத்திற்குப் பிறகு அவ்விருவர்களுடைய மனமும் ஒன்றுக்கொன்று ஆகர்ஷிக்கலாயிற்று.

தினமும் மத்தியானம் ஒருவரும் தூங்கி எழுந்திருப்பதற்கு முன்னதாகவே போய் காப்பி தயார் செய்ய வேண்டுமென்று இந்துவுக்குத் தோன்றலாயிற்று. எப்பொழுது நான்

கீழேபோய் காப்பி ஆயிருக்கிறதோ இல்லையோ என்று பார்ப்பேன் என்று அப்புவுக்கும் தோன்றிற்று. இவ்வாறாக, இத்தகைய சாந்தமான நேரத்தில் இருவரும் சந்திக்கலானார்கள். தற்சமயத்தில் ஒருவருக்கொருவர் பார்த்துக் கொள்ளுவதும் சிற்சில சமயத்தில் சுருக்கமான சம்பாஷணையும் ஆரம்பமாயிற்று. ஆனால் இன்னும் இச்சங்கதி மூன்றாவது ஆசாமிக்குத் தெரியாது. அப்புவுக்குத் தான் விவாகம்செய்து கொண்டது பற்றி ஒருவிதமான ஆனந்த முண்டாகிக் கொண்டிருந்தது. தாய் தந்தையரின் தாட்சணியத்திற்காகத்தான் மணம் புரிந்து கொண்டபோதிலும் தான் அதனால் சுகி ஆனதாக அவனுக்குத் தோன்றலாயிற்று.

IV.

தீபாவளி வந்தது. இந்துவின் பிறந்தகத்திலிருந்து பின்வருமாறு கடிதம் வந்தது:—“இவ்வருஷம் தீபாவளிப் பண்டிகை கொண்டாடுவதற்குச் சௌகரியமில்லாமலிருக்கிறது. இருந்தபோதிலும் விவாகமான பிறகு மாப்பிள்ளையைப் பார்க்கவேயில்லை. ஆதலால் சௌ. இந்துவையும் அவரையும் நான்கு நாள் இவ்விடத்திற்கு அனுப்பவேண்டும்.” இந்துவந்தும் வெகு நாளாயிற்று. அதனால் அவளை அனுப்பவும் அவசியமாயிருந்தது. அப்புவுக்கும் மாட்டேன் என்று சொல்லும்படி யாதொரு காரணமும் இருக்கவில்லை. எனவே குப்புசாமி ஐயர் அப்புவை அழைத்து “நீ உன் மனைவியை அழைத்துக்கொண்டு போய்வா” என்று உத்தரவு அளித்தனர். இச்சமயத்தில் அன்னபூரணிஅம்மாள், அப்பு தீபாவளிக்கு இல்லாமற் போவதைப்பற்றிச் சில்லரை இடையூறுகளெல்லாம் சொல்லி, அவனை அனுப்பாமலிருக்கக் கூடிய வரையில் முயன்றாள். சம்பந்தி பிராம்மணருடைய மனதிற்கு ஆயாசத்தைக் கொடுப்பது சாத்தியமில்லை என்று குப்புசாமி ஐயர் அதைப் பொருள் படுத்தவில்லை. தனக்கு இஷ்டமில்லை என்பது தெரிந்தால் அப்பு போகமாட்டான் என்று அன்னபூரணி அம்மாளுக்குத் தோன்றியது. ஆனால் அப்படியொன்றும் நேரவில்லை. காரணம் அப்புவின் நோக்கம் இச்சமயத்தில் மாறி இருந்தது. பத்தினியுடன் முதன் முதலாக இரண்டு நாள் பிரயாணஞ் செய்யத் தருணம் கிடைக்கப் போகிறது. அங்குபோன பிறகு கொஞ்சம் அதிக சுதந்திரம் கிடைத்து, கொஞ்சம் அதிக பரிச்சய முண்டாகப் போகிறது என்கிற ஆனந்தத்தில் அப்பு இருந்தான். தீபாவளியாயிற்று. அப்புமட்டும் வேட்டகத்தினின்றும் திரும்பி வந்தான். இப்பிரயாணம் அவனுக்கு ஆனந்தமாகத் தோன்றியது. இந்துவுடன் சற்று நெருங்கிய பழக்கமுமுண்டாயிற்று. அதனால் இந்துவின் வெளித் தோற்றத்தைப்போலவே அவளுடைய உள்ளமும் சற்குணங்களால் அலங்கரிக்கப்பட்டிருப்பதைப் பார்த்து அவனுக்கு மட்டற்ற மகிழ்ச்சியுண்டாய், தான் மிகவும் பாக்கியவானாயிருக்கிறதாக அவனுக்குத் தோன்றலாயிற்று.

V.

அப்பு தீபாவளிப் பண்டிகைக்குப் போய் வந்ததுமுதல் மிக்க ஆனந்தத்திலிருந்தான். சம்சாரமென்றால் சகல சுகத்தின் இருப்பிடமென்று தற்காலம் அவனுக்குத் தோன்றியது. சாஸ்திர சம்பந்தமான புஸ்தகங்கள் படிப்பது முன்னிலும் குறைந்து கொண்டே போயிற்று. அவ்விடத்தைக்காவியங்கள், நாவல்கள், நாடகங்கள் இவைகள் அபகரித்துக் கொண்டன. அவற்றிலுள்ள காதலர்களுடைய பிரிவாற்றாமையைப் பற்றி வருணித்திருக்கும் பாகத்தையும், காதல் விஷயமான பாட்டுகளையும் முணுமுணுத்துக் கொண்டும், தனக்குக்கூட இந்துவின் பிரிவினால் இப்படித் தான் தோன்றுவது போல் கற்பனை செய்துகொண்டும், அக்கற்பனையால்

துக்கப் படுவதில் அவனுக்கு ஒரு விதமான திருப்தி உண்டாய்க் கொண்டிருந்தது. இரவுகளில் வெகு நேரம் வரையில் புஸ்தகங்களைப் படித்துக் கொண்டும், கற்பனையால் மனோராஜ்யம் செய்துகொண்டு கண் விழிப்பதும், காலையில் நேரம் பொருத்து எழுந்திருப்பதும், மாலைகளில் ஜன நெருக்கமில்லாத ஏகாந்தமாக நிர்மானுஷ்யமான இடத்திற்கு உலாற்றப் போவதும் தான் அவனுக்குத் திருப்தியுண்டாக்கின. அவனுடைய இக்காரியக் கிரமத்தினால் இயற்கையாகவே தாயாருடனும் சகோதரியுடனும் பொழுது போக்கும் நேரம் குறைந்துகொண்டே வந்தது. காலைக்காப்பி எல்லாருக்கும் பின்னிட்டும், இரவு போஜனத்திற்கு லட்டமும் பிடியுமாய் வருவதுமாயுமிருந்தது. அதனால் முன் போல் தாயிக்குக் காப்பிப் பாத்திரங்கள் கொண்டு வந்து கொடுப்பது, காப்பியில் பாலை ஊற்றுவது, மாலைகளில் அடுப்பங்கரையிலுட்கார்ந்து சமாசாரப் பத்திரிகை படித்து வம்பளப்பது, அவளுடைய சமையலைப்பற்றி வக்கணை செய்வது முதலியவை யெல்லாம் நின்று விட்டது. அதனால் அவ்விருவருக்கும் எப்படியோ இருந்தது. தாயார் சொல்லுவாள்:—“அப்பூ? என்னடா நேரம் பொருத்து எழுந்திருக்கிறாய்?”

“போ அம்மா! தூக்கமே போதவில்லை, என்னுடைய காப்பியை மூடிவைத்து விடு.”

தாயீ சொன்னாள்:—“அண்ணா' சற்று சீக்கிரம் சாப்பிட வந்தாலென்ன?”

“இதோ பார் தாயீ! சாயங்காலமானாலொழிய உலாவுவதில் உற்சாக முண்டாவதில்லை; அதனால் வீட்டிற்கு வருவதற்குள் பொழுது போய் விடுகிறது.”

அவனுடைய இந்நடத்தைகண்டு அவ்விருவருக்கும் ஒரு விதமாகத் தோன்றியது. இருந்த போதிலும், அப்பு இப்போது பெரியவனாய் விட்டான். அவன் நடத்தையில் மாறுதல் உண்டாவது இயற்கையே என்று அன்னபூரணி அம்மாளுக்குத் தோன்றியது. இந்துவும் பிறந்தகத்திலிருந்து திரும்பி வந்தாள்; வீட்டுக்காரிய கிரமமெல்லாம் முன் போலவே நடந்து வந்தது. அப்புவின் நடத்தையில் மாறுதலுண்டானது ஒவ்வொருவருக்கும் தெரியவாலாயிற்று. அப்படியே அன்னபூரணி அம்மாளுடைய சுபாவத்திலும் சிடு சிடுப்பு, கடு கடுப்பு எல்லாம் விருத்தியடையலாயின. இப்பொழுது அவளுக்கு மருமகள் பேரில் முன்னிருந்த அன்பும் குதூகலமும் நாளுக்கு நாள் குறைந்து கொண்டே வந்தன.

தாயம்மாளுக்குங்கூட மதனியைப் பற்றி என்னவோ வித்தியாசமாகத்தோன்றலாயிற்று. நாட்கள் செல்லச் செல்ல இந்துவுக்கு வீட்டில் அதிகப் பழக்க முண்டாய், அவளும் அந்த வீட்டு ஜனங்களில் ஒருவளாக பாவிக்கப்பட்டு, அப்புவும் அவளுடன் ஒளிந்து ஒளிந்து இரண்டொரு நாள் வார்த்தைகள் பேசலானான். தாயியின் பெயரைச் சொல்லி அப்பு காப்பி கேட்பதும், இந்து பேசாமல் காப்பி கொண்டு வந்து முன்னில் வைப்பதுமாயிருந்தது. ஒரு நாள் இச்சமயத்தில் அன்னபூரணி அம்மாள் மறைவிலிருந்து இதைக் கவனித்து அப்பு போனதும் “இக்காலத்துப் பெண்களுக்கு தைரியம் அதிகம். அவர்களுக்கு ஒன்றும் கற்றுக் கொடுக்கவே தேவையில்லை. அவர்களுக்குத் தம் கணவனைப்பற்றியகவலையோ ஒருவரும் சொல்லாமலே எடுத்துக் கொள்ளுகிறார்கள். இனிப்பெரியோர்களுடைய அவசியமே கிடையாது” என்று முணுமுணுத்தாள். இவ்வார்த்தை இந்துவின் காதிற் கெட்டியது. மாமியாருக்குப் பிடிக்காத காரியத்தை ஏன் செய்யவேண்டும் என்று நினைத்து, அவளும் தாயியின் பெயரால் கணவன் வந்து கேட்டால் தனக்குத் தெரிந்தும் தெரியாதது போலிருக்கலானாள். மாமியார் சொன்னாலொழிய காப்பி கொடுப்பதும், பட்சணம்

கொடுப்பதும் அவளால் முடியாமற் போயிற்று. அப்பு அலுத்துப் போனான். மனைவி கொடுக்க மாட்டாள்; தாயாரைக் கேட்கமாட்டான். பிறகு அவன் தாயாரிடம் சென்று "அம்மா? காப்பிசெய்து கொடுக்கமாட்டாயா? ஏதாவது தின்னச் செய்து கொடுக்கும்படி தாயியிடம் சொல்லேன்; சுப்புத் தம்பி எங்கு போனான்?" என்று சொன்னான், அன்னபூரணி அம்மாள் "ஏனப்பா! தாயி என்ன உங்களுடைய வேலைக்காரியா? அவளுக்கேன் தொந்தரவு? உண்மை தான்! எனக்குப் பின்னிட்டு அவள் உங்களுக்கு ஊழியஞ்செய்து தான் காலத்தைக் கழிக்கவேண்டும் போலிருக்கிறது. ஆனால் இப்பொழுது நான் இருக்கிறேனே இல்லையோ, என் மனம்சகிக்குமா" என்பாள். "அம்மா, இப்படி ஏன் பேசவேண்டும்? இப்படி என்றைக்காவது நான் தாயியை நடத்துவேனா? முன்னெல்லாம் அவள் செய்து கொண்டிருக்கவில்லையா? இல்லாவிட்டால் வேறே யாருக்காவது சொல், எனக்குப் பசிக்கிறது." இப்படி அவன் அன்புடன் சொன்னால் அன்னபூரணி அம்மாள் முகத்தைச் சுளுக்கிக்கொண்டு தாயியைக் கூப்பிட்டு ஏதாவது கொடுக்கும்படி சொல்லுவாள். இவ்வாறு சில தினங்கள் கடந்தன. அன்னபூரணி அம்மாள் தன் உத்தரவின்றி வீட்டில் ஒருவருக்குமே காப்பி, பட்சணம் ஒன்றும் கொடுக்கக் கூடாதென்று மருமகளுக்குக் கட்டளையிட்டாள். அப்புவுக்கோகேட்டாலன்றி ஒன்றும் கிடைக்காது. தினமும் தாயாரிடம் போய் தொந்தரவு செய்வதென்றால் அவனுக்குப் பிடிக்கவில்லை. அவன் மனையாளைக் கேட்டான்; அவள் சொன்னாள். "தன்னைக் கேட்காமல் ஒன்றும் கொடுக்கக்கூடாதென்று மாமியார் சொன்னார்." அப்புவுக்கு அது முற்றிலும் உண்மையென்று தோன்றவில்லை. தனக்குக் கொடுக்கத் தன் தாயார் வேண்டாமென்று ஒரு போதும் சொல்வது கூடாத காரியம். மனைவி தான் ஏதோ தப்பான எண்ணத்தைக் கொண்டிருப்பதாக அவனுக்குத் தோன்றியது. ஒரு நாள் மாலை ஐந்து மணிக்கு அன்னபூரணி அம்மாளும் தாயியும் எங்கோ வெளியிற் சென்றிருந்தனர், இந்து தனியாகயிருந்தாள். அப்பு ஒரு நண்பனுடன் வீட்டிற்கு வந்து, இரண்டு கப்பு காப்பி செய்யச்சொன்னான். இந்து தயங்கலானாள்; அப்பொழுது அவன் அவள் பேரில் கோபங்கொண்டான்; காப்பியானதும் வீட்டில் காலையில் செய்த வடையிருந்தது. அதை அப்படியே அவள் கையிலிருந்து அப்பு வாங்கிக்கொண்டுபோய் நண்பனும் அவனுமாய்த் தின்று காப்பியைக் குடித்து விட்டு நண்பனுடன் வெளியிற் சென்றான். சற்று நேரத்திற்கெல்லாம் மாமியார் வந்தாள். காப்பிப் பாத்திரங்களெல்லாம் வெளியிற் கிடப்பதைப் பார்த்தாள். காப்பி செய்து கொடுத்த சங்கதி தானாகவே தெரிந்தது. பிறகு இந்துவைக் கேட்டபோது, அவளும் வடையும் காப்பியும் கொடுத்ததைச் சொன்னாள். பிறகு ஏன் கேட்கிறீர்கள். அன்னபூரணி அம்மாள் ஆகாச பாதாளம் ஒன்றாகச் செய்துவிட்டாள். அன்னபூரணி அம்மாள் இதே நிமித்தமாய்ப் பேச வாரம்பித்தாள்:—

"நான் பத்துத் தடவை சொன்னேன், நீ கேட்கவே இல்லை. நீ இதற்குள் வீட்டு எஜமானி ஆகவேண்டுமென்று பார்க்கிறாய். ஆனால் இதெல்லாம் இன்னும் என் அதிகாரத்திலிருக்கிறது. இங்கு உன்னுடைய அதிகாரம் ஒன்றும் செல்லாது. உனக்கு அதிகாரம் தேவையிருந்தால் நீ உன் புருஷனிடம் சொல்லி வேறே குடித்தனம்செய். அவ்வடை உன் மாமனாருக்குக் கொடுக்க வேண்டுமென்று வைத்திருந்தேன். அதைக்கூட நீ சரிபண்ணி விட்டனை, உன்னுடைய கண்ணிற்கு நீயும் உன் புருஷனைத் தவிர வேறொன்றும் தெரியவில்லை. கலியாணமாய் இன்னும் நான்கு நாட்கள்கூட ஆகவில்லை! அதற்குள் ரொம்பத்தான் கொஞ்சாள்! இதுவரையில் அவன் கொஞ்சாமலே வளர்ந்தானென்று தெரியாதுபோலும்! நல்லதாயிற்று!" இப்படி ஒன்றல்ல இரண்டல்ல, இச்சொல்லம்புகளால் இந்து மிகவும் நொந்துபோய் விட்டாள். பாபம், கண்ணீர் விட்டழுவதைவிட வேறு என்ன அவளால் செய்ய முடியும்?

இது நடந்தபிறகு கூடியவரையில் அவள் அந்தக் காப்பி விவகாரத்தில் தலையிட்டுக்கொள்வதில்லை. அப்பு வந்து தாயாரிடம் கேட்டால் அன்னபூரணி அம்மாள் சொல்லுவாள்: "அப்பா! உனக்குக் கலியாணம் செய்து வைத்தாயிற்று, எல்லாமாயிற்று. இனி ஏன் எனக்கு இந்தச் சள்ளை? இவ்வளவு காப்பி செய்யக்கூடவா உன் பெண்சாதியால் முடியாது? புதிய துடப்பம் மூன்றுநாள்தான் செவ்வையாய்ப் பெருக்குவதுபோல், புதிதாக வந்த நான்குநாள் கொண்டாட்டமெல்லாம் ஆயிற்று போலிருக்கிறது. இப்பொழுது அதுவும் செய்ய முடியவில்லை. இவ்வளவு சோம்பேறித்தனமென்ன? வீட்டில் வேலைதான் என்ன இருக்கிறது? அதே தாயியைப் பார். அவள் பிறந்தகத்துப் பெண்ணாயிருந்து, புக்ககத்துப் பெண்ணைவிட அதிகமாகப் பாடுபடுகிறாள். எங்கள் சுபாவமே இது. எங்களை யாராவது உட்காரச் சொன்னாலுங்கூட உட்கார முடியாது. உம், தாயி! அண்ணாவுக்குக் காப்பி செய்து கொடு."

இவ்வார்த்தைகளைக் கேட்டுங்கூட இந்து முன்னுக்கு வந்து காப்பி செய்து கொடுப்பதில்லை. வேலை ஒன்றுமில்லாவிட்டால் பின்புறத்து நடையில் போய் நிற்பாள். அதைப் பார்த்து அப்புவுக்கும் ஆச்சரியமாயிருக்கும். ஒருதடவை அப்பு அவளை இதன் காரணம் கேட்டபோது, தன்னைப்பற்றிய தப்பெண்ணம் விலகுமென்கிற பாவனையுடன் இந்து உண்மையான சங்கதியை உரைத்தனள். ஆனால் அது அப்புவுக்கு உண்மை என்று தோன்றவேயில்லை. ஏனென்றால் அவன் எத்தனையோ தடவைகளில் தன் நண்பர்களை அழைத்து வந்து வீட்டில் செய்த எந்தப் பதார்த்தமும் விடாமல் தேடி எடுத்துத் தின்றிருக்கிறான். அதைப்பற்றி அம்மாள் அதிகமும் கோபித்துக் கொண்டதுபோல் பாசாங்கு செய்து "என்னடா அப்பூ! இப்படிச் சாப்பாட்டு ராமனாகி விட்டாய்! வீட்டில் ஒரு பண்டமும் வைக்க மாட்டேனென்கிறாய்!" என்று சொல்லுவாள். இவ்வளவுதான். தன் மனைவி தாயின்மீது விரோதமாய்ச் சொல்லுகிறாள் என்ற கோபம் அவனால் பொறுக்க முடியவில்லை. தாயாரைக் கேட்டான்: "என்ன அம்மா! ஒன்றும் கிடைக்கக்கூடாதென்று நீ எனக்கு தண்டனையா விதித்திருக்கிறாய்? நான் செய்த குற்றந்தானென்ன?"

"யாருக்கப்பா? உனக்கா தண்டனை?"

அப்பொழுது அப்பு தனக்குத் தெரிந்ததைச் சுருக்கிச் சொன்னான். பிறகென்ன கேட்கிறீர்கள்? அன்னபூரணி அம்மாள் அழுதாள். "இப்பொழுதே என்பேரில் பழிபோடுகிறாள். இப்பொழுதுமுதல் எனக்கும் என் மகனுக்கும் விரோதம் செய்து வைக்கிறாள்" என்று அவள் மந்திரோபதேசம் செய்ய ஆரம்பித்தாள். தாயி வந்து இதற்குப் புஷ்டி கொடுத்து மிகவும் உருக்கமான குரலுடன் சொன்னாள்: "என்னடா அண்ணா! அம்மாவுக்கு இப்படி அவமானமாக வேண்டுமென்றா உனக்குக் கலியாணம் செய்து வைத்தது? பெண்டாட்டி சொன்னது உனக்கு உண்மையென்று எப்படித் தோன்றியது?"

இக்கார்ஜனையெல்லாம் கேட்டு அப்பு திகைத்துப்போய்விட்டான். "அப்படி அல்ல அம்மா" என்று சொல்லலானான். அன்னபூரணி அம்மாளுக்கு வந்த கோபமென்னவோ குறையவே

யில்லை. அதனால் மகனுக்கு நான்கைந்து தினங்கள் மாதுஸ்ரீ அவர்களை ஆராதிப்பதிலேயே போயின. அவன் காலை மாலைகளில் சற்று சற்று நேரம் தாயியிடம் வந்து உட்காருவதும் தாயி ஏதாவது சமாசாரம் சொல்வதுமாயிருந்து, மெல்ல மெல்ல மதனியின் போக்கிரித்தனத்தைப்பற்றியும், திருட்டுத்தனத்தைப்பற்றியும், தாயாருடைய பெருந்தன்மையைப்பற்றியும் ஜாடை ஜாடையாய்ப் பேசலானாள். அதனால் இரவு சமையல் இந்துவின் தலையில் விழுந்தது. அவள் சமையல் செய்வதும் தாயியின் கட்டாயத்திற்காகவென்று அப்புவுடன் தாயாரும் இரண்டு கவளம் தின்பதற்காகக் கீழே வந்து எல்லாரும் ஒரு பந்தியில் உட்காருவதும், இந்து பரிமாறுவதுமாக இருந்ததுமல்லாமல் காலைச் சமையலும் அவள் தலையில் விழுந்தது. முதுமைப்பருவத்திற்றானோ என்னவோ, இப்பொழுது சிறிதுகாலமாக அன்னபூரணி அம்மாளுக்கு அடிக்கடி தலை வலிக்கும். தாயி அவளுடைய சிசுருஷைக்குப் போவதனால், வெகுவாய்த் தாயாருக்கும் பெண்ணுக்கும் ஒழிவேயிருப்பதில்லை. காலையில் குளித்துச் சற்று மேற்பார்வை பார்த்ததும் பித்தம் அதிகரிக்கின்றதென்று அன்னபூரணி அம்மாள் முதல் பந்தியில் உட்காருவாள்.

(தொடரும்.)

கை ராட்டினம்.

(ஸ்ரீமதி பி. மங்களாபாய்.)

சுமார் முப்பது வருஷங்களுக்குமுன் நடந்த சங்கதி. சேலம் ஜில்லாவில் ஓர் கிராமத்தில் ஓர் சேணிய ஸ்திரீ தன் மகனுடன் வசித்துக் கொண்டிருந்தாள். அவளுடைய மகன் பொன்னன் ஐந்து வயதுள்ளவனாக இருக்கும்பொழுதே அவள் நெற்றியிலிருந்த குங்குமம் அழிந்துவிட்டமையால் மகனைப் போஷிக்கவேண்டிய பொறுப்பு முழுவதும் அவள் தலையில் வீழ்ந்தது. வீட்டிலோ மிகவும் வறுமை. பச்சையம்மாள் நான்கு வீடுகளில் பாடுபட்டு வேலை செய்வாள். மீதிப்பொழுதில் கைராட்டினத்தில் நூல் நூற்று எப்படியோ வயிற்றை வளர்த்து வந்தாள். பச்சையம்மாளுக்குக் கைத்தரிசாலை ஒன்றிருந்தது. பொன்னன் அவளுடைய ஏக புத்திரன். பொன்னனுடைய தந்தைக்கு நல்ல யௌவன பருவத்தில் சமுசாரம் என்னும் கடையை அப்படியப்படியே போட்டுவிட்டு இவ்வுலகத்தை விட்டகல வேண்டியதாயிற்று. பொன்னன் வீட்டில் இரண்டு பெரிய கைத்தரிகளிருந்தன. அவற்றை கையாளப்பட்டவர்கள்தான் ஒருவருமிலர். பச்சையம்மாள் பகல் முழுதும் நூல் நூற்று அதை விற்பாள். மகனுடைய வயதின் வளர்ச்சியுடன் அவளுடைய ஆசையும் வளர்ச்சியடையலாயிற்று. மகன் பெரியவனானால் தான் பட்ட கஷ்டமெல்லாம் சார்த்தகமாகும் என்று அவளுக்குத் தோன்றிக்கொண்டிருந்தது.

அவளுடைய குடிசையையொத்த வீட்டிற்குப் பக்கத்திலேயே சாதாரணமாக நல்ல வீடொன்றிருந்தது. பொன்னனுடைய வாசம் பெரும்பாலும் அவ்வீட்டிற்றான்! உபாத்தியாயரின் திண்ணைப்பள்ளிக்கூடத்தை விட்டதும் பொன்னன் நேரே அந்த வீட்டிற்குப் போவான். அவன் வாயிலிலேயே நின்றுகொண்டு "மதுரம்!" என்று கூப்பிடுவான். மதுரம் வெளியில் வருவாள். அப்பொழுது அவளுக்கு

ஆனந்தம் பொங்கும். அவளுக்குப் பொன்னன் தன் கண்முன்னிலிருந்து அசையக்கூடாதென்று தோன்றும். பொன்னனும் அவளை வெகுநேரம் இமை கொட்டாமல் பார்த்துக் கொண்டிருப்பான். வீட்டிலிருந்து யாராவது "மதுரம்" என்றழைத்தால் மதுரம் வீட்டிற்குள் போவாள். பொன்னன் தன் வீட்டை நாடிச் செல்வான்.

மதுரத்தின் தந்தையும் ஜாதியில் சேணியன்தான். ஆனால் கடவுள் அவனுக்கு ஏராளமான திரவியத்தைக் கொடுத்திருந்தார். அவன் வீட்டிலும் தரிகளிருந்தன. அவைகளை அவன் கூலியாட்கள் மூலமாய் நடத்திக்கொண்டிருந்தான். அன்றி அவன் ஊரில் கொடுக்கல் வாங்கல் செய்து கொண்டிருந்தான். அவனுடைய மூத்த மகள் மதுரம். அவளுக்கு ஒரு சிறிய தம்பியிருந்தான். இந்த இரண்டு மக்கள்தான் அவனுக்கு. பொன்னனுடைய சுபாவம் மிகவும் உற்சாகமும் ஆனந்தமும் நிறைந்ததாயிருக்கும். மதுரத்தின் சுபாவம் கம்பீரமானதும் அன்பு நிறைந்ததுமாயிருக்கும். ஊருக்குச் சமீபத்திலிருக்கும் ஓடைக்கு மதுரம் குடத்தை இடுப்பில் வைத்துக்கொண்டு தண்ணீர் கொண்டுவரப் போவாள். அவளுடன் பொன்னனும் போய் அவளுக்கு எத்தனையோ சங்கதிகள் சொல்வான். அவள் ராட்டினம் எடுத்து நூல் நூற்க உட்கார்ந்தால் பொன்னன் மணிக்கணக்காக அவளிடம் உட்கார்ந்திருப்பான். மதுரத்தின் சன்னிதானத்தில் அவனுக்குச் சுகமிருப்பதாகத் தோன்றியது. எப்படியாவது செய்து அவன் அவளருகிலிருப்பதற்கே முயல்வான். மதுரத்தின் வீட்டுத் தரியிலேயே அவன் வேலை செய்வான். அவனுக்கு இப்பொழுது நன்றாகத் துணி நெய்ய வந்திருந்தது. மறுபடியும் தன் வீட்டுத் தரிகளில் வேலை செய்ய வாரம்பித்து, அதன்மூலமாய் நன்றாகப் பணம் சம்பாதித்து, மதுரத்தை மணம் புரிவது என்றிவ்வாறாகத் தரியிலிருக்கும் கதர்த் துணியுடன் அவன் ஆசை என்னும் படலத்தை இழைமேல் இழைபோட்டு நெய்யலானான்.

பச்சையம்மாளுக்கு இப்பொழுது சற்று ஆறுதல் கிடைக்கலாயிற்று. இத்தனை வருஷங்களுக்குப் பிறகு இப்பொழுது மறுபடியும் சுககாலம் காணலாயிற்று. சென்னையிலிருக்கும் ஓர் உறவினன் பொன்னனை இவ்வருஷம் தீபாவளிப் பண்டிகைக்கு அழைத்திருந்தான். புரட்டாசி மாதம் இருபத்தைந்தாம் தேதியன்று மதுரம் பொன்னனைக் கேட்டாள்: "பொன்னு! இன்று நீ சென்னைக்குப் போகப்போகிறாயாமே?"

"அங்கே என்னுடைய ஒன்றுவிட்ட அத்தை இருக்கிறாள். அவள் இவ்வருஷம் என்னை தீபாவளிக்கு வரச்சொல்லி இருக்கிறாள். அப்படியிருக்கப் போகவேண்டாமா?"

"போகாமலிருக்க முடியாதா? எனக்கிங்கே விரிச்சு விரிச்சுன்னு இருக்குமே."

"தீபாவளியாய் பஞ்சமிக்கு எல்லாம் வந்துவிடுவேன். அதுவரை பொறுக்கமுடியாதா?"

சிறு பருவம்முதல் தன் தோழன் என்கிற பாவனையைத்தவிர அங்கு வேறு ஒன்றுமேயில்லை.

"சென்னை என்ன பெரிய பட்டினமா?"

"ஆமாம், பார்க்கத் தகுந்ததாம்."

"பெரிய பட்டினம் போய் வந்தபிறகு என் நெனவு (நினைவு) இருக்குமா? பட்டினத்தில் என்னென்ன பார்த்தாயோ அதெல்லாம் சொல்லணும் எனக்கு. எனக்காக ஏதாவது நல்ல சாமான் வாங்கிக்கொண்டு வாணும். சீக்கிரம் வந்துடணும், என்பதை நெனவு வெச்சுக்கோ."

மாலையில் பொன்னன் சேலம் ஸ்டேஷனுக்குப் புறப்பட்டான். அவனுடைய தலை மறை

கிறவரையில் மதுரம் அவனை இமைகொட்டாமல் பார்த்துக்கொண்டிருந்தாள். அந்த நிர்மானுஷியமான வழியை நோக்கிய வண்ணம் அவள் எத்தனைநேரம் நின்றிருந்தாள்! அவளுடைய பொன்னன் இதுதான் முதன்முதலாக அவளைவிட்டுப் பிரிந்தது. இந்த தினங்களில் மதுரத்தின் விருத்தி வெகு விசித்திரமாயிருந்தது. ஓடையின்கண் தண்ணீரெடுக்கப் போனால் குடத்தைத் தண்ணீரில் அமுக்கிவிட்டு அத்துடன் இவளும் சிந்தையிலாழ்ந்து விடுவாள். ராட்டினத்தின்கண் நூல்நூற்க இரண்டிரண்டு நாழிகை உட்கார்ந்தாலும் அரைமுழம் நூல்கூட நூற்றுவதில்லை. தீபாவளியன்று புதிய புடவை உடுத்த அவளுக்கு இரண்டரை நாழிகை சென்றது. வந்த தினம் செல்லாமலொன்றுமிருப்பதில்லை. ஆனால் கடைசி இரண்டு தினங்களை மாத்திரம் போக்குவது மதுரத்திற்கு வெகு கஷ்டமாயிருந்தது.

சொன்னபடி தீபாவளியாய் பஞ்சமியன்று பொன்னன் வந்து சேர்ந்தான். ஓடையைக் கடந்துதான் ஊருக்குள் வரவேண்டும். தற்சமயத்தில் மதுரம் ஓடையிற்றனிருந்தாள். பொன்னனைக்கண்டு அவள் மெய்ம்மறந்தாள். அவளுடைய குடம் பிரவாகத்துடன் மிதந்து கொண்டே போகலாயிற்று. அதன்கண் பொன்னனுடைய கவனமிருந்தது. அவன் அக்குடத்தைப் பிடித்தான். குடத்தையுங் கொண்டு பொன்னன் அருகில் வரவர மதுரத்திற்கு எப்படியோ தோன்றலாயிற்று. கடைசியில் பொன்னன் அருகில் வந்து, குடத்தை அவள் கையில் கொடுத்து "மதுரம்!" என்றான்.

அவன் இனியொருமுறை அதே மதுரமான சத்தத்தை உச்சரிக்கவேண்டுமென்று அவளுக்குத் தோன்றியது; ஆனால் அவள் பேசத் துணியவில்லை. இருவரும் மௌனமாய் வீட்டிற்கு வந்தனர். மதுரத்திற்கு எவ்வளவோ கேள்விகள் கேட்கவேண்டுமென்றிருந்தது. பொன்னனுக்கு எவ்வளவோ சங்கதிகள் அவளிடம் சொல்லவேண்டியதாயிருந்தும், ஒருவரையொருவர் கண்ட ஆனந்தத்தில் சொற்களின் ஞாபகமே அவர்களுக்கிருக்கவில்லை.

மதுரத்தின் துரதிருஷ்ட வசத்தினால் பொன்னனுக்கு அன்னியவிதமான போதனை ஏற்பட்டிருந்தது. அத்தை மகனுடைய சொற்படி கிராமத்தில் வசிப்பதைவிட (பட்டிக்காட்டில் வசிப்பதைவிட) ஆலைகளாலும், யந்திரங்களாலும் நிறைந்த பட்டினத்தில் வசிப்பது பொன்னனுடைய புதுமைப்பிரியமான மனதிற்கு அதிக இஷ்டமாயிருந்தது. எத்தனையோ முன்னேற்றமடையும் மார்க்கங்கள் அவன் முன்னிலையில் வரலாயின. மில்களில் வெறும் கூலிக்காரனாக அமர்ந்தபோதிலும் சில தினங்களில் ஒரு கிளைக்கு யஜமானனாகலாம். அதிலிருந்து மானேஜராய், மானேஜரிலிருந்து அங்கத்தினனாய், பிறகு முதலாளியாகலாம். முதலாளியிலிருந்து லட்சாதிபன். இந்தப் பரம்பரை அவனுக்குமுன் ஸ்பஷ்டமாக விளங்கிற்று. கூலிக்காரன் கோடீசுவரனான பல உதாரணங்கள் அவனுக்குக் கொடுக்கப்பட்டது. பொன்னனுடைய தீர்மானம் நிலைபெற்றது. வீட்டிலிருக்கும் தரிகளை விற்றுவிட்டுச் சென்னையில் ஓர் மில்லில் போய் அமர்வதாகத் தீர்மானித்தான். அவன் எப்படியோ தனது தாயைத் தன்வசப்படுத்திக்கொண்டான். பச்சையம்மாள் சென்னைக்குப் போக சித்தமானாள். அவளுக்குத் தன் மகன் ஏதோ வெகு பெரிய மனிதனாகப்போகிறான் என்ற ஆசை மிகுதியாயிருந்தது.

ஆனால் இந்த அட்டகாசமெல்லாம் எதற்கு? இப்பொழுதிருக்கும் நிலைமையில் மதுரத்தின் தந்தை தன் மகளைத் தனக்குக் கொடுக்க சம்மதியான் என்று பொன்னனுக்குத் தோன்றியது. சீமானாய் மதுரத்தைத் தனக்குக் கொடுக்கும்படி கேட்கவேண்டுமென்பது அவனுடைய ஆசை. தீபாவளிப் பண்டிகைக்காகப் போனபோது நகரத்தின் வெளித்தோற்றத்தை எல்லாம் பார்த்திருந்தான். பொன்னனுக்குத் தன் ஆயுளின்மீது ரமணீயத்துவத்தின் மந்தமான நிழல் காணலாயிற்று.

மூன்றாவது நாட் காலையில் பாலைப்பூ மடியில் வைத்துக்கொண்டு மதுரம் மாலை தொடுத்துக் கொண்டே உட்கார்ந்திருந்தாள். பொன்னன் சும்மா அருகில் நின்று கொண்டிருந்தான். அவன் தரிகளை எல்லாம் விற்று விட்டிருந்தான். இரண்டொரு தினங்களில் அவன் சென்னைக்குப் போவதாக இருந்தான். மதுரம் அவனைக் கவனிக்கவில்லை. அவள் தானே பின்வரும் பாட்டை முணுமுணுத்துக் கொண்டிருந்தாள்:—

"மழை வருகுது மழை வருகுது
புயற்காற்றுடன்!
தண்ணீர் மொள்ளுகிறார்கள்
பெண்கள் அவசரத்துடன்!!"

"பாலைப்பூவின் வாசனை அவ்வளவு ஒன்றும் நன்றாயில்லை அல்லவா?"

"இது நம்ம நாட்டுப்புறத்துப்பூ, பட்டினத்து ஜனங்களுக்கு அதெப்படிப் பிடிக்கும்? பட்டினத்தில் பாலை மரமாவது இருக்கா?"

"எனக்கெங்கும் காணவில்லை."

"நகரத்தில் ஓடை யிருக்கா?"

"இல்லை."

"நகரத்தில் என்னைப்போல கபடமில்லாத பெண்கள் இருக்காளா?"

"அங்கேது?"

"அப்படியானால் நீங்கள் என் போறேள் நகரத்துக்கு? நகரத்தில் எங்க வீட்டுத் தரிகளைப்போலத் தரிகள் இருக்குதா? பட்டினத்தில் பெண்கள் ராட்டினத்தில் நூல் நூற்கிறாளா?"

"நகரத்திலே ராட்டினம் எதுக்கு? அங்கே பெரிய பெரிய ஆலைகளும் மிஷின்களும் இருக்குது. அதிலே ஒருத்தருக்கும் சிரமமில்லாதே நூல் உண்டாறது."

"அப்படியானா, அங்கே பெண் பிள்ளைகள் பொழுது முழுதும் செய்யறதுதானென்ன?"

"என்ன செய்யறாளோ, அதெனக்குத் தெரியாது."

"பொன்னு, நீங்கள் நகரத்துக்குப் போக வேண்டாமே! அங்கே நகரத்திலே அப்படி என்னதானிருக்கு? எனக்காகவாவது நீங்கள் இங்கே இருக்கமாட்டேளா?"

"உனக்காகவா! மதுரம், உனக்காகத்தான் நகரத்துக்குப் போவது. நகரத்திலே இருந்து சீமானாய் வந்தால் பிறகுஉன்னைக்கலியாணம்—"

அதற்குப்பிறகுப் பேசுவதைக் கேட்க மதுரம் அங்கு நிற்கவில்லை. பாலைப்பூமாலையை மாத்திரம் மறதியினால் அவள் அங்கு வைத்து விட்டாள்.

மத்தி மத்தியில் வந்து போய்க்கொண்டிருப்பதாகச் சொல்லி பொன்னன் சென்னைக்குப் புறப்பட்டுப்போய் பெரம்பூரில் கிருஷ்ணதாஸ் பருத்தி மில்லில் வந்து தாகல் ஆனான்.

வருஷங்களுக்குப்பின் வருஷங்கள் கடந்தனவே யொழிய பொன்னனுடைய நிலைமை ஒன்றும் தேறவில்லை. தரிகள் விற்ற பணத்தைத் தின்று தீர்த்தாகி விட்டது. பச்சையம்மாளுக்கு ஏன் நகரத்திற்கு வந்தோமென்றாயிற்று. பொன்னன் கூலி, மானேஜர், முதலாளி, கோடீசுவரன் ஒன்றுமே ஆகவில்லை. இப்பால் இரண்டு வருஷங்களாக மதுரத்தைப் போய்ப் பார்க்கவுங்கூட அவனுக்குச் சௌகரியப்படவில்லை. மதுரத்தை அடையலாம் என்கிற

ஆசையென்னும் படலத்தின் இழைகளெல்லாம் அறுகலாயின. பொன்னனுக்குத் தனது ஆயுளில் எங்கும் காரிருள் மூடியதுபோல் (சூழ்ந்துகொண்டதுபோல்) காணப்பட்டது.

பிறகு எப்படியோ பொன்னன் மதுரத்தின் வீட்டிற்கு வந்தான். அவன் அவளுடைய தந்தையினிடம் மதுரத்தைத் தனக்குக் கொடுக்கும்படி கேட்டான். மதுரத்தின் விவாகம் ஏற்கனவே நிச்சயப்பட்டிருந்தது. ஓர் சாதாரண நடுத்தரமான நிலைமையுள்ள திடகாத்திரமான யுவகனுக்கு மதுரத்தைக் கொடுப்பதாகவிருந்தது.

பொன்னன் கனமான (பாரமான) உள்ளத்துடன் ஓடையண்டை போனான். மதுரம் கனமான கைகளால் தண்ணீர் மொண்டுகொண்டிருந்தாள். காற்றில் இனிமையான நாதத்துடன் பின்வரும் பதங்கள் மிதந்துகொண்டிருந்தன.

"மழை வருகுது, மழை வருகுது
(பெருங்காற்றுடன்) புயற்காற்றுடன்!
தண்ணீர் மொள்ளுகிறார்கள்
பெண்கள் அவசரத்துடன்!!"

மதுரத்தின் கண்களிலிருந்து நீர் ஆறுகப் பெருகிக்கொண்டிருந்தது. பொன்னனுடைய உள்ளத்தில் புயற்காற்றடித்துக் கொண்டிருந்தது. (துவ்வானம் அடித்துக் கொண்டிருந்தது). மதுரம் குடத்தை இடுப்பில் வைத்துக்கொண்டு திரும்பினாள். பொன்னன் ஆலமரத்தின்பின் மறைந்து கொண்டு கண்குளிர அவளைப் பார்த்தான்.

எத்தனை நேரம் அவன் வழி நடந்தானென்கிற ஸ்மரணையுமில்லாமல் அவன் வீடு வந்து சேர்ந்தான்.

மதுரம் விவாகமாய் இல்லறஞ் செய்யலானாள். வாக்திபேதியில் பச்சையம்மாள் இவ்வுலகத்தை விட்டகன்றாள். பொன்னன் நகரத்தைவிட்டுத் தன் ஊருக்கு வந்தான். மதுரத்தின் மாமியார் வீடும் அதே ஊரிலிருந்தது. பொன்னன் ஓர் குடியானவனிடத்தில் வேலைக்கமர்ந்தான். அவன் வேலைக்குப் போகும்போது மதுரத்தின் கண்ணுக்குத் தென்படாத வழியுடன் போவான். மதுரம் ஓடைக்கு (ஆற்றிற்கு) வரும் நேரத்தில் அவனங்கு போவான். மறைவிலிருந்து அவளைத் தரிசிப்பான். குடம் தண்ணீரை ஸ்பரிசித்ததும் அவளறியாமலே பின்வரும் பாட்டு அவள் வாயினின்றும் வெளிவரும்:

"மழை வருகுது மழை வருகுது
புயற்காற்றுடன்!
தண்ணீர் மொள்ளுகிறார்கள் பெண்கள்
அவசரத்துடன்!!"

மதுரத்தின் கண்கள் நாற்புறத்தும் பார்த்துக் களைத்துப்போகும். பொன்னனுடைய உள்ளத்தில் புயற்காற்றுக் கிளம்பும்.

பொன்னன் நாளுக்கு நாள் இளைத்துப் பலவீனப்பட்டுவந்தான். அவனுடைய யஜமானன் அவன் பேரில் தயவுடன் அவனுக்குச் சில தினங்களுக்கு விடுமுறை கொடுத்தான். வெகுவாய் முழுப்பொழுதும் அவன் ராட்டினத்தில் நூல் நூற்பதிற் போக்கிவந்தான். ராட்டினம் சுழலும் சத்தம் ஆரம்பித்ததும் அவனுடைய உள்ளம் பின்வரும் பாட்டை முணுமுணுக்கத் தொடங்கும்:—

"தண்ணீர் மொள்ளுகிறார்கள் பெண்கள்
அவசரத்துடன்!"

பொன்னனுடைய மனம் இடிந்து போயிருந்தமையால், அது இதயத்தின் கிரியையில் பரிணமித்தது என்று சொல்லுங்கள், அல்லது தன்னைப்பற்றி அவனுடைய கவலையீனத்தினாலென்று சொல்லுங்கள். அவன் உடம்புகெட்டு அவன் படுக்கையில் விழுந்தான்.

மதுரத்தின் தரிசனத்திற்குப்போக அவனால் தள்ளவில்லை (அவனுக்குத் தள்ளவில்லை). இனிமேல் தான் சாகப்போகிறோம் என்று அவனுக்குத் தோன்றியது. நாளுக்கு நாள் நோயும் அதிகரிக்கலாயிற்று. மதுரத்தைப் பார்க்க வேண்டுமென்கிற விருப்பமும் மேலிட்டது. அவனால் பொறுக்க முடியவில்லை.

பிறகு அவன் அவளுக்குச் சொல்லியனுப்பினான். இவ்வளவு நாளாகப் பொன்னன் ஊரிலிருக்கிறானென்றறிய மதுரத்திற்கு மிக்க ஆச்சரியமாயிருந்தது.

மதுரம் உள்ளே வந்தபோது பொன்னன் படுக்கையில் படுத்திருந்தான். அருகில் ஓர் ராட்டினம் வைக்கப்பட்டிருந்தது. மதுரம் அருகில் வந்துட்கார்ந்து பொன்னனுடைய கரத்தைப் பிடித்துப் பார்த்தாள். அவளுடைய பார்வை அவனுடைய பார்வையில் பதிந்தது. இமை கொட்டவில்லை. விழிகள் அசையவில்லை. பிறகு அவள் தன் கரத்தினால் அவன் நெற்றியைத் தடவிக்கொடுத்தாள். அவளுடைய துக்கத்தின் பிரவாகம் அவளுடைய கண்கள் வழியாகப் பெருகலாயிற்று.

பொன்னன் க்ஷீணமான குரலுடன் "மதுரம்!" என்றான். மதுரம் சும்மா பார்த்துக்கொண்டே இருந்தாள். "மதுரம், உன்னை விட்டுப் பிரிந்ததனால் உன்னை இழந்தேன்! தரிகளை விற்று யந்திரத்தின் மோகத்தில் அகப்பட்டுக்கொண்டு, ஆயுள் பரியந்தம் துக்கத்திற் காளானேன். இந்த ராட்டினம் ஒன்று தான் என் ஆஸ்தியாகும். என் அன்பின் அறிகுறியாக இதை உன்னிடத்தில் வைத்துக்கொள். இதோ இது உன் உலர்ந்த பாலைப் பூமாலை. நான் இதை என் உயிரைவிட அதிகமாக நினைத்துக் காப்பாற்றி வைத்திருக்கிறேன். ஆ கா கா! எவ்வளவு மதுரமான மணம் வருகிறது. இதிலிருந்து! இந்த மாலையை நீ எடுத்துக்கொள். உனக்குப் புத்திரன் பிறந்தால் அவனுக்கு இந்த ராட்டினத்தைக் கொடுத்து, என் அனுபவத்தைக் சொல்லி, சாதாரண ராட்டினத்திலிருக்கும் சுகம் நகரத்திலிருக்கும் ஆலைகளிலும், மில்களிலுமில்லை என்று சொல். மதுரம், பரம்பரையாக (தலைமுறை தலைமுறையாக) வழங்கி வந்த கைத்தரிகளை விற்றிராவிட்டால் நீ அன்னியனுடையவளாயிருப்பாயா?"

பொன்னன் பிறகு ஒரு நாளும் ஒன்றுமே பேசவில்லை. அவன் கொடுத்த கைராட்டினத்தில் நூல் நூற்பது தான் மிச்சமாயிற்று. கைராட்டினத்தின் ஓசை (நாதம்) ஆரம்பித்ததும் அவளுடைய உள்ளம் பொங்கிவரும். ஓடையண்டைபோனால் கடந்த காலத்தின் சித்திரமெல்லாம் அவள் முன்னிலையில் நிற்கும். குடம் தண்ணீரை ஸ்பரிசித்ததும் அவள் அறியாமலே பின்வரும் பாட்டின் ஒரு நொடியை அவள் முணுமுணுக்க ஆரம்பிப்பாள்.

"மழை வருகுது மழை வருகுது
புயற்காற்றுடன்!
தண்ணீர் மொள்ளுகிறார்கள் பெண்கள்
அவசரத்துடன்!!"

இவ்விரண்டு வரிசைகளில் அவ்வளவு என்ன பொருள் அடங்கியிருக்கின்றதோ என்று யாரால் சொல்லமுடியும்? இது அவளுடைய இதய கீதமாயிருந்தது என்பதென்னவோ உண்மை.

(மனோரஞ்சனியிலிருந்து)

கமலா.

(ஸ்ரீமதி ருக்மணியம்மாள்.)

"ஹா! தெய்வமே, பாழும் தெய்வமே, கொடிய விதியே, ஓ ஈசா, உனக்குக் கண்ணில்லையா, காது மில்லையா, ஒன்றும் அறியாத பச்சைக் குழந்தையின் தலையில் திடீரென்று கல்லைப்போட்டாயே! இது உனக்கு தர்மமா!" என்றும், மற்றும் இவைபோன்ற பல தெய்வநிந்தனைச் சொற்களுடன் தெருக் கோடியில் ஓர் குரல் கேட்டது. அச்சமயம் சுமார் காலை எட்டரை மணியிருக்கும். சுசீலா தலைவாரிக் கொண்டிருந்தவள், இக்குரலைக் கேட்டு வாசலில் ஓடிவந்து பார்த்தாள். அவளால் முதலில் இன்னதென்று அறிந்து கொள்ள முடியாமல் திடுக்கிட்டுப் போனாள். அவள் வெள்ளைத் துணியுடுத்த பாட்டியும் அவள் பெண்ணும், மற்றும் முப்பது வயதுடைய ஓர் ஸ்திரீ ஒன்பது வயதுள்ள ஓர் பெண் குழந்தையின் கையைப் பிடித்துக் கொண்டு கண்ணீர் அருவிபெருக மௌனமாய்ப் போவதைக் கண்டாள். அந்தக் குழந்தை கையில் ஓர் ஈரச் சட்டையைப் பிழிந்து எடுத்துக்கொண்டு, தன்னிடுப்பில் கட்டி இருக்கும் பாவாடையின் ஒரு தலைப்பையே எடுத்து மேலே போர்த்துக் கொண்டு வாடின முகத்துடன் தன் தலையைத் தொங்கவிட்டுக் கொண்டு செல்வதைப் பார்த்தாள். மேலே சொன்ன பாட்டிதான் அப்படி அலறிக் கொண்டே போனாள். சுசீலா இவ்வைபவத்தையும் இவ்வைபவத்தின் விவரத்தையும் அறிந்து கொள்ளலானாள்.

சுசீலா அன்று முழுவதும் தொங்கிய முகத்துடன் சென்ற அச்சிறுமியாகிய கமலாவின் நினைவாகவே யிருந்தாள்.

கமலாவின் சங்கதியை ஆராய்வோம். அப்பாலகியின் தகப்பனார் மிகவும் நல்லவர். மெத்த தெய்வ பக்தியும், பெற்ற தாயாரிடத்தில் அதிக மரியாதையும் விசுவாசமும் உள்ளவர். அவர் மனைவியும் மகா உத்தமி. புருஷனிடமும், மாமி, நாத்தி இவர்களிடமும் அத்தியந்தப்பிரேமையும் மரியாதையும் உள்ளவள். இத் தம்பதிகளுக்கோ ஒரே ஒரு பெண் குழந்தை தான் உள்ளது. அவர் ஓர் ஆபீசில் குமாஸ்தா வேலை பார்த்து வந்தார். அவருக்குச் சம்பளம் மாதம் 150 ரூபாய் கிடைக்கும். இவருக்கு ஓர் விதவையான சகோதரி உண்டு. அந்த அம்மாளும் இவ்விடம் தானிருக்கிறாள். பொதுவில் குடும்பம் மெத்த ஒற்றுமையாய் நடந்து வந்தது. கமலாவின் பாட்டிக்குத் தன் அருமைப் பேத்திக்குச் சீக்கிரம் கலியாணம் செய்ய வேண்டுமென்றும், மருமகன் வீட்டுக்கு வரப் போக இருந்தால் நன்றாயிருக்குமென்றும் ஆசை பிடித்து, தன் மகனை விவாக விஷயத்தில் வெகு துரிதப்படுத்தலானாள். கமலாவின் தாயாருக்கோ சீக்கிரம் கல்யாணம் செய்வதில் சற்றும் பிரியமில்லை. ஆகிலும் மாமியார் வார்த்தைக்கு மாறு வார்த்தையில்லை யல்லவா? கமலாவின் எழாவது வயதில், அச்சிறுமிக்கும் அவளது ஒன்று விட்ட அத்தை மகனுக்கும் விவாகம் வெகு வைபவமாய் நடந்தேறியது. பாட்டியடைந்த ஆனந்தத்திற் களவேயில்லை.

அது கடந்த மூன்றாம் மாதத்தில் நம் கதை ஆரம்பமாகிறது. ஓர் நாள் காலை நம் கமலாவின் தகப்பனார் ஏதோ கச்சேரி அலுவல்களைப் பார்த்துக் கொண்டிருந்தார். ஓர் சேவகன் தந்தி ஒன்றைக் கையிலெடுத்து வந்தான். கமலா அதை வாங்கிப் போய் தகப்பனாரிடம் கொடுத்துவிட்டுச் சிரித்தவண்ணமாயும் மரியாதையுடனும் நின்று கொண்டிருந்தாள். அவர் தந்திச் சேவகனை அனுப்பிவிட்டுத் தந்தியை உடைத்தார், பார்த்தார், திடுக்கிட்டு மனம் பதறினார். குற்றமற்ற சிறுமியின் அழகான முகத்தைப் பார்த்தார். திரும்பவும் தந்தியைப் பார்த்தார். 'ஆ! கடவுளே! என் அருமைக் குழந்தாய், கமலா!' என்று சொல்லித் தன்னறிவே தனக்கில்லாமல் அப்படியே நாற்காலியில் மூர்ச்சையடைந்து விழுந்து விட்டார். அதைக் கண்ணுற்ற பாலகி சங்கதி யறியாமல், தன் அத்தையிடம் போய் நடந்த விஷயங்கள் அனைத்தையும் சொன்னாள். அவளும் தன் சகோதரரின் அறைக்கு வந்து அவரிருக்கும் கோலத்தைக் கண்டு அவரை மெதுவாய் மூர்ச்சை தெளிவிக்கச் செய்தாள். உடனே அக்குடும்பத்தின் சந்தோஷத்தை அழிக்கவந்த அத்தந்தியின் சங்கதியை அறியலானாள். கமலா தன் அறைக்குப்போய் தான் பள்ளிக்கூடம் போவதற்காகத் தன் புஸ்தகங்களை எடுத்து ஒழுங்காய் வைத்துக் கொண்டிருந்தாள். வீட்டில் பலமான அழுகைக் குரல் கிளம்பலாயிற்று. அத்தையும் பாட்டியும் கமலாவைப் பிடித்துக்கொண்டு அழுதார்கள். கமலாவின் தாயார் ஸ்தம்பித்து நின்றுவிட்டாள். வழக்கப்படி அக்கம்பக்கத்து ஜனங்களும் ஓடி வந்தார்கள். ஆறு வயதுக் குழந்தை, கல்யாணமான மூன்றாவது மாதத்தில், புருஷனை இழந்தாள் என்றால் கல்லும் கரையுமன்றோ. கமலாவுக்கு ஒன்றுமே விளங்கவில்லை. ஆனால் அவளை அறியாமல் அவள் முகம் குன்றியிருந்தது. பிறகு அனைவரும் குளத்துக்குப் போய்க் குளித்துவிட்டு வந்தார்கள். வந்தமேல் அழுதுகொண்டே அனைவரும் சாப்பிட்டாச்சுது.

கமலாவின் தகப்பனார் அன்று ஆபீசுக்குப் போகவில்லை. மணி பதினொன்றடித்தாய் விட்டது. அவள் பள்ளிக்கூடம் போகும் நேரம் கடந்து விட்டது. ஆனாலும் தகப்பனாரிடம் சொல்லிவிட்டுப் போய்விடலாமென்று தன் புஸ்தகம், சிலேட் இவைகளுடன் தகப்பனார் அறைக்கு வந்தாள். இதைப் பார்த்ததும் அவர் மனம் கலங்கி 'கமலா, நீ இப்போது ஸ்கூலுக்குப் போக வேண்டாம்' என்றார். 'ஏன் அப்பா? இன்று எங்கள் ஸ்கூலுக்கு இன்ஸ்பெக்டர் துரைசானி வருகிறாளாம். அவர்கள் இன்று பரீட்சை செய்யப் போகிறார்களாம். நான் பரீட்சையில் தவறிப் போனால் இன்னும் ஒரு வருஷம் இதே வகுப்பில் தானே யிருக்கவேண்டும்' என்று சொல்லிக்கொண்டே தன் தகப்பனாரின் வார்த்தையைக் கடக்கமுடியாமல் தன் அறைக்குப் போய் என்னமோ செய்து கொண்டிருந்தாள். ஐயோ பாபம்! தன்னால் அந்தக் குடும்பம் ஆறாத்துயரத்தில் அழுந்திக் கிடப்பதை அறியாமல் தன்பாட்டிலிருந்தாள்.

இதிவ்வாறாக அவ்வீட்டின் முன்புறத் தாழ்வாரத்தில் கமலாவின் பாட்டியும் அத்தையும் உட்கார்ந்துகொண்டு, தங்கள் விசனத்தின் எல்லையைக் காணாதவராய்ப் பிரலாபித்துக் கொண்டிருக்கிறார்கள். பெண் தாயாரை நோக்கி 'அம்மா, கமலத்தின் அதிருஷ்டம் இப்படி முடியுமென்றறிந்திருந்தால் இவள் கலியாணத்தில் நான் சம்பந்தப்பட்டிருக்கமாட்டேனே. ஏற்கனவே என்னைப்பற்றி என் தமயன் இன்னமும் துயரமடைகிறாரே. இந்தச் சிறுமியின் விசனம் அவரை எப்படி விடுவிக்குமோ நான் அறியேன். மனம் துடிக்கிறதேயம்மா!'

தாயார்:—'ஐயோ! என்னால் தானே குழந்தைக்கு இக்கதி வந்தது என்னுடைய விடாத தூண்டுதலால் தானே அப்பையனுக்குக்

கொடுத்தும், இவ்வளவு சீக்கிரம் கலியாணம் செய்யவும் ஆச்சுது. கோபாலன் சற்புத்திரன் ஆகையால் அவன் தாயாராகிய மகா பாபியாகிய என் வார்த்தையைத் தட்டாமல் அவன் மனைவிக்கும் இஷ்ட மில்லாத விவாகத்தைச் செய்தானே! லக்ஷ்மி நல்ல பெண்ணாகையால் மாமியாரிஷ்டப்படியும், புருஷன் சொற்படியும் கேட்டு நடந்தாளே. ஹா! அவள் மனம் இப்பொழுது எப்படித் துடிக்கும். இவ்வளவிற்கும் நானல்லவோ காரணவாதி ஹா தெய்வமே! என் அருமைக் குழந்தையின் கணவனுயிரைக்கொள்ளைகொண்ட தெய்வமே! என்னையும் சீக்கிரம் கொண்டுபோய் விடு. முடியாது, என்னால் சற்றும் தாங்க முடியாது. குழந்தையின் பிற்காலவாழ்வை நினைக்கக்கூட சகிக்கமுடியவில்லையே. ஏற்கனவே ஒருபெண் வீட்டில் இருப்பது போதாதோ! ஆ! கமலா! என் செல்வமே! குழந்தாய்!'' என்று மற்றும் பரிதபிக்கிறாள். இதையெல்லாம் கேட்டுக்கொண்டு பெண் பதில் என்ன சொல்லித் தேற்றுவதென்று தோன்றாமல் அழுத வண்ணமாகவே யிருக்கிறாள்.

கமலாவின் தாயாராகிய லக்ஷ்மியோ சமையலறைக்கடுத்த அறையில் உட்கார்ந்து கொண்டு தன் அருமைக் குழந்தையின் ஸ்திதியை நினைத் துத்திகைத்த வண்ணமாயிருக்கிறாள். "இன்னும் ஆறு வயது பூர்த்தியாகவில்லையே! குழந்தையின் கலியாணத்திற்கென்ன அவசரம் என்று மாமியிடமும் புருஷனிடமும் பன்முறையும் சொன்னேனே. என் வார்த்தையை யார் கேட்டார்கள்? பாபம், அவர்கள் மேல் குறைகூறித்தான் என்ன பயன்! வீண் பாபத்துக்கு என் ஆளாகவேண்டும்? இப்படி வரும் என்று கண்டார்களா? ஆ! மூன்று மாதத்துக்கு முன் குழந்தை தம்பதிகளைப் பார்த்த கண்கள் தற்சமயம் குற்றமற்ற குழந்தையின் முகத்தைப் பார்க்கப்பின்வாங்குகின்றனவே! ஹா! ஹா! எவ்வளவு வித்தியாசம்! இனியும் அக்குழந்தையின் வாழ்நாட்களில் எவ்வளவு பேதமும் கடோமும் நேரப்போகிறதோ! தெய்வமே! நான் என் இனியும் உம்மேல் அபசாரத்துக்கிடமாய் பழிசுமத்த வேண்டும்! என்னை, எளிய ஏழையை, குழந்தையின் கதியைப் பார்க்கச் சகியாத பாதேசியை, பாபியை, சீக்கிரத்தில் உமது பாதார விந்தத்தில் சேர்த்துக் கொண்டுவிடும்'' என்று தன்னுள் இன்னும் பலவிதமாய்த் துக்கித்துக் கொண்டிருக்கிறாள். இருந்தாலும் அவள் தன் வாயைத் திறந்து ஒரு வார்த்தைகூட சத்தமாய்ச் சொன்னது கிடையாது.

பகல் ஒன்றரை மணி யடித்தது. கமலாவுக்கோ ஸ்கூலுக்குப் போக நேரமாகி விட்டது. வீட்டிலேயோ அனைவரும் துக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். யாரைச் சாதம்போடச் சொல்வது என்று அவளுக்குத் தெரியவில்லை. அவள் தலை உலர்ந்து விட்டபடியால் தானே வாரிப் பின்னல் போட்டுக் கொள்ளலானாள். சாப்பிடாமல் போய்விடலாமென்று யோசித்தாள். என்றாலும் வீட்டில் சொல்லாமல் வெளியிற் போகும் வழக்கமில்லை யல்லவா? நேதுவாய்ப் பாட்டியிடம் போய் 'பாட்டி, எனக்குப் பள்ளிக்கூடம் போக நேரமாய் விட்டது. சாதம் கொஞ்சம் போடு. அதற்குள் சாமளாவைக் கூட்டிக் கொண்டு வருகிறேன்' என்று சொல்லிக்கொண்டு வெளியே போக எத்தனித்தாள். பாபம்! கிழப்பாட்டி என்ன சொல்வாள், என்ன செய்வாள்! 'கமலா, இங்கே வா. சாப்பிடு. இப்பொழுது நீ எங்கும் வெளியே போகவேண்டாம்' என்றாள். ஒன்றுமறியாத குழந்தை சாப்பிட்டுவிட்டே சாமளா வீட்டுக்குப் போய் அவளைக் கூட்டிக்கொண்டு ஸ்கூலுக்கு நேரப் போய்விடலாமென்று கருதிச் சாப்பிடலானாள். பிறகு கமலாவைப் பார்த்து பாட்டி சொல்லுகிறாள்.

பாட்டி:—குழந்தாய், நீ இனிப் பள்ளிக்கூடம் போகக்கூடாது. உனக்குத் தீட்டு. (வெகு துக்கத்துடன்) மஞ்சள், குங்குமம், வெற்றிலை, பூ இதெல்லாம் நீ உபயோகப்படுத்தக் கூடாது.

கமலா:—என்ன பாட்டி, ஒரு பெரிய சீமையெண்ணை டின் நிறைய மஞ்சள் பொடி நம்மாத்திலிருக்கே. நான் எப்பொழுதும் கொஞ்சம் தானே பூசிக் கொள்வேன். நீ தானே நிறையப் பூசிக்கொள் என்பாய். எனக்குக் கொஞ்சம் போதும். குங்குமமிட்டால் எனக்கு நிற்காது. எனக்கே சாந்துப் பொட்டு வைத்துக் கொள்ளத் தெரியுமே. என்னை என் உபாத்தியாயம்மாள் வெற்றிலைபோட வேண்டாமென்று சொல்லியிருக்கிறாள். ஆகையால் எனக்கு வெற்றிலையே வேண்டாம்' என்று என்னமோ சம்பந்தமில்லாமல் பதிலைச்சொல்லிவிட்டு, பள்ளிக்கூடம் போகப் புறப்பட்டாள். அதைக்கண்ட பாட்டி 'என் தங்கமே! நீ பள்ளிக்கூடம் நிச்சயமாய்ப் போகக்கூடாது' எனவே கமலா திடுக்கிட்டு அழலானாள். அத்தை அச்சமயம் 'ஏனம்மா கமலம், அழுகிறாய்'? என்று கேட்டுக்கொண்டே அவ்விடம் வரலானாள். 'பார் அத்தை! அப்பா மத்தியானம் ஸ்கூலுக்குப் போகலாமென்றார், பாட்டியோ போகக்கூடாது என்கிறாள். தவிர இன்னும் என்ன வெல்லாமோ சொல்லுகிறாள். இன்று என் பரீட்சை போய்விட்டது. இன்னும் ஒரு வருஷம் நான் அசடுபோல் இதே வகுப்பில் உட்கார்ந்து கொண்டிருக்க வேண்டும். தினமும் பக்கத்தாத்து சாமளா வருவாள். இன்று அவளையும் காணோம்' என்று வெகு துக்கத்துடன் பகன்றாள் கமலா. பாபம்! அத்தை அந்த அறியாத பாலகிக்கு என்ன பதில் சொல்வாள்! நிதானமாய் 'அம்மா கமலா, நீ பெரியவாள் சொற்படி கேட்டு நடக்கும் குணமுள்ளவள் அல்லவா. ஆகையால் நீ இப்பொழுது பள்ளிக்கூடம் போகவேண்டாம். வீட்டிலேயே உன் பாடத்தைப் படித்துக் கொண்டிரு' என்று வெகு சாந்தமாய்ச் சொன்னாள். இதைக்கேட்ட தன் விதி தானறியாத கமலாவுக்குண்டான விசனம் கொஞ்ச நஞ்சமல்ல. விஷயமின்னதென்றறியா விட்டாலும் அவள் மனம் சொல்லக் கூடாதபடி சஞ்சலமடைந்தது. ஆகையால் வருத்தத்துடன் தன் அறைக்குள் போனாள். அவளால் படிக்கவு முடியவில்லை, மற்றும் யாதொன்றும் செய்யவு முடியாதவளானாள். அப்படியே மணியும் ஐந்தடித்துவிட்டது. சாமளா ஸ்கூலிலிருந்து வந்திருப்பாள், அவளைக்கேட்டு இன்றைய சங்கதிகளைக்கேட்டு வரலாமென்று எழுந்து வெளியில் போனாள். அதைக் கண்ணுற்ற அவள் தாயார் அந்தக் குற்றமற்ற அக்குழந்தையை எப்படி வெளியில் போகவிடாமல் தடுப்பது என்று தெரியாமல் திகைத்து "கமலா! உன் அப்பா உன்னைக் கூப்பிடுகிறார்'' என்றாள். அதைக் கேட்ட கமலா சந்தோஷமாய்த் தன் தகப்பனார் அறைக்குப் போனாள். அவ்விடம் கரைகாணாத துக்கத்திலாழ்ந்திருக்கும் தகப்பனாரைப்பார்த்து 'என் அப்பா, இன்று நீங்கள் கச்சேரிக்குப் போகவில்லை? உங்களுக்கு உடம்பு சரியில்லையா என்ன? என்று வினவி, பின்பு 'எதற்கு என்னைக் கூப்பிட்டீர்களாம்? சீக்கிரம் சொல்லுங்கள். இன்று பள்ளிக்கூடம் போகவேண்டாமென்று அத்தையும் பாட்டியும் தடுத்து விட்டார்கள். அடுத்தகத்து என் சிநேகிதியைப் போய்ப் பள்ளிக்கூட சங்கதிகளை விசாரித்து வரப் புறப்பட்டேன். நீங்கள் கூப்பிட்டதாக அம்மா சொன்னாள்' என்றாள். அவள் சொன்னதிலிருந்து அவர் சகலமும் தெரிந்து கொண்டு மௌனமாயிருந்தார். அதைக்கண்ட கமலா 'ஏன் அப்பா, பதில் சொல்லவில்லை? நான் போக வேண்டும், சாமளா எங்கும் வரமாட்டாளாம். அவளுக்கு நாளான்றைக்குக் கலியாணமாம்.

அப்பா, கொஞ்ச நாளைக்கு முன் நீங்கள் என்னை மடியில் உட்காரவைத்தும், என் கழுத்தில் மாலைபோட்டும் இன்னும் என்னவெல்லாமோ செய்தீர்களே! அம்மாதிரி அவளுக்கும் செய்வார்களாம். ஐந்து நாள் வேடிக்கையாம். என்னை அவள் அம்மா அவாத்திலேயே இருக்கச் சொல்லியிருக்கிறாள். இருக்கட்டுமா அப்பா?' என்று புன்னகையுடன் அச்சிறுமி கேட்டாள். அச்சொற்களைக் கேட்ட தகப்பனார் மேலும் துயரமடைந்தவராய் 'ஆ, தெய்வமே!' என்று பெருமூச்சு விட்டவராய், 'என் அருமைக் கமலம்! நீ அதிர்ஷ்டமில்லாத குழந்தையாகிவிட்டாயே, அம்மா'' என்று வெகு உருக்கமாய்ச் சொன்னார்.

கம:—என்னப்பா இப்படிச் சொல்லுகிறீர்கள்? என் பள்ளிக்கூடத்தில் அதிர்ஷ்டச் சீட்டு என்று ஒன்று சேர்த்துக் குலுக்கி எடுத்தபோது என் பேருக்குத் தானே முதல் சீட்டுவிழுந்தது. எனக்குத் தானே வெள்ளிக்கப்பு கிடைத்தது. அப்போது என்னை எல்லோரும் நல்ல அதிர்ஷ்டசாலி என்றார்களே. அன்று பாட்டிகூட ஆத்தில் அப்படித்தானே சொன்னாள்' என்று கூறினாள்.

அவர் மிகுந்த வருத்தத்துடன் ஈனமான குரலில் 'கமலா! அதெல்லாமிருக்கட்டும். இன்று நம்மாத்தில் எல்லாரும் விசனமாயிருக்கிறார்களே, அது என்ன காரணமென்றும், ஏன் அப்படியிருக்கிறார்ளென்றும் உனக்குத் தெரியுமா, அம்மா?' என்று கேட்டார்.

கம:—அது எனக்குத் தெரியாது. இன்று காலை தந்தி ஒன்று வந்ததல்லவா? அது முதல் எல்லாரும் அழுது கொண்டேயிருக்கிறார்கள். மேலும் வீட்டுக்கு வந்தவாளும் விசனப்படுகிறார்கள். என்னுடன் வழக்கப்படி இன்று யாரும் சந்தோஷமாய்ப் பேசவுமில்லை. என் காரியத்தைத்தவிர வேறு சங்கதிகளைக்கவனிக்க வேண்டாமென்று அனேகம் தடவை நீங்கள் சொல்லியிருப்பதால் நமக்கென்னவென்று நான் யாரையும் கேட்கவில்லை' என்று கூறிவிட்டு 'அது போகட்டும், என்னை எதற்குக் கூப்பிட்டீர்கள், சொல்லுங்கள். நான் அடுத்த வீட்டுக்குப் போகவேண்டும்' என்று கமலா கேட்டாள்.

தக:—(அதிகம் ஒன்றும் பேச முடியாதவராய் மிகவும் தழுதழுத்த குரலுடன்) அம்மா! மிகுந்த பாபியாகிய என்னால் குற்றமற்ற குழந்தையாகிய நீ மீளாத துக்கத்திலாழ்ந்துவிட்டாய். என்னால் இந்தக் குடும்பத்தின் சந்தோஷம் நாசமாகி விட்டது. நீ இன்னும் கொஞ்ச நாளைக்கு எங்கேயும் வெளியில் போக வேண்டாம். உனக்கு வீட்டிலேயே ஓர் உபாத்தினியைக் கொண்டு பாடம் கற்றுக்கொடுக்கச் செய்கிறேன். இன்னும் சகல சங்கதிகளையும் பாட்டியைக் கேள். அவள் சொல்வாள்' என்று கூறி மௌனமாயிருந்தார்.

வெளியில்போகக்கூடாது என்கிற வார்த்தை கமலாவை அழச் செய்து விட்டது. ஆனாலும் குழந்தை சுபாவப்படி அவள் அதை அதிகம் கவனிக்க வில்லை. என்னமோ விசனத்துடன் உள்ளே போனாள். அப்படிச் செல்லும்போது வாசலில் யாரோ வருவதைப் பார்த்தாள். கமலாவுக்குத் தினமும் ஒருவன் புஷ்பம் கட்டிக் கொண்டு வந்து கொடுப்பது வழக்கம். மாதமொருமுறை அவன் பணம் பெற்றுக்கொண்டு போவது வழக்கம். அந்தோ! கமலாவின் துர் அதிர்ஷ்டத்தை அவன் எப்படி அறிவான்! ஆகையால் அன்றைக்கும் தினம்போல் புஷ்பம் கொண்டு வந்து கொடுத்து விட்டுப்போய் விட்டான். கமலா புஷ்பச் செண்டைக் கொண்டு வந்து அதை மூன்று பிரிவாய்ப் பிரித்து தன் அறையிலுள்ள சரஸ்வதி படத்துக்கு ஒரு பாகத்தைச் சாத்திவிட்டுத் தன் தலையில் ஒன்றை வைத்

துக்கொண்டு மீதியைத் தன் தாயாரிடம் தினம் செய்வதுபோல் கொண்டுவந்து கொடுத்தாள். பார்த்தாள் தாயார். குழந்தை தலையிலிருக்கும் பூவைக்கண்டு மனம் நொந்தாள். 'பூவை வாங்கிப் போடு' என்று எப்படிச் சொல்ல மனம் வரும்! 'ஹா! ஜகதீசா! என் பாபத்துக்குத் தகுந்த தண்டனை அடைகிறேன்' என்று மனதில் சொல்லிக் கொண்டு, குழந்தை மறைவாய்ப் போய் விட்டால் போதுமென்று கருதி கமலா கொடுத்த பூவை வாங்கி அங்கேயிருந்த ஓர் பலகை மேல் அதை வைத்துவிட்டுச் செய்வதின்னதென்றறியாமல் திகைத்த வண்ணமாய் உட்கார்ந்தாள். அதைக்கண்ட கமலா 'ஏனம்மா, தலையில் பூவைச் சூட்டிக்கொள்ள வில்லை?' என்று கேட்டாள். தாயார் என்ன பதில் சொல்வதென்றறியாமல் 'அம்மா, என் தலை ஈரம்' என்று சுருக்கமாய்ச் சொல்லி விட்டாள். அதைக்கேட்ட அப்பாலகி 'ஏனம்மா, என்னைக் குளத்துக்குக் கூட்டிக்கொண்டு போனாய்? ஏன் அங்கே குளிக்கச் சொன்னாய்? அன்று கிரகணம் பிடித்ததே, அப்போ பாட்டியுடன் குளத்துக்குவருகிறேனென்றதற்குப்பாட்டிகுழந்தைகள் வரக்கூடாதென்று சொன்னாளே. இன்று ஏன் கூட்டிப்போனீர்கள்?' என்று அவ்வஞ்சகமற்ற குழந்தை வினவியது. இவ்வார்த்தையைக்கேட்ட தாயார் நெஞ்சம் துடித்தவளாய், கண்களில் நீர் ஆறாய்ப் பெருக, பதில் சொல்ல வாயெழும்பாதவளாய் மௌனமாய் அவ்விடத்தை விட்டு அகன்று விட்டாள். அச்சமயம் அவள் வேறு என்ன செய்யக்கூடும். இதைக் கண்ட கமலம் தன் பாட்டியைக் கேட்டால் எல்லாம் தெரியுமென்று நினைத்து அவளிருக்குமிடத்திற்குப் போனாள். அவள் தான் தன் அருமைப் பேத்தியின் கேள்விகளுக்கெல்லாம் எப்பொழுதும் தெளிவாய்ப் பதில் சொல்வதுண்டு. தவிர, கமலாவுக்கு நல்லதும் வேடிக்கையுமான கதைகளை அடிக்கடி சொல்வதுண்டு. ஆகையால் நம் கமலா பாட்டியிடம் சென்றாள். 'பாட்டீ! பாட்டீ!' என்று கூப்பிட்டுக் கொண்டே போனாள்.

'ஏண்டி! என் தங்கமே!' என்று அழுத வண்ணமாயிருந்த பாட்டி கேட்டாள்.

கம:—ஏன் பாட்டி இன்று எல்லாரும் சும்மா அழுகிறீர்கள்? எனக்கும் துக்கம் வருகிறதம்மா. அம்மா என்னிடம் இன்று பேசவே மாட்டேனென்கிறாள். ஏன் பாட்டி இன்று என்னைக் குளத்துக்குக் கூட்டிப்போனீர்கள்? ஏன் நான் வெளியில் போகக்கூடாது? அப்பா 'எல்லாம் பாட்டியைக்கேள், அவள் சொல்வாள்' என்றாரே, என்ன பாட்டி, எனக்குச் சொல்ல மாட்டாயா?

பா:—(தாழ்ந்த குரலில்) ஆமாமடி அம்மா, நான் தான் எல்லாம் சொல்லவேண்டும். நான் தான் உன் தலையில் கல்லைப் போட்டேன். இந்தக் குடும்பசுகத்தையே அடியுடன்கெடுத்த பாபியல்லவோ நான். சொல்லுகிறேன் கேள். மூன்று மாதத்திற்கு முன் உனக்குக் கலியாணம் நடந்ததே, அது நினைவிருக்கா?

கம:—நினைவிருக்கு, அப்போது ரொம்ப வேடிக்கை பாட்டி. அப்போது என்னமோ நலுங்கு, நலுங்குனு சொல்லிக் குங்குமம் மாதிரி சிகப்பாய் என் கையில் அத்தங்காள் கொடுத்து அத்தானுக்குக்காலில் இடு என்றாள். எனக்குத் தெரியவில்லை. அப்புறம் சொல்லிக் கொடுத்தாள். அப்படித் தான் பாட்டீ! சாமளாவுக்கு வெள்ளிக்கிழமை கலியாணமாம். நான் எல்லா வேடிக்கையும் பார்ப்பேன்.

பாட்டி:—ஏ! ஜகதீசா! உன்னுடைய திருவிளையாடலை என்ன என்று சொல்வேன்! விளையாட்டுக் குழந்தையிடம் இவளுக்கு நேர்ந்திருக்கும் தீராத்துயரத்தை எவ்விதம் சொல்லுவேன். அம்மா கமலா! நீ இனிமேல் வெளியே போகக்கூடாது. உன் கலி

யாணத்தில் உன் கழுத்தில் அந்தச் சரடு கட்டினான் பாரு! அந்த அத்தான் நேற்று—

கம.—(வெகு அவசரமாய்) ஏன் பாட்டி, அந்த அத்தான் வருவார், மறுபடி உனக்குஆறுமாசக் கலியாணம் ஆகும் அப்படின்னு அன்று அத்தை சொன்னாளே. அது எப்போது பாட்டி?

பாட்டி:—(இதைக் கேட்டுப் புழுவாய்த் துடித்தாள்). ஆமாம், அத்தை சொன்னது சரி தான். அந்த அதிர்ஷ்ட மெல்லாம் நம்மை விட்டு நீங்கிவிட்டது. அந்த அத்தான் நேற்று ஊரில் செத்துப் போய்விட்டான். அது தான் இன்று காலை தந்திவந்தது, அம்மா. அதனால்தான் நீ வெளியில் போகக்கூடாது. இனி நீ என்னைப் போலவும், அத்தை மாதிரியுமிருக்க வேண்டும். எல்லாரும் உன்னைப் பார்க்கவருவார்கள். இது தான் சங்கதி, என் கண்மணியே.

இதைக் கேட்டவுடன் கமலாவின் கண்களில் நீர் தாரைதாரையாய்ப் பெருகலாயிற்று. அவள் அழகிய முகம் சோர்ந்துவிட்டது. ஆனாலின்னமும் அத்தையைக் கேட்கலாமென்று அவளிருப்பிடம் சென்றாள்.

அழுது கொண்டு வரும் அச்சிறுமியைக் கண்ட அத்தையானவள் மிகுந்த பரிதாபமான குரலுடன் 'ஏனம்மா' வென்றாள்.

'அத்தை, அன்றைக்கு ஒருநாள் இந்தச் சரட்டை என் கழுத்தில் கட்டினாரே அந்த அத்தான் செத்துவிட்டாராம். அதனால நான் இனிமேல் பள்ளிக்கூடம் போகக்கூடாதாம். ஒருத்தர் ஆத்துக்கும் போகக்கூடாதாம், பாட்டியும் உன்னையும்போல் நானிருக்க வேண்டுமாம். இது நிஜமா? உங்களைப்போல் வெள்ளைப் புடவை உடுத்திக்கொண்டு தலையில் துணிபோட்டுக் கொள்ளவேண்டுமா அத்தை!' என்று மிகவும் தீனமாய்க் கேட்டாள் கமலா.

'ஆ தெய்வமே! இந்தக் குழந்தையின் இந்தப் பரிதாபமான கேள்விக்கு நான் பதில் சொல்லக் கடமைப்பட்டேனா? என் துயரம் ஒன்று மாத்திரம் எனக்குப் போதாதோ? எனச் சிந்தித்து, 'ஆமாம் கமலா, நீ வருந்தப்படாதே, உனக்கு வீட்டில் உபாத்தினி வந்து பாடம் கற்றுக் கொடுப்பாள். சாமளாவும் நீயும் வீட்டில் விளையாடலாம்' என்று சுருக்கமாய்ச் சொல்லிவிட்டு அப்புறம் போய்விட்டாள். குழந்தை கமலாவுக்குக்கொஞ்சம் ஏதோ தெரியலாயிற்று. ஆனாலும் தான் 'விதவை' என்று மாறியிருக்கிறோமென்று ஸ்பஷ்டமாய்த் தெரியவில்லை. ஆகையால் ஒருவித வேதனையுடன் இராத்திரி சாப்பிட்டாள், படுத்தாள், தூங்கினாள். பொழுதும் விடிந்தது. இப்படி ஒரு மாதம் சென்றது. கமலா வீட்டிற்கு ஜனங்கள் விசனம் கேட்க வந்து கொண்டேயிருந்தார்கள். அவள் பெற்றோர்கள் கண்ணீர் நிற்கவேயில்லை.

ஆச்சுது இரண்டு, நான்கு, பத்து மாதங்கள்; அப்படியே ஐந்து வருஷங்கள் ஆகிவிட்டது. கமலாவின் புருஷனிறந்து போன மூன்று மாதங்களுக்கெல்லாம் கமலாவின் தகப்பனாரைச் சென்னைக்கு மாற்றி விட்டபடியால் இப்பொழுது அவர்கள் திருவல்லிக்கேணியில் வசித்து வருகிறார்கள். சென்னைக்கு வந்ததுமே ஓர் தகுந்த உபாத்தினியை கமலாவுக்குப் பாடம் கற்பிக்க அவள் தகப்பனார் ஏற்பாடு செய்து விட்டார். அதனால் கமலத்தின் பொழுதும் அவள் பெற்றோர்களின் பொழுதும் ஒருவிதமாய்க் கழிந்தது. தற்சமயம் கமலாவுக்கு வயது பதினொன்று. அவள் இப்பொழுது ஆறும் வகுப்புக்கு வேண்டியப் பாடங்களை வீட்டில் சரிவரப் படித்து வருகிறாள். சமீபத்தில் தான் தனக்குக் கலியாணமானதையும், தன் புருஷன் இறந்துபோனதையும் சந்தேகமறத் தெரிந்து கொண்டாள். இதனால் தன் பெற்றோர்கள் நல்ல சந்தோஷமில்லாமலிருப்பதையும் உணர்ந்தாள்.

பொதுவாய் கமலா யாரிடமும் அதிகம் பேசுவது கிடையாது. உலக விஷயங்களையும் கஷ்டசுகங்களையும் இப்பொழுதுதான் சற்று தெரிந்து கொள்ள சக்தியுடைய பெண்ணாகக் கமலா காண்கின்றாள். அவள் தினசரிப் பத்திரிகைகளையும், மாதாந்திரப்புஸ்தகங்களையும் வெகு ஆவலுடன் படித்து வருகிறாள். அவள் வெகு புத்தி கூர்மையுள்ளவளாதலால் நாளடைவில் வெகு அரியபெரிய விஷயங்களையும் எளிதில் உணரலானாள். அவளுக்கு சந்தேகம் நேருங்கால் தன் அன்பான உபாத்தினியிடத்திலும் தன் அருமைத் தகப்பனாரிடத்திலும் கேட்டுத் தெரிந்து கொள்வாள். அவள் யார் வீட்டிற்கும் போவதில்லை. ஆனாலும் அவள் வயதுடைய பெண்கள் அவள் வீட்டுக்கு வருவதும் ஸ்கூல் சங்கதிகளை அவளிடம் சொல்வதும், தங்களுக்குத் தெரியாத கணக்குகளையும், பாடங்களையும் அவளைக் கேட்டுத் தெரிந்து கொள்வதுமுண்டு. சென்னையில் பெண்களுக்காகத் தனி காலேஜ் இருப்பதையும் அதில் படிக்கும் விதவைப் பெண்களுக்கு 'விதவாச்ரமம்' ஒன்று தனியாயிருப்பதையும் இன்னும் மற்ற விஷயங்களையும் நாளடைவில் அறிந்து கொண்டாள். அவள் தகப்பனார் ஒவ்வொரு நாளும் மாலை நேரத்தில் கடற்கரைப் பக்கம் கமலாவை உலாவக் கூட்டிப் போவதுண்டு. அப்பொழுது அவள் கடற்கரையிலுள்ள ஹைஸ்கூலையும் காலேஜையும் பார்ப்பாள். இதில் சேர்ந்து படிக்கும் பாக்கியம் நமக்கில்லையே என்று பெருமூச்சு விட்டுக் கொள்வாள் தனக்குள்.

இப்படியிருக்க, கமலாவுக்குப் பரீட்சை உபாத்தினியால் செய்யப்பட்டதில் அவள் தேறிவிட்டாள். ஆகையால் அவள் உபாத்தினி இதற்கு மேல் கற்றுக் கொடுக்கத் தனக்கு சக்தியில்லையென்றும் வேறு உபாத்தினி வைத்துக்கொள்ளவோ அல்லது ஸ்கூலில் சேர்ந்து படிப்பதையோ செய்து கொள்ளும்படியும் சொல்லி விட்டாள். இதை ஆதாரமாய் வைத்துக்கொண்டு தன் தகப்பனாரிடம் தன் உள்ளக் கருத்தை வெளியிடலாமென்று கருதினாள். ஒரு நாளிரவு தன் தகப்பனார் அறையில் அவர் தனித்திருக்கும் சமயம் பார்த்து மெதுவாய் உள்ளே போனாள். எப்பொழுது கமலாவைப் பார்த்தாலும் அவருக்கு விசனமே தானிருக்கும். அவர்கள் பேசுவது எப்பொழுதும் பொது விஷயங்கள் தான். ஆகையால் கமலா ஏதோ சங்கதியாய்த் தான் வந்திருக்க வேண்டுமென்று கருதி 'என்ன அம்மா கமலம், விசேஷம்' என்றார்.

கமலம்:—அப்பா! எனக்கு இவ்வருஷத்திய பாட புஸ்தகங்களெல்லாம் படித்து முடிந்துவிட்டன. தவிர, என்னைப் பரீட்சை செய்ததில், நான் தேறிவிட்டதாகவும் உபாத்தினி அம்மாள் சொன்னார்கள். இனி மேல் பாடம் கற்றுக் கொடுக்கத் தனக்கு முடியாதென்றும் சொன்னார்' என்றாள்.

தகப்பன்:—'அப்படியானால் உன் படிப்பை இவ்வளவுடன் நிறுத்திவிட வேண்டியது தானே' என்றார்.

கமலம்:—(திடுக்கிட்டு) 'ஏன் அப்பா நிறுத்த வேண்டும்? பெண்கள் பள்ளிக்கூடத்தில் என்னைச் சேர்த்து விடுங்களேன். மத்தியான ஆகாரத்தைக் கையிலெடுத்துக்கொண்டு காலையில் போய் சாயங்காலம் ஜாக்கிரதையாய்த் திரும்பி விடுகிறேன். எனக்கு வீட்டில் பொழுது போவதும் கஷ்டம் தானே அப்பா' என்றாள்.

அவள் கடைசியாய்ச் சொன்ன வார்த்தை அவர் நெஞ்சைப் பிளந்து விட்டது. குழந்தை எவ்வளவு யுக்தியாய்ப் பேசுகிறாளென்று நினைத்து, 'கமலம்! இன்னும் இரண்டு நாள் யோசித்து உனக்குப் பதில் சொல்லுகிறேன்' என்றார். தகப்பனார் பகர்ந்த விடையைக்கேட்டு

சற்று சந்தோஷத்துடன் மரியாதையாய் அவரிடம் உத்திரவு பெற்றுக்கொண்டு போய்விட்டாள். போகும் பொழுது கடவுள் அவருக்குத் தன்னை மேலும் படிக்கவைக்க அனுகூலமாய் புத்தியைக் கொடுக்க வேண்டுமென்று எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தித்துக் கொண்டே போனாள்.

கமலா போன பிறகு அவள் தகப்பனார் அவள் விஷயமாய் மிகவும் கூர்ந்து ஆலோசிக்கலானார். 'இக்காலத்திலோ பெண்கள் புருஷர்களைப்போலவே படிக்கிறார்கள். அனேகம் பெண்கள் கணவன் வீட்டிலிருந்துகொண்டு தங்கள் குடும்பத்தை கவனித்துக் கொண்டும் படிக்கிறார்கள். என் அருமைக் கமலாவின் சகல சுகங்களையும் நான் மூன்று மாத காலத்துக்குள் இழக்கச் செய்து விட்டேன். அவள் சொல்வதைப்போல் அவள் வாழ் நாட்களை எப்படிக் கழிப்பாள்? பொழுது போக்க வழி ஒன்று அவளுக்கு வேண்டாமா! வீட்டில் சும்மா இருந்தால் அவள் துக்கம் அதிகரிக்குமல்லவா? பெற்ற தகப்பன் என்ற முறைக்கு அவளுக்கு நான் கொஞ்சமாவது நன்மை செய்ய வேண்டாமா? பெண்கள் படிப்பு சகஜமாய் விட்ட இக்காலத்தில் கமலாவை யாரும் ஒன்றும் சொல்லமாட்டார்கள்.' இவ்விதம் அனேக விஷயங்களையும் நன்றாய் ஆராய்ந்து கடைசியாய் அவளை ஸ்கூலில் சேர்த்து விடுவதாக நிச்சயித்துக் கொண்டார். கடவுள் செயலைத் தவிர மனுஷ்யர்கள் செய்யும் வீண் பரிதாபகரமான கோலங்களுக்காவது கமலாவைக் காட்டிக் கொடுக்காமலிருக்கலாமென்றும் நினைத்தார். கடைசியாய் 'ஆ தெய்வமே! என் அருமை மறுமகன் உயிருடன் இருந்தால் பி. ஏ. பாஸ் செய்திருக்கக் கூடும். எனக்கு அவ்வளவு அதிர்ஷ்டம் எப்படிக் கிடைக்கும்?' என்று சொல்லிக்கொண்டு படுக்கைக்குப் போய் விட்டார். அவர் ஒவ்வொரு நாளும் படுக்குமுன் 'பால்ய விவாகம் என்ற பேயை ஜனங்கள் மத்தியிலிருந்து ஓட்டி நல்வழியைக் காட்டியருளும் ஜகதீசா' என்று கடவுளை வணங்கிவிட்டுத் தான் நித்திரை செய்வது வழக்கம். அன்றும் அப்படியே செய்தார்.

ஒருவாரம் ஆச்சுது. திருவல்லிக்கேணி கடற்கரையிலுள்ள பெண்கள் ஹைஸ்கூலில் கமலாவின் உபாத்தினியால் கமலா ஏழாம் வகுப்பில் சேர்க்கப்பட்டாள். வீடு சமீபமாகவே யிருந்தபடியால் அவளால் கால் நடையாகவே போகக்கூடும். ஆனால் அவள் தகப்பனாருக்கு அது இஷ்டமில்லாததால் ஓர் 'ரிக்ஷா' ஏற்படுத்தினார். தன்னைப்போன்ற மனிதனாலிழுக்கப்பட்ட வண்டியில் போக கமலாவுக்கிஷ்டமேயில்லை. ஆனாலும் தன் தகப்பனார் வார்த்தைக்கிணங்கி சம்மதித்தாள். போகும் பொழுது மத்தியான ஆகாரத்தைக் கையில் கொண்டு போய் விடுவது வழக்கம். கமலாவின் அதிர்ஷ்ட மற்ற சங்கதியும் அப்பள்ளிக்கூடம் பூரா பரவிற்று. படிப்பில் அவள் வகுப்பில் முதன்மையாயிருந்தாள். அவள் மீதில் உபாத்தினிகளுக்கெல்லாம் அதிக பட்சம். அவள் 'விதவாச்ரமத்தின்' சங்கதிகளை யெல்லாம் நாளடைவில் உணரலானாள். தன்னிலும் சிறிய வயதுள்ளவர்களும் அவர்கள் பெற்றோர்களால் 'விதவை' என்ற நாமமிடப்பட்டவர்களுமாகிய குழந்தைகளைப் பார்த்துப் பரிதாபப்படுவாள். ஸ்கூலைச் சேர்ந்த விஷயங்களையெல்லாம் தன் தாயார், பாட்டி, அத்தை இவர்களுக்கு அடிக்கடி கமலா சொல்வதுண்டு. பொழுதைப் போக்க இதுவாவது ஒரு வழி இருக்கிறதே என்று அவள் பெற்றோர்கள் சொல்லிக் கொள்வதுண்டு. கமலாவுக்கு மகாத்மா காந்தியின் வசனத்தில் அதிக மதிப்பும் நம்பிக்கையுமுண்டு. ஆகையால் அவள் கட்டுவது கதர்ப் புடவை தான். அவள் 'ஹிந்தி' பாஷையும் சொந்தத்தில் கற்று வருகிறாள். கமலா தலை

பின்னிக்கொள்ளும் வழக்கம் உண்டு. அவள் நெற்றியில் ஒன்றும் வைத்துக் கொள்ளுவதில்லை. அவள் வெற்றிலை உபயோகித்ததே கிடையாது. அவள் காதில் ஒரு கம்மலும், கையில் இரண்டு வளைகளும், கழுத்தில் ஒரு சங்கிலியும் அணிந்து கொண்டிருப்பாள் கமலா தான் புருஷனுடன் கூடி இல்லற சுகங்களை அனுபவிக்கவில்லையே என்று கொஞ்சம்கூட நினைக்கவில்லை. அவள் தன் இருபதாவது வயதில் பி. ஏ. பரீட்சையில் சென்னை மாகாணம் முழுவதுக்குமே முதன்மையாகத் தேறினாள். அவள் ஒருவருஷம்கூட பரீட்சையில் தவறாமல் தேர்ச்சியடைந்து கொண்டே வந்தாள். கவர்ன்மெண்டில் அவளுக்கு உபகாரச் சம்பளம் கொடுப்பதாகச் சொல்லப்பட்டது. அவள் அதைப் பெற்றுக்கொள்ள மனமில்லாமல் தன்னுடன் படிக்கும் ஓர் ஏழை மாணவிக்குக் கிடைக்க ஏற்பாடு செய்தாள். அவளின் தர்ம சிந்தைக்கு அவளைப் பாராட்டாதவர்களில்லை. அவள் அடுத்த வருஷம் எல்.டி. பரீட்சையிலும் ஜயமடைந்தாள். பிறகு அவள் படித்த ஸ்கூலிலேயே மாதம் தொண்ணூறு ரூபாய் சம்பளத்தில் முதல் முதல் வேலைக்கமர்ந்தாள். கமலாவின் தகப்பனார் தன் பெண்ணின் கல்வித் திறமையையும் புத்திசாலித்தனத்தையும் கவனித்து ஏககாலத்தில் சந்தோஷமும் துக்கமும் அடைவார். அவர் விசனப்படும்போது கமலா வெகு சாமர்த்தியமாய்த் தன் தகப்பனாரை வேறு வழிக்குத் திருப்பி விடுவாள். அவளுக்குத் திரும்பவும் கலியாணம் செய்யும்படி பல நண்பர்கள் கமலாவின் தகப்பனாருக்குச் சொன்னார்கள். அவள் பழைய உபாத்தினி இவ்விஷயமாய்க் கமலாவிடம் ஓர் நாள் பிரஸ்தாபிக்கலானாள். 'எனக்கு ஏன் மறு விவாகம், நான் ஏன் சிற்றின்பத்தில் இச்சை கொள்ளவேண்டும்? என்னைக் கடவுள் வேறு வழியில்திருப்பியிருக்க நான் ஏன் அவ்வழிக்குத் திரும்பவும் செல்லவேண்டும்?' என்றாள். 'ஆனால் நானிப்படிச் சொல்வதிலிருந்து என்னைப்போலொத்த பெண்மணிகளின் விவாகத்தில் பிரியமில்லாதவள் என்று நீங்கள் கருதவேண்டாம். விதவா விவாகத்தில் எனக்கு அத்தியந்த விசுவாசமுண்டு. அதிலும் ஒன்றுமே அறியாத விதவைகள் கலியாண விஷயம் மெத்தவும் நியாயமும் அவசியமுமென்று நான் மெத்தவும் ஒப்புக் கொள்ளுகிறேன். மகாத்மா காந்தி அவர்களும் இஷ்ட முள்ளவர்களைத் தான் 'மணம்' புரிந்து கொள்ளும்படி சொல்லியிருக்கிறார். ஆகையால் நான் சிறிதும் களங்கமற்ற தூய்மையான பிரம்மசாரிணியாகவே என் வாழ் நாட்களைக் கடவுளறியக் கழிக்க விரும்பியுள்ளேன்' என்று மிக்க உறுதியாயும், ஸ்பஷ்டமாகவும் கூறிவிட்டாள். இவ்வளவு உறுதியாயிருக்கும் கமலாவின் மனோபாவத்தை அறிந்த அவள் தகப்பனார் அவளை வற்புறுத்த விரும்பவில்லை. கமலாவின் பாட்டியம்மாள் காலம் சென்று விட்டாள். அவள் மரணத் தறுவாயில் 'ஏ! ஆண்டவனே! இவ்வுலகத்தில் எந்தப் புருஷனும், தன் தாயார் வார்த்தைக் கிணங்கி, சிறு குழந்தைகளுக்குக் கலியாணம் செய்து பச்சைப் பாலகிகளின் தலையில் கல்லைப் போடாமலிருக்க புத்தியைக் கொடுத்தருளும்! ஓ சர்வேசா' என்று சொல்லிப் பிராணனை விட்டாள். அதைக் கேட்ட அவள் குடும்பத்தார் மிகுந்த சோகமும் சந்தோஷமும் கொண்டார்கள்.

கமலாவின் தகப்பனாருக்கு எழுபத்தையாயிரம் ரூபாய்க்கு பூஸ்திதி இருந்தது. அதையெல்லாம் விற்றுப் பணமாக்கி நல்ல பாங்கியில் போட்டு வைத்து அவை சகலத்தையும் கமலாவின் பெயருக்கு உயில் எழுதி வைத்து விட்டார். நம் கதர் கமலாவுக்கு அந்த சொத்தின் மேல் துளிகூடப் பிரியமில்லை. அவள் அதில் வரும் வட்டியை [illegible] வருஷம் பெண் கல்விக்காகவும், அதிலும் விதவைப்

Y15m211,N24CM

பெண்களின் படிப்பிற்காகவும், இஷ்டமிருந்து மறு விவாகம் செய்து கொள்ளும் விதவைப் பெண்களின் கலியாணச் செலவிற்காகவும் அதைச் செலவு செய்து வந்தாள். தவிர அந்த சொத்து பூராவும் தர்மத்துக்கே என்று ஒதுக்கி விட்டாள். அதிலிருந்து ஒரு தம்பிடி கூடத் தன் சொந்தச் செலவிற்கோ தன் குடும்பச்செலவிற்கோ அவள் எடுத்துக் கொள்ளவில்லை. அவள் தகப்பனார் தன் பெண்ணிஷ்டத்திற்கு சிறிதும் மாறு சொன்னவரல்ல. கமலா தன் பெற்றோருடன் ஆடம்பரமற்ற நல்ல வழியில் தெய்வ வழி பாட்டுடன் தன் காலத்தைக் கழித்து வந்தாள்.

கமலா ஊரில் யாராவது பதினாறு வயதுக்குட்பட்ட பெண்கள் வைதவியத்தை அடைந்தார்கள் என்று கேள்விப்பட்டால் தனக்குத் தெரியாதவர்களாயிருந்தால் கூட அவாள் வீட்டிற்குப்போய் அந்தக் குழந்தைகளைப் படிக்க வைக்கச் சொல்லியும், அதனால் குழந்தைகளுக்கும் அதன் பெற்றோர்களுக்கும் சேரும் நன்மையையும் எடுத்துக் காட்டித் தன்னையே ஓர் உதாரணமாகவும் எடுத்துச் சொல்லுவாள். அவள் வார்த்தையை அனுசரித்து அனேகம் குழந்தைகள் படிக்க வந்து சேருவார்கள். மேலும் கலியாணமாகாத பிராமணச் சிறுமிகள் வீட்டுக்கும் போய், பதினான்கு வயதுக்கு முன் குழந்தைகளுக்கு விவாகம் செய்ய வேண்டாமென்றும் வெகுவாய் எடுத்துச் சொல்லுவாள். இவ்வளவு நற்குணங்களுடனும், தர்ம சிந்தையுடனும், தெய்வ வழிபாட்டுடனும் காலம் கழித்து வந்தாள் நம் அருமையான கமலம்.

'என்னைப் படிக்க வைக்காமல் என் தகப்பனார் வைத்திருந்தால் வீட்டிலிருந்து கொண்டு சும்மா அழுது கொண்டும், அன்னியர் சுகத்துக்காக உழைத்துக்கொண்டும் ஒருவர் கையின் கீழேயே காலமெல்லாம் ஒண்டிக் கொண்டும் அத்தையையும் பாட்டியையும் போல் கொடிய வேஷத்தைப் போட்டுக் கொண்டும் தானே நானிருக்கவேண்டும். கடவுள் என்னை அதினின்றும் மீட்டாரல்லவா, அந்த ஜகதீசனுக்கு பணமாற வணங்குகின்றேன்' என்று தினமும் மும்முறை தெய்வத்தை வணங்குவாள்.

கமலா தன் ஆறுவது வயதில் தந்தி வந்த அன்று தன்னைக் குளத்திற் கழைத்துப் போனதையும் மற்றும் அன்று நடந்த ஒவ்வொரு சங்கதிகளையும் மாத்திரம் மறந்தவளே அல்ல. ஸ்திரீகள் சங்கத்தில் அடிக்கடி நம் கமலம் பிரசங்கம் செய்வாள். அவள் கூறுவதெல்லாம் பால்ய விவாகத்தை ஒழிக்க வேண்டுமென்றும், விதவைக் குழந்தைகளைப் படிப்பிக்கவேண்டுமென்பதே தான். ஒரு முறை அவள் பேசுவதைக் கேட்டவர்கள் அவள் சொற்படி நடப்பது தான் நியாயமென்று தீர்மானித்துக் கொள்ளுவார்கள். சிறு குழந்தை முதல் கிழப்பாட்டிவரையில் கலமா எல்லார் மனதையும் கவர்ந்து விட்டாள். சுயநலமற்ற, வஞ்சகமற்ற, குற்றமற்ற நம் கமலம் எல்லாராலும் கொண்டாடப்பட்டு சுகமே வாழ்ந்து வருகிறாள்.

சுசீலாவும் கமலாவின் சங்கதியை அவ்வப்போது விசாரித்துக் கடைசிவரை சகலமும் தெரிந்துகொண்டேயிருந்தாள். அன்று முதல் முதல் குளத்திற்குப் போய் வரும்பொழுது கமலாவின் பாட்டி சொல்லிக்கொண்டு போன பரிதாபமான மொழிகள் சுசீலாவின் காதில் தொனித்துக்கொண்டேயிருந்தன.

சகோதரிகளே! 'கல்வி ஒன்றே அழியாச் செல்வம்.' அது எவ்வளவு நன்மையைச் செய்கிறதென்று நம் கமலாவால் தெரிந்து விட்டது. தெய்வம் கஷ்டத்தை மாத்திரம் நமக்கு அளிக்கவில்லை. கூடியவரை விசனத்தை மாற்றிக் கொள்ளவும் வழியைக் கொடுத்திருக்கிறார். ஆகையால் நாம் ஆராய்ந்து நேர்மையான வழியில் செல்வோமாக.

சுபம்.

தேசியத் தாலாட்டு.

(ஸ்ரீமான் "கோமதியப்பன்" பாடியது.)

1. பூந்துகிற்பூச் சக்கரத்தான் பூவுலகம் போற்றுமகான்
காந்திவளர் நாட்டுதித்த கற்பகமே கண்வளராய்.

2. உலகத்து மானியனென் றுற்றபுகழ் ஓங்கும்
திலகன் திருநாட்டுத் தேமலரே கண்வளராய்.

3. சிங்கத் தகையரெனச் செப்புமலி சோதரர்வாழ்
துங்கச் செழுநாட்டுத் தூயமதியே கண்வளராய்.

4. சீலச் சுடராய்ச் செழித்தரிய சீர்பெருகும்
கோலக் குறள்கொண்ட கோமளமே கண்வளராய்.

5. உம்பர் தமிழ்தின் உயர்ந்தசுவை ஊற்றெடுக்கும்
கம்பன் கவிதைகொளும் கற்கண்டே கண்வளராய்.

6. வாக்கினிமை வாய்ந்துருக்க வாரிதியாய் வாழ்பெருநூல்
சேக்கிழார் சீர்நாட்டுச் செங்கதிரே கண்வளராய்.

7. பெண்ணரசியாய்ப் பிறங்கிப் பெண்ணிறையாய்ப் பீடுபெற்ற
கண்ணகியின் காதைகொளுங் கண்மணியே கண்வளராய்.

8. சீத்தலையார் செய்த செழியமணி மேகலைநூல்
பூத்தபுகழ் நாட்டுதித்த பொற்பொளியே கண்வளராய்.

9. திருமுறை தெய்வவருள் தெள்ளுதமிழ்த் தேன்கவிதைப்
பாரதியின் நாட்டுதித்த பாக்கியமே கண்வளராய்.

10. பண்டையச்சீர் பெற்றொளிரப் பாரதத்தாய் பாரோங்கும்
தொண்டினுக்கே தோற்றியவென் தூமணியே கண்வளராய்.

11. அன்பே தன்னாக்கம் அறமேதன் ஆற்றலென
இன்புறக்கொண்டித் தேயம் ஏற்றமுறக் கண்வளராய்.

12. மின்பதத்தாய் மெய்த்தொண்டில் மேவுமின்ப துன்பமெலாம்
இன்பமென்றே எண்ணுமுணர் வேற்று நீ கண்வளராய்.

13. சாதியெனுந் தொல்லைச் சழக்கொழிக்கச் சாற்றுநல்
நீதியுணர்ந் திந்நாடு நேரோழுகக் கண்வளராய்.

14. பாம்புவிடம் போலப் பாராட்டுப் பாசவுடை
தீம்புதரும் என்றெவரும் தேர்ந்துணரக் கண்வளராய்.

15. பதருடையாய் எள்ளிப் பாவுடையைத் தள்ளிக்
கதருடையே காத்தெங்குங் காந்தியுறக் கண்வளராய்.

16. பெண்ணுரிமை பேணின் பிறவுரிமைப் பீடெல்லாம்
நண்ணுமெனி தாயிந்த நாடென்றே கண்வளராய்.

17. தெய்வதப்பொன் தேசொளிரத் தேசியத் தேமணங்கொண்
டுய்வகைக்காங் கல்வி உரமுறவே கண்வளராய்.

18. தரணியுள நூல்பலவுந் தாய்த்தமிழில் தங்க
முரணில்லாக் கல்வி முதிர்ந்தோங்கக் கண்வளராய்.

19. பத்தி பரந்தவுளம் பாங்கினுயர் பண்பொழுக்கம்
சித்திக்குங் கல்வி சிறந்தோங்கக் கண்வளராய்.

20. கலையரசி யாய்த்துலங்கிக் காசினியிற் சொந்த
நிலையரசுற் றிந்நாடு நேர்மையுறக் கண்வளராய்.

அலமேலுவின் உபாயம்.

(ஸ்ரீமதி S. R. ஜயம்மாள்.)

மணியோ ஆறு அடித்தது. பகலெல்லாம் சிரமபட்ட கஷ்டத்தினால் கோபாக்கினியுடன் தன் இல்லத்தைக் குறித்து ஆதித்தியன் நடக்கலானான். புஷ்பங்கள் தங்கள் நறுமணங்களினால் மாருதத்தை நிறப்பின. ஜானகி அம்மாள் தன் நேசியான அலமேலுவுடன் தன் தோட்டத்தில் ஓர் சலவைக்கல்லின் மேலுட்கார்ந்துகொண்டு அவளுடன் சம்பாஷித்துக் கொண்டிருந்தாள். ஜானகி அம்மாளின் ஏகபுத்திரியான கமலம் அலமேலுவின் குழந்தைகளான ராஜம், தங்கம், ஸ்ரீதரன் முதலியவர்களுடன் அந்தத் தோட்டத்திலேயே விளையாடிக் கொண்டிருந்தாள்.

ஜானகி அம்மாள் அந்த ஜில்லாக் கலெக்டருடைய பெண்ஜாதி; அலமேலு ஒரு வக்கீலிடம் முப்பது ரூபாய்ச் சம்பளத்தில் ஒரு குமாஸ்தாவாக இருக்கும் இரங்காத அய்யர் சம்சாரம்.

நானும் என் வேலையெல்லாம் முடித்துவிட்டு அடுத்த நாள் அப்பளாம் இடலாமென்று அப்பளக்குழல் இரவல் வாங்கிக்கொள்வதற்கு ஜானகி அம்மாளின் இல்லம் சென்றேன். என்னைக் கண்ட ஜானகி அம்மாள்: "இரண்டு பேருக்கு மூன்றாய் விட்டது அரட்டை அடிப்பதற்கு" என்று வேடிக்கையாக மொழிந்து, என்னையும் அக்கல்லின் மேல் உட்காரச்செய்தாள்.

யோகக்ஷேமம் விசாரித்துக்கொண்டு, வார்த்தையாடிக் கொண்டிருக்கும் பொழுது ஜானகியம்மாள், "ஏண்டி, அலமேலு! உன் சாமர்த்தியமே சாமர்த்தியமடி! உன் அகத்துக்காரரோ குமாஸ்தா உத்தியோகத்திலிருக்கிறார். உனக்கோ வீடு நிறையக் குழந்தைகள் தவழ்ந்து கொண்டிருக்கின்றன. ஆனாலும் வருஷம் தவறி

னாலும் நகைபண்ணிக் கொள்வது தவறுவதே இல்லையே? அதெப்படியடி ஏற்பாடு செய்து கொள்கிறாய்?" என்று வினவினாள்.

அலமேலுவின் முகம் சுண்டைக்காய்போல் ஆகிவிட்டது. "ஆமாம் அடி, இப்படி எல்லாம் மற்றவர்களைப் பார்த்துப் பொறுமைப்படலாகாது. உனக்கு மாத்திரம்—"

"—பார், பார், கோபித்துக் கொண்டு விட்டாள். நான் பரிகாசத்திற்குக் கேட்டால் என்னமோ அர்த்தம் செய்துகொண்டு இப்படி—" என்று ஜானகியம்மாள் சொல்லிக்கொண்டிருக்கும் பொழுது நான் வெகு நாளாய் நேசிகளாயிருந்தவரும் இவர்கள் சண்டை செய்து கொள்வதைப் பார்க்க சகியாமல்,

"—ஜானகி, அலமேலு, நீங்கள் இப்படியெல்லாம் பேசினால் நான் போய் விடுகிறேன். ஏன், அலமேலு, உன் தாய் வீட்டார் தான் செய்து கொடுக்கிறார்கள் என்று சொல்லி விட்டால் தான் என்ன? இதற்கு என்னத்திற்கு இப்படிச் சண்டை—"

"—உம், அவள் தாய் வீட்டார்கள் கொடுக்கிறார்கள்! இவள் அவர்களுக்கு வேண்டுமானால் கொடுக்கலாம். பாபம், அவர்கள் உபாதானம் தான் எடுப்பதில்லை. அதெல்லாம் எனக்குத்தெரியும். அலமேலு வெகு தந்திரக்காரியாயிற்றே!"

"—அது என்ன தந்திரம்? எங்களுக்குக் கொஞ்சம் சொல்லக் கூடாதா?" என்றேன்.

அலமேலு, கனைத்துக் கொண்டு, "ஒன்றுமில்லையம்மா, எங்க தெருவில் பத்துப்பெண்கள் சேர்ந்துகொண்டு சீட்டுப் போடுவதென்று ஏற்பாடு செய்திருக்கிறோம். அதிலொருத்தியை முக்கிய அதிகாரியாக நியமித்து அவளிடம் ஆளுக்கு பத்து ரூபாய் வீதம் ஒவ்வொருவரும் கொடுத்து வருகிறது; இப்படிப்பத்துமாதங்கள் கொடுத்து வருகிறது. அவள் ஒவ்வொரு மாதமும் பத்துப் பெண்களின் பெயர்களையும் பத்துக் காகிதத் துண்டுகளில் எழுதி, அவைகளை ஒரே விதமாக மடித்து சுவாமி நிலையில் குலுக்கிப்போட்டு, ஒரு சிறு குழந்தையை அந்தக் காகிதத்துண்டுகளில் அதற்கு இஷ்டமான துண்டொன்றை எடுக்கச் சொல்லுகிறது. முக்கியாதிகாரி அச்சீட்டைப் பிரித்துப் பார்த்து அதில் வரைந்திருக்கும் பெயருள்ளவளுக்கு அந்த நூறு ரூபாய்களையும் கொடுத்து விடுகிறது. இவ்வாறாக ஒவ்வொரு மாதம் ஒவ்வொருவளுக்கும் வருகிறது. சம்சாரிகளுக்கு ஒரே மாதம் நூறு ரூபாய்களைத் தம் கையிலிருந்து எடுத்துச் செலவழிக்க முடியாததால் இவ்வாறாகச் செய்து நானும் என் யஜமானரின் கடன்களையும் தீர்த்தேன். இப்பொழுது நகைபண்ண ஆரம்பித்து விட்டேன். நகைக்கு நகையும் ஆகிறது, கடனுக்குக் கடனும் இல்லை, இவ்வளவுதான் அம்மா" என்று சொல்லி முடித்தாள்.

"ஆனால், என்னையும் அந்த ஆட்டத்திற்கு சேர்த்துக் கொள்கிறாயா?" என்றாள் ஜானகி அம்மாள்.

"அதற்கென்ன? எல்லோரும் பேஷாகச் சேரலாம்" என்று அலமேலு சொன்னாள்.

அதற்குள் மணி ஏழு அடித்தது. "கணவர் எங்கே கிளப்பிலிருந்து வந்து விட்டாரோ, வீட்டில் யாரும் இல்லையே" என்று அப்பளக் குழல் வாங்கிக்கொண்டு விடை பெற்றுக் கொண்டு வீடு வந்து சேர்ந்தேன்.

ஸ்ரீ கிருஷ்ணனும் அவருடைய உபதேசமும்.

(ஸ்ரீமான் M. C. கிருஷ்ணசாமி.)

பண்டைக் காலத்திலிருந்த பெரியோர்களின் சரிதங்களை எழுதப் புகுவது கஷ்டமான காரியம். உண்மைகளும் கதைகளும் பிரிக்க முடியா வண்ணம் கலந்து இருக்கின்றன. சரித்திர ஆராய்ச்சியில் அகப்பட்ட காலத்தைச் சார்ந்து சென்றால் இக்கஷ்டம் அதிகரிக்கிறது. மேலும் நம் தேயத்துப் பண்டைக்கால சரித்திர ஆராய்ச்சி செய்வது மிகவும் கடினமாயிருக்கிறது. பழய ஆசிரியர்கள் தங்கள் தங்கள் நூல்களில் காலவரை கவனிக்கவே இல்லை. ஆதலால் ஸ்ரீ கிருஷ்ணனைப் பற்றி மகாபாரதம், பாகவதம், ஹரிவம்சம் முதலிய நூல்கள் விரித்துக் கூறினாலும் அவர் உண்மையான சரிதத்தை எழுதுதல் முடியாத காரியமாம். தற்கால ஆராய்ச்சிக்காரர்களால் கண்டு பிடிக்கப்பட்டவைகளை அப்படியே உண்மையெனக் கொள்ளுதல் தகாது.

முதலிலேயே ஸ்ரீ கிருஷ்ணன் உண்மையாக இருந்தாரா அல்லது சில கவிகளின் கற்பனா சக்தியால் ஏற்படுத்தப்பட்டவரா என்பதை தீர்மானித்தல் வேண்டும். இவ்விஷயத்தை ஆராய மகாபாரதம் எவ்விதம் தற்காலத்தில் உள்ள ரூபத்தை அடைந்தது என்பதை அறிய வேண்டும். மேனாட்டுப்பண்டிதர் அனேகர் இவ் வித்தியாசம் சரித்திர சம்பந்தமான சில சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டது என்றும் ஆரம்பத்தில் பாரத யுத்தத்தை மாத்திரம் வர்ணித்து இருந்தது என்றும் கூறுகின்றனர். அப்படியாயின்—கீதை ஆதிகாலத்திலிருந்தே பாரதத்தின் பாகம் என்று தோன்றுதலால், இந்த நூல்களில் எல்லாம் முக்கியஸ்தராகத் தோன்றும் ஸ்ரீ கிருஷ்ணன் ஒரு காலத்தில் உண்மையாக விளங்கிய பகவான் என்றே தோன்றும்.

இவ்விஷயம் இவ்வாறு இருக்க, ஸ்ரீ கிருஷ்ணன் எக்காலத்திலிருந்தார் என நிர்ணயிப்பதும் எளிதல்ல. மகா பாரதத்தில் கூறி இருக்கப்பட்ட விவரம் கவனிக்கற்பாலது. இதன்படி ஸ்ரீ கிருஷ்ணன் கலியுக ஆரம்பத்தில் நூறு வயதிற்கு மேம்பட்டவராய் இருந்தனர் எனத் தோன்றும். இதை நாம் ஒப்புக் கொண்டால் ஸ்ரீ கிருஷ்ணன் கிறிஸ்து பிறப்பதற்கு ஏறக்குறைய 3,000 வருஷங்களுக்கு முன் இருந்ததாக ஏற்படும். வேறு சிலர் அவர் இருந்த காலம் கி.மு. 1,400 என்கிறார்கள். ஈண்டு ஆரியர்கள் இந்தியாவில் குடியேறிக் கொண்டிருந்த காலத்தில் ஸ்ரீ கிருஷ்ணன் இருந்திருக்க வேண்டும் என்று கூறி நிற்போம்.

அக்காலத்தின் பொதுவாழ்வை ஸ்ரீ கிருஷ்ணன் எவ்விதமாக மாற்றினார் என்பதைப் பற்றியே இச்சிறு வியாசத்தில் முக்கியமாக எழுதப்படும். பாரதமே மிகவும் பழைய கிரந்தமாகையால் அதையே ஸ்ரீகிருஷ்ணனின் சரித்திரத்திற்கு மூலமாகக் கொள்வோம்.

யமுனைக் கரையில் வசித்து வந்த யாதவர் குலத்தைச்சார்ந்தவர் ஸ்ரீ கிருஷ்ணன். அவர்கள் ஆயர்க்குரிய தொழிலை நடத்தி வந்தார்கள் என்றும் வியாயாம விநோதங்களில் மிக்க பிரியமுள்ளவர் என்றும் புலப்படும். அவர்களைப் பற்றிக் கூறப்படும் அநேக கதைகளால் யாதவர்கள் நல்ல ஆகாரத்திலும் சுரா பானத்திலும் ஆசையுள்ளவர்கள் என்றும், சுகமாகக் காலம் கழிக்க விரும்பியவர்கள் என்றும் தோன்றுகிறது. மௌசல பர்வத்தில் கட்குடியும் ரிஷி

களிடத்தில் மரியாதை இன்மையும் அவர்களை அழித்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது. வட மதுரையில் முதலில் யாதவர்களுக்குத்தலைவராக சூரசேனர் என்பவர் குடியேறினதாகத் தோன்றுகிறது. அவருக்கு வசுதேவன் என்கிற பிள்ளையும், குந்தி என்கிற பெண்ணும் பிறந்தார்கள். இவ்வாசு குமாரன் கம்சனுக்குத்தங்கையும் உக்கிரசேனன் பெண்ணுமான தேவகியை மணம் புரிந்தான். குந்தியை போஜ தேசத்தைச் சேர்ந்த ஒரு மன்னன் வளர்த்து, பாண்டுவிற்குக் கலியாணம் செய்வித்தான்.

ஸ்ரீ கிருஷ்ணன் வசுதேவருக்கும் தேவகிக்கும் பிறந்தவர். பாகவதம் ஸ்ரீகிருஷ்ணனுடைய பால்ய பருவத்தை அழகாக வர்ணித்திருக்கிறது. ஆயின் இப்புராணக் கூற்றுகள் சரித்திர ஆராய்ச்சிக்கு அதிக உபயோகமானவை அல்ல. ஸ்ரீ கிருஷ்ணனுடைய சரிதத்தில் கம்ச வதமே நம்மால் அறியக்கூடிய முதல் விஷயமானாலும், இவ்விடத்தில் அவர் நெறி அற்றவர் என்று கூறும் சில கதைகளைப்பற்றிச் சிறிது ஆராய வேண்டும். கீதாசாரியனும் மதுரையில்—சிலர் கூறுகிறபடி—அலைந்த காமாதுரனும் ஒருவனே எனக்கொள்ளல் அசாத்தியம். ஆயின் இவ்வித நம்பகம் சில விடங்களில் இருப்பதால் இவ்விஷயத்தை ஆராய்தல் அவசியமாம்.

கடவுளிடம் எப்பெரியோராவது பக்தியைப் புகட்டின் பிற்காலத்தில் பக்தர்கள் ஜீவாத்ம பரமாத்ம சம்பந்தத்தை தாம்பத்ய சம்பந்தத்தோடு உவமையிட்டுக் கூறுதல் உண்டு. கடவுளோடு ஐக்கியத்தைச் சிலர் சிருங்கார பாவம் கலந்த பாட்டுகளில் வர்ணித்து இருக்கின்றனர். இதன் உட்கருத்தை நாம் மறந்தோமானால் இவை வெறும் காதற்பாக்களாகத் தோன்றும். கோபிகா ஸ்திரீகள் கிருஷ்ண மதத்தை அனுசரித்திருக்கலாம். அவர் கூறியபடி, அவரை பகவத் அவதாரம் என ஒப்புக் கொண்டிருக்கலாம். பிற்காலத்தியோர் கோபிகைகள் கிருஷ்ணனைத் தங்கள் நாயகரைப்போல் பாவித்ததாக இதனின்றும் திருத்திக் கூறியிருக்கலாம். இது எப்படி இருந்தபோதிலும், ஸ்ரீ கிருஷ்ணன் நெறி தவறினவர் என்று கூறுதல் தகாது.

கிருஷ்ணனுடைய கோபிகா விலாசங்களில், ஹரிவம்சம், பாகவதம், கீதகோவிந்தம் ஆகிய இந்நூல்களில் எவ்வித வித்தியாசங்கள் இருக்கின்றன என்று கவனித்தால் இது விளங்கும். ஹரி வம்சத்தில், இக்கிரீடைகள் மிக அற்பமாய் வர்ணிக்கப்பட்டிருக்கின்றன. அதற்குப் பிற்காலத்திய பாகவதத்தில் விரிவான வர்ணனைகள் காணப்படுகின்றன. ஆயின் புராண கர்த்தா இக்கிரீடைகள் நெறி தவறினவல்ல என நிரூபிக்கப்பிரயத்தனப்பட்டிருக்கிறார். பன்னிரண்டாம் நூற்றாண்டில் இருந்த ஜய தேவர் கிருஷ்ணனுக்கும் பாகவதத்தில்கூட காணப்படாத ராதை என்பாளுக்கும் ஏற்பட்ட காதலை வர்ணித்துள்ளார். ஆனால் இக்காவியத்திற்கு உட்கருத்து உண்டென்று அநேக வியாக்கியாதாக்கள் கருதுகின்றனர். க்ரையர்ஸன் (Grierson) என்பவர் இவ்விஷயத்தைப் பற்றிக் கீழ்கண்டவாறு கூறியுள்ளார்:—

“ஜீவாத்மாவுக்குக் கடவுளிடம் உள்ள பக்தியை ராதை கிருஷ்ணனிடம் தன்னை ஒப்பிவித்து விடுவதாக வர்ணிக்கப்பட்டிருக்கிறது. கிழக்கு தேசத்திய அதிதீவிரமான பக்தி கரை அற்றது போல் வெளிக்குத் தோன்றுகின்ற சம்சாரக் கடலின் அக்கரையில் பக்தனை அழைத்துக் கொள்ளப் பிரியமுடன் காத்துள்ள கடவுளை ஸ்துதி செய்ய தூண்டுகிறது. ......ஆயினும், நான் அவர்கள் இவ்வுணர்ச்சி மிகுந்த பதங்களை எழுதினபொழுது முறை கெட்ட எண்ணங்களை உடையவர்களாய் இருந்தார்கள் என நம்பமாட்டேன்.”

(தொடரும்.)

காலத்தின் கொடுமை.

(ஸ்ரீமதி சுந்தரம்.)

அனாதி காலமாய் மானிடர்களுள் முதலவன் என்ற பட்டம் கொண்ட ஆடவர் பல விஷயங்களில் தாழ்ந்தவர்களாயிருக்கிறார்கள். சரீர பலம் வெகு குறைவாக இருக்கிறார்கள்.

ஸ்திரீகளுக்கோ சிறு வயதிலேயே வைதவியம் உண்டாகிறது. சிறு வயதில் குழந்தைகளைப் பெறுகிறார்கள். சிறு வயதிலேயே மாமி, நாத்தி, புருஷன் முதலானவர்களால் இடிபட்டு, தங்களது சந்தோஷம், மனோதிடம் யாவற்றையும் இழக்கிறார்கள். சதா காலமும் குற்றங்கண்டு பிடிக்கப்படுவதும், ஏவலிடப்பட்டும், அப்ரியமான வார்த்தைகளையே கேட்டுக் கொண்டும் இளம் பருவத்தைக் கழிப்பது கொடிது, மிகக்கொடிது.

கல்வியின்மையினால், ஓட்டமில்லாத சிறிய தண்ணீர் குட்டைகளைப்போல் ஸ்திரீகள் மனம் அழுக்காறுடன், தமக்குக் கீழ்ப்பட்டவர்களை ஹிம்ஸை செய்வதிலேயே செல்கின்றது.

புருஷர்கள் பெண் கல்வியைப் பற்றி அநேக வித உபந்நியாசங்கள் செய்வதிலும், தர்க்கங்கள் புரிவதிலும் சமர்த்தர்களாயிருக்கிறார்கள். ஆனால் தம் வீட்டிற்குள் நுழைந்ததும் அவர்கள் உதார குணங்களெல்லாம் பறந்தோடி விடுகின்றன. காலையிலிருந்து உழைத்துக் கொண்டிருக்கும் மனைவியைத் திட்டுவதும், அவள் மேல் இல்லாத குற்றங்களை ஏற்றுவதுமே தொழில் என்று எண்ணுகிறார்கள். நளாயினியைப் பரீட்சிப்பதற்கு மௌத்கல்யர் எவ்வளவு கொடுமையாய் நடந்துக் கொண்டாரோ, அவ்வளவு கொடூரமாய் இப்பொழுதும் அநேக புருஷர்கள் நடந்துக் கொள்கிறார்கள். "கறியில் உப்பு இல்லையே" என்று மனைவியை அடிக்கிறார்கள். "எப்பொழுதும் புத்தகமும் கையுமாக யிருக்கிறாயே, என் தாயாருக்குப் புத்தகங்களைக் கண்டால் பிடிக்காது என்பதை அறியாயோ?" என்று ஹிதோபதேசம் செய்பவர் சிலர். "மனைவிக்கு நாகரிகமாயிருக்கத் தெரியவில்லை, ஆங்கிலம் தெரியாது" என்பது சிலர் குறை.

"தேவடியாளைப்போல் பாட்டென்ன சதா? எனக்கு உன் தகப்பனைப்போல் பாட்டுப் பிடிக்காது" என்று சிலர் கண்டிப்பார்கள். உண்மையில் அவர்களுக்குப் பாட்டின்மேல் பிரியம் உண்டு, ஆனால் மனைவிக்கு சந்தோஷம் கூடாதென்பது அவர்கள் கொள்கை. தவிர, மாமனாரைப்பற்றி ஒரு தூஷணையாவது மனைவியிடம் சொல்லவேண்டும். அநேகவிதமான ஒழுங்கற்ற கட்டுப்பாட்டிற் கெல்லாம் தலை கொடுத்து, தனது வாழ் நாட்களில் ஒருவித சுதந்திரமும் அனுபவியாத ஸ்திரீகள் அனேகர்.

ஐந்தாறு குழந்தைகளுடன் இருக்கும் புருஷனுக்கு, பத்து, பன்னிரெண்டு வயதில் மனைவியாகும் பெண்ணுக்கு எப்பேர்ப்பட்ட அனுபவங்கள் உண்டாகும்! அக்குழந்தைகளுக்கு சமான வயதுள்ள இந்தப் பெண், அக்குழந்தைகளை எப்படி பராமரிப்பாள்? "இக்குழந்தைகளை பார்த்துக் கொள்ளத்தான் உன்னை மணந்தேன். நீ என் தாயார் சொற்படி என் குழந்தைகளைப் பார்த்துக் கொள்ளல் வேண்டும். இன்றேல் உன்னை விலக்கிவிட்டு, வேறு தகுந்த பெண்ணை மணப்பேன்" என்கிறான். அப்பெண் எவ்வளவு கஷ்டங்களிலிருந்தாலும் பொருட்படுத்தாது, வணக்கத்துடன் கீழ்ப்படியவேண்டியவள். ஒரு சமயம் விலக்கிவிட்டானால் என் செய்வது?

குரூபியாயிருக்கும் தனவந்தன் மகளை ஏராளமான வரிசைகளுடன் மணப்பது, பிறகு "அவள் விகாரமாயிருக்கிறாள்" என்று அவளை விலக்கி வைத்து விட்டு, வேறு விவாகம் செய்து கொள்வார்கள். "தாயாருக்குப் பணிவிடை சரிவரச் செய்யவில்லை" என்று சிலர் மாத்ரு பக்திமேலிட்டு மனைவியை விலக்கி வேறு விவாகம் செய்து கொள்கிறார்கள். மனைவியை விலக்க அனேக வ்யாஜங்கள் உண்டு.

"எப்பொழுதும் ஸ்திரீ ஜன்மங்களை அடித்துக் கொண்டாவது, வைது கொண்டாவது இருந்தால்தான் சரியாய் நடந்து கொள்வார்கள். அவர்களுக்கு என்ன கல்வியா? கேள்வியா?" என்று சமாதானம் கூறுபவர்கள் சிலர். கல்வியையும், பொருமையையுமே தனமாகக் கொள்ளவேண்டிய ஆடவர்கள் ஸ்திரீகளைக் காட்டுமிராண்டித்தனமாக நடத்தி, அவர்களுக்குக் கல்வி புகட்டாதிருப்பது எவ்வளவு பரிதபிக்கத் தக்கது! பிறருக்கு வித்தியாப்பியாஸம் செய்விப்பதே குருவின் முதற் கடமை. அவர்களது அர்த்தபாகமாகிய மனைவி அறியாமையில் மூழ்கியிருக்கும்பொழுது அவர்கள் பிறருக்கு வித்தியாப்பியாஸம் செய்விப்பது ஒவ்வுமோ? விவாக வயதை உயர்த்தி ஸ்திரீகளுக்குக் கல்வி கற்பித்து, அவர்களை கௌரவித்துத் தங்களுக்கு சமமாக எப்பொழுது செய்து கொள்ளுகிறார்களோ, அப்பொழுது தான், अग्रजन्मन् என்ற பெயருக்குத் தகுந்தவர்களாவார்கள்.

திரௌபதியும் சத்தியபாமையும்.

பாண்டவர்களின் ராஜ்யஸ்ரீயைப் பார்க்கப் பொருத துர்யோதனாதிகள், தர்ம புத்திரரைப் பாச்சிகை ஆட்டத்தில் வஞ்சித்து, அவர்களை 13 வருடம் கொடிய விலங்குகள் வாழும் கானகத்தில் வசிக்கும்படியும் 14-ம் வருடம் ஒருவரும் அறியா வண்ணம் காலங் கழித்து வரவேண்டுமென்றும் உறுதிமொழி வாங்கிக் கொண்டு, தர்மபுத்திராதிகளைச் சகல ராஜ்ய சம்பத்தையும் துறக்கச்செய்து, தர்மபத்தினியான திரௌபதியை மட்டும் துணையாகக் கொண்டவர்களாய்க் காட்டுக்கு அனுப்பியதும், இச்சங்கதியானது காற்றைப்போல் எங்கும் பரவ, கிருஷ்ணபகவானும் அதைக் கேள்வியுற்று மிகுந்த விசனமடைந்தவராய்த் தன் மனைவியான சத்தியபாமையுடன்விரைந்து பாண்டவர்களைச் சமாதானம் செய்யும்பொருட்டு இவர்கள் வசிக்குமிடம் நோக்கிவர, தர்ம புத்திராதிகளும் அவரைக் கண்ணுற்று, ஆனந்த வெள்ளம் புரள வரவேற்று, தங்கள் துயரை ஒருவாறு மறந்து நின்றனர். சத்தியபாமையும் திரௌபதியைப் பலவகை விநோத மொழிகளாலும் அன்பார்ந்த வசனங்களாலும் ஒருவாறு தேற்றி, இருவரும் கலந்து உரையாடிக் கொண்டிருக்கும் ஓர் சமயத்தில் பின்வருமாறு வினவினள்.

"பிரிய சகியே! திரௌபதி! வெகு நாட்களாய் உன்னை ஒரு வார்த்தை கேட்க வேண்டுமென்று என் மனம் தூண்டுகிறது. அந்த அவாவை நான் எவ்வளவு அடக்கியும் என்னை மீறி முன் எழுகின்றது. ஐந்து இந்திரர்களுக்கு ஒப்பான குந்தி புத்திரர்களை நீ எவ்வித உபாயம் கொண்டு உபசரித்து நிற்கின்றனை? அவர்கள் ஒவ்வொருவரும் உன் மீது வைத்திருக்கும் அன்பை நோக்குங்கால், என் மனம் ஆச்சரியங் கொள்கின்றது. உன் சிறிய சொல்லிற்கும் அவர்கள் அடிமைகளாய் நிற்பது எங்ஙனம்? தேவர்களுக்கும் அஞ்சாத அவர்கள் உன் மனம் வெறுப்புக் கொள்ள ஐயமுறுகின்றனர். உன் அன்பை அதிகமாய்க் கொள்ளை கொண்ட

வன் யாவன் என்ற ஐயம் எழாமலும் அதற்காக அவர்கள் ஒருவர் மேல் ஒருவர் பகைமை பாராட்டாமலும் எப்படிக் காக்கின்றாய்? உன்னிடம் ஐவரும் ஒன்று போல் ஒழுகுவது அவர்களின் சகோதர வாத்சல்லியத்தின் பெருக்கோ, அல்லது உன்னிடமிருக்கும் அற்புத சக்தியின் அதிசயமோ? என் ஒப்பற்ற அழகினாலும், இனிய மொழிகளாலும் ஒருவரான என் கணவனை வசியம் செய்ய இயலாதவளாய்ப் பரிதபித்து ஏக்கங் கொள்கிறேன். அப்படியிருக்க, சகோதரியே! நீ மட்டும் எந்த உபாயத்தால், அல்லது எந்த மந்திரத்தின் சக்தியால், எந்த ஔஷதத்தின் பெருமையால் வசீகரித்தனையோ யான் அறிகிலேன். அவ்வித உபாயத்தை உன் பிரிய சகியான எனக்கு எடுத்துரைப்பாய்'' என்றதும்,

திரௌபதி சிறிது புன்னகை கொண்டு "சத்யே! இவ்விதம் நீ கேட்பது நீதியாகுமோ? ஓர் அறியாபேதைப் பெண் கூறும் மொழிகளோ கண்ணனுடைய பிரியையான உன் வாயினின்றும் நான் கேட்பது. நன்று! நன்று! யாவற்றையும் அறிந்த நீயும் ஏனோ இவ்விதம் பிதற்றுகின்றாய்? மருந்தினாலும், மந்திரத்தினாலும் கணவனைவசியம்செய்வது துஷ்ட ஸ்திரீகளுக்குப் பொருந்துமே அல்லாது உன் போன்ற உத்தமிகளுக்கு அழகாகுமோ? நானும் அவ்வித உபாயங்கள் ஒன்றும் செய்தறியேன். ஔஷத மந்திரப் பிரயோகங்கள் அவர்கள் திடகாத்திரத்தை அழிவுறச்செய்து பித்தர்கள் போல் ஆக்குமே ஒழிய நம்மிடம் ஆற்றொணா ஆசை வைக்கச் செய்யுமோ! என் மனதாலும் வாக்காலும் பதியே தெய்வமாய்க் கொண்டு, அவர்கள் அன்பே என்னுயிர் நிலையாய்க் கொண்டு உபசரித்து வருகின்றேன். அவர்கள் முகம் மாற யான் பொறேன். அவர்கள் ஒவ்வொருவர் நோக்கத்தையும் அறிந்து அதன்படி நடந்து வருகிறேன். அவர்கள் துயருற்றுத் தோன்றினால் என் மனமும் அவ்விதமே விசனத்தில் ஆழ்ந்துவிடும். அவர்கள் சந்தோஷத்தையும் பகிர்ந்து நிற்பேன். ருசியுள்ள அன்னபானாதிகளால் உபசரித்து அவர்கள் வெளியிற் செல்லும் வரை என் துயரை அடக்கிக் கொண்டு மலர்ந்த முகத்துடன் விடை அளித்து வீட்டுள் செல்வேன். அவர்கள் வீடு திரும்பியதும் சிறு நகை மொழிகளால் அவர்கள் துயரை மறக்கச் செய்து ஆநந்தங் கொள்ளச் செய்வேன். அவர்கள் உறங்கும் மட்டும் யானும் கண் மூடேன். அவர்கள் நித்திரை கொள்யாமல் ஏக்கமுற்று இருப்பின் நானும் உறங்கேன். மகா வீரர்களான இவர்களை புத்திர பாக்கியமாய்ப் பெற்ற என் மாமியான குந்தி தேவியை என தன்னையைப் போல் நேசித்து, என் தோழியாய் என் அந்தரங்களைப் பகிர்ந்து, தெய்வம் போல் வணங்கி அவர்கள் அன்பின் ஆதரவில் ஈடுபட்டு என் கஷ்டங்களைப் ஒருவாறு மறந்து நிற்பேன். எவ்விதம் நாட்டில் என் கணவர்கள் அன்னபானாதிகளாலும் இன்னும் மற்றுமுள்ள அநேக கைங்கரியங்களினாலும் உபசரிக்கப் பட்டிருந்தனரோ அவ்விதமே என் இருகைகளால் சிறிதும் சலிப்படையாமல் உபசரித்து பின் எடுத்த ஜன்மத்தை புனிதமாக்கிக் கொள்கிறேன். அவர்கள் விரும்பாத ஓர் மனிதரையோ அல்லது விஷயங்களையோ நான் கனவிலும் விரும்புவதில்லை. நான் ஓர் ராஜகுமாரி என்ற செல்வத்தின் செருக்கு என் மனதை ஒரு போதும் அடிமையாக்கி, என் கணவர்களுக்கு யான் செய்யும் பணிவிடைகளுக்கு இடையூறாய் நிற்பதில்லை. அவர்கள் செய்யும் எல்லாக் காரியங்களும், நினைக்கும் ஒவ்வொரு எண்ணங்களும், செல்லும் இடங்களும், யாவற்றிலும் நான் அறியாதது ஒன்றுமில்லை. குடும்ப பாரத்தையே என்னிடம் ஒப்புவித்து விட்டு பாண்டவர்கள் கவலையின்றி சஞ்சரிக்கின்றனர். அவர்கள் செய்யும் ஒவ்வொரு ஆலோசனையிலும் நானும் சேர்க்கப்படுவேன். இரவும் பகலும் அவர்கள் சுகமே என் விரதமாய்க் கொண்டு காலங்கழிக்கின்றேன். இந்திராதி தேவர்களை காண்பேனாயினும் என் மனது சிறிதும் சலிப்பதில்லை. இவ்வுலக முழுவதும் எனக்கு அளிப்பதாய் இருந்தாலும் அவர்களை விட்டு கணமேனும் பிரிந்திருக்க நான் சகியேன். இவ்விதம் என்னையே நான் புகழ்ந்து கூறுவது சகியான நீ வினவியதாலேயே அல்லாது, என் குணங்களைக்கண்டு செருக்கடைந்து பிதற்றியதல்ல வென்று நன் குணர்வாய். ஆதலால், என் பிரிய சகோதரியே! நீ சந்தேகிந்தபடி நான் ஓர் மந்திரிவாதியுமல்ல, வைத்தியச்சியுமல்ல. பரிபூர்ணமான அன்பினாலும் அவர்களிடம் எனக்கிருக்கும் பக்திபாதிசயத்தினாலுமே அவர்கள் என் சொல்லிற்கு இணங்கி என்னிடம் மட்டில்லா காதல் கொண்டு ஒழுகுவதும், இனி ஏதாவது சந்தேகமிருக்குமாயின் கூறுவாய் என்றனள். சத்தியபாமை வெட்கித் தலை குனிந்தவளாய், 'திரௌபதி! நீயே உலகத்தில் ஸ்திரீகளில் சிறந்தவள். நான் உன் உண்மை சக்தியறியாது மோசம் போனேன். உன்னை சாமான்யமானவளாய் எண்ணிக் கேட்ட கேள்விக்கு என்மீது சினங் கொள்ளாது மன்னிப்பாய்' என்றதும் திரௌபதி அவளை ஆலிங்கனம் செய்துகொண்டு 'ஒருக்காலும் நீ கேட்டதிற்காக நான் வெறுப்புக் கொள்ளேன்' என்று சமாதானம் செய்தனள்.

பிறகு சில நாட்கள் சென்றதும், கிருஷ்ண பகவான் பாண்டவர்களிடம் விடைப் பெற்று, சத்தியபாமையுடன் நான்கு வெண்புரவிகள் பூட்டப்பெற்ற கோடி சூரியனுக் கொப்பான ரதமேறி துவாரகையை நோக்கிச் செல்கையில் தன் மனைவியை நோக்கிச் சிரித்து புன்னகையுடன் சொல்லலுற்றார் :—

'பிரியே! திரௌபதியிடம் கணவனை வசியம் செய்யும் மந்திரத்தை உபதேசம் பெற்றனையோ? அவள் உபயோகித்த ஔஷதத்தின் முறையை உன்னிடம் உரைத்தனளோ' என, சத்தியபாமையும் எல்லாமறிந்த பரமாத்மாவான கண்ணனிடம் ஒன்றையும் ஒளிப்பது முடியாத காரியம் என்றும் இம்மூவுலகில் "அவனன்றி ஓர் அணுவும் அசையா'' என்பதையும் நன்குணர்ந்தவளாய், விசாலமான கண்ணனின் மார்பில் தன் மதிமுகத்தை வெட்கத்தினால் மறைத்துக் கொள்ள, பேதையான அவளை இன்னும் வருத்துவது அழகல்ல என்று எண்ணியவராய் கிருஷ்ணன் அவளை மார்புறத் தழுவிக் கொண்டார்.

த. உ.

பெண்களின் தாழ்மை.

(ஸ்ரீமதி K. கமலாம்பாள்.)

நாகரிகம் மிகுந்த இந்நாட்களில் பெண்களை மிகவும் தாழ்மையாக நினைக்கிறார்கள். அதற்கு முக்கிய காரணம் வரதட்சிணை என்று கருதப்படுகிறது. அது விஷயமாக எனக்குத் தெரிந்த மீனாக்ஷி என்ற ஒரு ஸ்திரீக்கும் எனக்கும் நடந்த சம்பாஷணைகளை கீழே விவரிக்கின்றேன்.

ஒரு நாள் மேற் சொன்ன மீனாக்ஷியானவள், மத்தியானம் 12 மணிக்கு ஏதோ காரியமாக என் வீட்டிற்கு வந்தாள். அப்பொழுது கைக் குழந்தை சற்று அழுது கொண்டிருந்தது. அவள் 'என் குழந்தை அழுகிறது உன் கணவர் பள்ளிக்கூடத்திலிருந்து வரும் சமயமல்லவா? நீ டிபன் செய்யப் போகவேண்டாமா?' என்

ருள். அதற்கு நான் 'ஆம், நீங்கள் சொல்வது சரிதான். ஆனால் அவர் வருவதற்கு இன்னும் 1 மணி சாவகாசம் இருக்கிறது. அதற்குள் அழும் குழந்தையைச் சமாதானப் படுத்தி விட்டுப் போகவேண்டு மென்றேன். பிறகு எனக்கும் அவளுக்கும் கீழ்கண்டபடி சம்பாஷணை நடந்தது.

மீனாக்ஷி:—இது பெண் குழந்தை தானே?

நான்:—ஆம்.

மீனாக்ஷி:—இந்நாட்களில் பெண் குழந்தைகளை வைத்திருப்பவர்களுக்கு மிகுந்த கஷ்டம். பெண்களால் எவ்வளவு துன்பம் உண்டாகிறது. பெண்கள் பிறந்த உடனேயே எல்லோரும் 'பெண் குழந்தையா?' என்று வெறுப்புடன் கூறுகின்றனர்.

நான்:—அப்படி வெறுப்பதற்கு என்ன காரணம்?

மீனா:—அது தெரியாதா? வரதட்சணை தான் முக்கிய காரணம்.

நான்:—இதற்கா இவ்வளவு வெறுப்பு. பெண் குழந்தைகளை பெண்களாகிய நாமே வெறுத்தால், பிறகு அவைகள் என்ன செய்யும். வரதட்சணை கொடுக்க சக்தியில்லாவிடில் அவர்கள் என்ன செய்வார்கள். வரதட்சணை கொடுத்து கலியாணம் செய்வதில்லை என்று பத்துப் பெயர்கள் சேர்ந்து ஒரே ஏற்பாடு பண்ணினால் தானே அவர்களே வலுவில் வந்து பெண்ணை விவாகம் செய்து போவார்கள்.

மீனா:—நீ சொல்வதைப் பார்த்தால் பெண்களை விவாகமில்லாமலே வைத்துக் கொண்டு அவர்களாய் வந்து கலியாணம் செய்து கொள்ளும் பொழுதல்லவோ விவாகம் செய்யச் சொல்லுகிறாய். அவ்வளவு பெரிய பெண்களை நம் ஜாதியில் வைத்துக் கொள்ளலாமா? ருதுவாய்விடாதா?

நா.:—இந்நாட்களில் அப்படியாகாமல் கலியாணம் நடக்கிறதோ? சிலர் ருதுவாகியிருந்தும் இல்லை என்று சொல்லிக் கொள்ளுவார்கள். சிலர் அதற்கும் தைரியமாக இருப்பார்கள். சில பெண்கள் வயது ஜாஸ்தியாகி ருதுவாகாமலிருந்தாலும் ஆய்விட்டதாகவே, புரளி செய்து விடுவார்கள். இவ்வளவு நாள் வைத்திருந்து, கடைசியில் மிகுந்த அவசரத்துடன், பெரியவன் சின்னவன் என்றும், அவர்கள் அந்தஸ்து எப்படி யென்றும் பாராமல் மிகுந்த ஏழைக்கு அதிக பணத்தைக் கடன் வாங்கியாவது கொடுத்து, கலியாணம் செய்கிறார்கள். பிள்ளைகளின் பெற்றோர்களும் தன் பையனைவிட பெண் இரண்டொரு மாதமே சிறியவளாயிருந்தாலும் இந்த சமயம் தவறினால், ஜாஸ்தி பணம், வராதென்று சிகப்போ, கருப்போ, குணமோ, அவகுணமோ, லட்சணமோ, அவலட்சணமோ, ஒன்றையும் கவனிக்காது, பணத்தையே பிரதானமாக நினைத்து கலியாணம் செய்து விடுகிறார்கள். இவ்வளவு அவசரத்தில் ஜாதகமும் சரியாகப் பார்க்கிறதில்லை. பொருத்தமில்லை என்று யாராவது சொன்னால், 'அதுகளெல்லாம் இந்த நாளில் யார் பார்க்கிறார்கள், மனப் பொருத்தமும், பணப் பொருத்தமும் இருந்தால் போதும்' என்று சொல்லுகிறார்கள். இதைத் தவிர, சிலர் தன் பெண் ஜாதகத்தை, வயது குறைத்து, புது ஜாதகம் எழுதிக் கொண்டு வந்து விடுகிறார்கள். அதினால் ஒரு லாபசேதம் வந்தால் அது யாருக்கு அதிக துன்பமென்பதையும் கவனிக்கிறதில்லை. ஒரு வேளை பிள்ளை வீட்டுக்காரர்கள் ஜாதகத்தில் சந்தேகப் பட்டால், நடுவிலிருக்கும் (டிஸ்கௌண்டர்) தரகர்கள் அந்த சந்தேகத்தை நிவர்த்திப்பதாக, மெய்யைப் பொய்யாகவும், பொய்யை மெய்யாகவும் நிரூபித்து வேலிக்கு

ஓணான் சாட்சி என்பதுபோல் செய்து விடுகிறார்கள். அப்படி செய்யப்பட்ட கலியாணம் பிள்ளைகளுக்கு சௌகரியமா அசௌகரியமா என்பதைக்கூட கவனிப்பதில்லை.

மீனாக்ஷி:—அப்படிச் செய்வதால் என்ன அசௌகரியம் சொல், பார்ப்போம்.

நா.:—எனக்குத் தெரிந்த மட்டில் சொல்லுகிறேன். சமவயதுடைய பெண்களைக் கலியாணம் செய்தால், ஏற்கனவே ருதுவாயிருக்கும் பெண் ஆனதால் இரண்டொரு மாதத்தில் சாந்தி செய்யப் பெண் வீட்டார் அவசரப் படுத்துகிறார்கள். அந்த அவசரத்திற்காக அந்த சமயமும் வீண் போகாமல் ஐந்நூறு அல்லது ஆயிரம் அவர்களை நிர்ப்பந்தித்து வாங்கி விடுகிறார்கள். அப்படி வாங்கியும், இன்னும் சீர் வகையறாக்கள், நகைகள் போதாதென்று பெண்ணைத் துன்பப் படுத்துகிறவர்கள் தற்காலமும் சிலர் இருக்கின்றனர். கலியாணம் செய்த மறு வருஷத்திற்குள் குழந்தைகளும் பிறந்து விடுகின்றன. அப்பொழுது அவனுக்கு வயது இருபதுக்குமேலிருக்காது. அப்பொழுது அவன் மெட்ரிகுலேஷன் படித்துக் கொண்டிருப்பான், அல்லது அதுவுமில்லாமல் வேலைக்கு அலைந்துக் கொண்டிருப்பான். பணக்காரர்களாயிருந்தால் F. A. கிளாஸில் வாசிப்பான். அவன் தான் ஒருவனுக்கு சம்பாதிக்க வயது போதாதவனுக்கு, ஒரு குடும்பத்தை அவன் தலையில் கட்டிவிட்டால் அவனுக்கு எப்படி சௌக்கிய முண்டாகும்? நீங்களே யோஜித்துப் பாருங்கள்.

மீனாக்ஷி:—நீ சொல்வது வாஸ்தவந்தான். என்னுடன் கூடப்பிறந்த தம்பிக்கு இப்பொழுது வயது இருபத்தேழு ஆகிறது. அவன் பெண்சாதிக்கு இரண்டொரு வயது குறைவாயிருக்கும், இப்பொழுது அவளுக்கு ஆறு குழந்தைகளிருக்கின்றன. மறுபடி ஐந்து மாதம் கெர்ப்பமாயிருக்கிறாள். கையிலிருக்கும் குழந்தைக்குப் பத்து மாதம் ஆகிறது. அவன் மிகுந்த கஷ்டப்படுகிறான். குழந்தைகளை அவனும் அடிக்கடி பார்த்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. என்னுடைய தகப்பனார் தன் பிள்ளை படும் கஷ்டத்தைப் பார்த்து, 'என்ன குழந்தைகள்வேண்டியிருக்கிறது. என் பிள்ளை மிகுந்த கஷ்டப்படுகிறான். இந்தக் குழந்தைகள் பிறந்து என்ன துன்பப்படுத்துகின்றது! என்று வருத்தப்படுகிறார்.

நா.:—உங்கள் தகப்பனாருக்கு தன் பிள்ளையிடத்தில் அவ்வளவு அன்பிருக்கும்பொழுது, உங்கள் தம்பிக்கு தன் குழந்தைகளிடத்தில் அன்பு இருக்காதா? தான் அந்தக் குழந்தைகளால் எவ்வளவு கஷ்டப்பட்ட போதிலும், அது கஷ்டமாய்த் தோன்றுமா? உங்கள் தகப்பனார் அந்தக் குழந்தைகளை தூஷிப்பதைக் கேட்டால் மனது சமாதானமாயிருக்குமா? அப்படிக் குழந்தைகள் பிறந்தது யாருடைய குற்றம்? முதலில் பகவான் செயல் என்று சொல்லலாம். இரண்டாவது நீங்கள் அபிப்பிராயத்தில் உங்கள் தம்பிக்கு கிட்டத்தட்ட சரிவயதுடைய பெண்ணைக் கலியாணம் செய்ததினால் அது உங்களுடைய குற்றந்தான். நீங்கள் அப்படிச் செய்யாமலிருந்தால் இவ்வளவு கஷ்டத்திற்கு ஆளாகவேண்டியதில்லை அல்லவா? இப்படி இருக்கப் பெண் குழந்தைகளை ஏன் வெறுக்க வேண்டும்? பிள்ளைகளுக்கு முன்னால் ஆயிரம் இரண்டாயிரம் செலவழித்துப் படிக்கவைத்து விட்டுப்பின்னால் அதைப் பெண்வீட்டாரிடம் வசூலித்து விடுகின்றனர். நம்முடைய கண்கள் இரண்டையும் நாம் எப்படி ஒரே மாதிரி

யாக நினைக்கிறோமோ அதே மாதிரி பெண், பிள்ளை இருவரிடத்தும் இருக்கவேண்டும். எனக்கு அப்படித் தான் தோன்றுகிறது.

மீனு:—நீ இப்பொழுது சொன்னதெல்லாம் சரி என்று தான் தோன்றுகிறது. வேறு ஒருவர் ஏதாவது சொன்னால் அப்பொழுது அது தான் சரி என்று தோன்றும். அதிருக்கட்டும், பிள்ளைகளுக்கு சிறு வயதில் கலியாணம் செய்யக் கூடாதென்று சொன்னையே, அப்படியானுல் எவ்வளவு வயதில் கலியாணம் செய்யவேண்டும்? பெண் எத்தனை வயதுடையவளாயிருக்கவேண்டும்? சின்னப் பெண்ணுயிருந்தால் என் பிள்ளைகளுக்கு சிறு வயதில் கலியாணம் செய்யக் கூடாது?

நா:—பிள்ளைகளுக்குச் குறைந்தது இருபத்திரண்டு வயதில் கலியாணம் செய்தால் தான் சௌகரியம். பெண்களுக்குப் பதின்மூன்று அல்லது பதினன்கு வயதிருக்கலாம். சிறு வயது பெண்களுக்கு இந்நாளில் கலியாணம் செய்யமாட்டார்கள். ஏனென்றுல் வரதட்சணைக்குப் பயந்து தான். அப்படிச் செய்த போதிலும் பாலிய விவாகத்தால் மிகுந்த கெடுதி நேரிடுகிறது. அப்படிச் செய்வது ரொம்ப கஷ்டத்தைக் கொடுக்கும்.

மீனு:—அதையும் விபரமாய்ச் சொல்லேன் கேட்போம்.

நா:—மணி ஒன்று ஆய்விட்டது, குழந்தையும் தூங்கி விட்டது, ஆகையால் நான் டிபன் செய்யப் போகவேண்டும். இன்னெரு நாள் இதைப்பற்றி சாவகாசமாய்த் தெரிவிக்கின்றேன் என்று சொன்னேன். அவளும் வீட்டிற்குப்போய் விட்டாள். பெண்களென்றுல் எல்லோருக்கும் அவ்வளவு தாழ்மையாக இருக்கிறது. கல்விக்கு அதிபதி சரஸ்வதி என்னும் பெண். செல்வத்திற்கு அதிபதி லக்ஷ்மி, கடவுளால் சிருஷ்டிக்கப்பட்ட இப்பூபாரத்தையே தாங்குபவளும் பூமிதேவியாகிய பெண். அப்படியிருக்கப் பெண்களை வெறுக்கும் காரணம் தெரியவில்லை. அப்படி வெறுக்காதிருக்கும் காலம் எப்பொழுது வருமோ!

சாரதையின் தந்திரம்

முதலிய கதைகள்.

இன்பத் தமிழ் நடையில், நகைச்சுவை ததும்ப எழுதப்பட்ட பின்வரும் எட்டு சிறு கதைகள் அடங்கியுள்ளன:—(1) சாரதையின் தந்திரம், (2) ஒன்பது குழி நிலம், (3) சுபத்திரையின் சகோதரன், (4) காங்கிரஸ் ஸ்பெஷலில் கோரசம்பவம், (5) தற்கொலை, (6) விஷ மந்திரம், (7) நம்பர் 888, (8) கவர்னர் விஜயம். ஒவ்வொரு கதையும் ஒவ்வோர் உயரிய நோக்கங் கொண்டது. இக்கதைகளின் அழகையும், பொருளையும் பெரிதும் வியந்து காந்தி ஆசிரமத் தலைவர் ஸ்ரீ சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார் இதற்கு ஒரு முன்னுரை அருளியிருக்கிறார்.

சில அபிப்பிராயங்கள்.

ஸ்ரீ இராஜகோபாலாசாரியார் (முன்னுரையில்):—பொருள் புகட்டி, பயன் தருமாறு, அழகுடன் கலந்து ஆக்கிய கற்பனைகள். "சுதேசமித்திரன்":—ஆதிமுதல் அந்தம் வரை படிப்போர் மனதை ஈர்த்துச் செல்லும் முறையில் வெகு ருசிகரமாக வரையப்பட்டிருக்கிறது. "லோகோபகாரி":—நல்ல கற்பனு சக்தி வாய்ந்து சௌந்தரிய உணர்ச்சி நிரம்பியுள்ளன. 'காங்கிரஸ் ஸ்பெஷலில் கோர சம்பவம்', 'கவர்னர் விஜயம்' என்னும் நகைச்சுவை செறிந்து ததும்பும் கதைகள் தமிழ்வாசகருக்குப் புது விருந்தாகும். "தமிழன்":—கதையின் போக்கு, தமிழின் சுவை, கொள்கைகளின் சிறப்பு ஆகிய மூன்றினையும் ஒருங்கே பெற்றுள்ள கதைகள். "சுதேதயம்":—சமீப காலத்தில் வெளியான உயர்ந்த நவீனங்களில் முதன்மை ஸ்தானம் பெற்றிருக்கிறது. The "Hindu":—They remind one of the excellent didactic tales of Tolstoy. விலை அணு 12.

சத்திய சோதனை

அல்லது மகாத்மா காந்தியின் சுயசரிதம்.

வாழ்க்கைக்கு உறு துணையான அரிய பெரிய நூல். 460 பக்கம் கொண்டது. அழகான தமிழ் மொழி பெயர்ப்பு. உயர்ந்த, திருத்தமான பதிப்பு. விலை ரூ. 2—8—0.

இன்னும் சில அரிய நூல்கள்.

காலஞ் சென்ற வ. வே. சு. ஐயர் எழுதிய மங்கையர்க்கரசியின் காதல் முதலிய கதைகள் ...	0	12	0
டாக்டர் திரு. வி. சாமிநாத சாஸ்திரியார் எழுதிய உதவி மறுத்தல் கதைகள்	0	12	0
பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸரின் 1003 உபதேச மொழிகள்	1	6	0
ஸ்ரீ பி. எஸ். சுப்பிரமண்யம், எம். ஏ., எழுதிய ஷண்முக சுந்தரம் (படங்களுடன்) ...	2	0	0
விக்கிரம சிங்கன் கோட்டை மர்மம் (படங்களுடன்)	1	0	0
அம்பலவாணன் அல்லது நாவாய்க்கைதி (இரண்டு பாகங்களும்)	3	0	0

சரஸ்வதி பிரசுராலயம், மயிலாப்பூர், சென்னை.

கைகண்ட ஔஷதங்கள்! கவனியுங்கள்! குணமான ஔஷதங்கள்!

ரத்தினம் இங்கிலீஷ் மருந்துகள்.

இருபது வருஷத்திற்குமேல் பெயர்பெற்ற டாக்டரால் உபயோகிக்கப்பட்டு, எல்லோராலும் புகழப்பட்ட மருந்துகள்.

(1) குளிர் சுரம் அல்லது முறைக்காய்ச்சலுக்கு பிரசித்தியான நீலமருந்து.

(2) குழந்தைகளின் அள்ளு மாந்தம், மார்ச்சளி அல்லது நெஞ்சுக் கொளகொளப்புக்கு மருந்து.

(3) குழந்தைகளுக்குப் பல் முளைக்கும்பொழுது ஏற்படும் வயிற்றுக் கழிச்சல் முதலிய வியாதிகளுக்கு மருந்து.

இவைகள் தவருமல் குணம் தருவதை திடமாய் நம்பலாம். அனுபவத்தில் உண்மை விளங்கும்.

புட்டி ஒன்றுக்கு ரூபாய் ஒன்று. தபாற் செலவு பிரத்தியேகம்.

எம். ரத்தினம் அண்டு கம்பெனி, ஔஷதாலயம்,

156, பிராட்வே, மதராஸ்.

ஸ்ரீமான் க. சா. அ. ராம. சண்முகம் செட்டியார் அவர்கள் குரோதன ஐப்பிசி 3-ம் தேதியில் மூவாரிலிருந்து எழுதுவது.

அன்பு மிக்க சகோதரியே!

இப்பவும் தங்களால் நடத்தப்பெறும் "சிந்தாமணி"யை நம் அன்பர்கள் மூலம் ஆரம்பம் முதல் கண்ணுற்று வந்திருக்கிறேன். ஆயினும் தங்கள் பத்திரிகையை ஆதரிக்கவேண்டுமென்ற அவாமிகுதியால் நான் ஒரு சந்தாதாராகச் சேரவெண்ணி இன்று சந்தாவை யனுப்பியிருக்கிறேன். முறையே பத்திரிகையை யனுப்பிவைக்கக் கோருகிறேன்.

ஸ்ரீமான் P. சின்னத்தம்பி அவர்கள் 9—1—26ல் செந்துலில் இருந்து எழுதுவது.

இப்பூதலத்தின் கண்ணுள்ள பல நாடுகளுக்கோர் திலகம்போல் விளங்கும் நந்தமிழ் நாட்டின் கண்ணுள்ள ஜனசமூகத்திற்கு பதிலுபகாரங் கருதாது தம் கடமையை அன்புடன் புரிந்துவரும் சகோதரி ஸ்ரீமதி பாலம்மாள் அவர்கட்கு எனது அன்பார்ந்த வந்தனம்.

நமது தாய்நாட்டின் க்ஷேமத்திற்கும் முன்னேற்றத்திற்கும் அதிலுதித்துள்ள பெண்மணிகளின் முன்னேற்றத்திற்கும் ஆக அதிகப் பிரயாசையுடன் தங்களால் வெளியிடப்படும் "சிந்தாமணி" என்னும் சிறந்த உயர்தர மாதாந்தப் பத்திரிகையின் சில இதழ்களை யான் வாசித்தேன். இப்பத்திரிகை தமிழ்நாட்டுப் பெண்பாடசாலைகளுக்கும் வீட்டிலுள்ள ஒவ்வொரு பெண்மணிகளுக்கும் ஓர் இன்றியமையாத வஸ்துவாயும் ஆடவர்கள் தங்கள் தேச நிலையை கவனித்து அதன் முன்னேற்றத்திற்குழைக்க ஒரு முக்கிய கருவியாகவும் உதவுமென்பதை அறிவாளிகள் அனைவரும் உணர்வார்களென்பதற்குச் சிறிதும் ஐயமில்லை. தங்களால் எய்தப்பெறும் பேருபகாரத்திற்கும் இந்தியப் பெண்மணிகளை மகிழ்விக்கும் சிந்தாமணியின் நெடுங்கால வாழ்விற்கும் கடவுள் அருள் புரிவாராக.

ஸ்ரீமதி கிருஷ்ணம்மா 20—1—1926 தென் காசியிலிருந்து எழுதுகிறார்.

சகோதரி வி. பாலம்மாளுக்கு,

தாங்கள் எழுதிவரும் 'சிந்தாமணி' படிக்கப்படிக்க வெகு ஆனந்தத்தையும், உற்சாகத்தையும் தந்து மனதிற்கு சதாகாலமும் சந்தோஷத்தைக் கொடுக்கிறதென்பதில் ஆக்ஷேபமுண்டோ! இன்னும் அதில் ஸாக்ஷாத் ரகுவீரனுடைய மகிமையை "ஸுபோதராம சரிதம்" என்னும் ராமாயண கதாரூபமாக ஸம்ஸ்க்ருத ஸ்லோகமும் தமிழ் உரையுமாகத் தாங்களியற்றி 'சிந்தாமணியில்' வெளியிடுவதானது சிந்தாமணி அபிமானிகளும், மற்றுள்ளவர்களும் புகழத்தக்கதென்பதற்கு என் ஐயன் ராமசந்திரமூர்த்தியே சாக்ஷி. மேலும் சிந்தாமணியை உலகமெங்கும் பரவச்செய்து ஸ்வயம்பிரகாசமாய் விளங்கச்செய்கிறீனென்பதில் எனக்கு எல்லையிலா ஆனந்தமுண்டாகிறது.

(ஒரு சகோதரர் எழுதுவது.)

அம்மா,

தமிழகந்தோறும் அவசியம் அலர்ந்திருக்கவேண்டிய தங்கள் "சிந்தாமணி" நாளுக்கு நாள் நல்வளர்ச்சியுறுவது கண்டு மகிழ்கிறேன். அதில் தாங்கள் எழுதிவருகிற கதைகளிலே பெண்கள் விசேஷப் பிரியங்கொள்ளுகிறார்கள்.

(ஸ்ரீமதி ஆர். சி. நாயுடு, தென்னாப்பிரிகா, எழுதுவது.)

ஸ்ரீமதி சகோதரிக்கு வந்தனம்.

'சிந்தாமணி' யென்னும் சிறந்த தமிழ் மாதப் பத்திரிகையை யான் வாசித்துக் களிப்புறுகிறேன். என் போன்ற வெளிநாட்டிற் பிறந்த பெண்மக்களுக்கு நமது தாய் பாஷையை வாசிக்கவும், உபாயமாகக் கற்றவர்கள் அதை விருத்தி செய்து கொள்ளத்தக்க சௌகரியமும் கிடையாது. ஆதலால் பெரும் பான்மையாய் நம்பாஷையைக் கைவிட்டு இதர பாஷையைக் கைக்கொள்ளுகிறார்கள். தாங்கள் மெத்த பிரயாசை யெடுத்து வெளியிடும் "சிந்தாமணி" தமிழ் நாட்டிற்கு அளவு கடந்த நன்மையைச் செய்வதன்றி வெளி நாட்டிலுள்ள எங்களுக்கும் மிகப் பிரயோஜன முள்ளதாகவுமிருக்கிறது.

ஸ்ரீமதி சோர்னலக்ஷ்மி 4—8—26-ல் F. M. S லிருந்து எழுதுவது :—

சகோதரிக்கு வந்தனம். க்ஷேமம்.

தாங்கள் பிரயாசை எடுத்து இயற்றிவரும் 'சிந்தாமணி'யை வாசிக்க வாசிக்க அளவு கடந்த ஆனந்தத்தையும் உற்சாகத்தையும் கொடுத்து வருகின்றது. தமிழ் நாட்டிற்கு இத்தகைய பேருதவியைச் செய்துவரும் ஓர் பெண்மணியை நாங்கள் சகோதரியாக அடையப் பெற்றது நாங்கள் செய்த புண்ணியமே. தமிழ் நாட்டிலுள்ள பெண்களுக்கு மாத்திரமே யல்லாது வெளி நாடுகளிலுள்ள என்போன்ற பெண்மக்களுக்கும் பெரிதும் நன்மையைச்செய்து வருவது தங்களின் ஊக்கங்குன்றா முயற்சியினாலேயே ஆகும். எல்லாம் வல்ல ஈசன் தங்களின் முயற்சிக்கு யாதொரு விக்கினமுமின்றி செவ்வனே நடைபெற அருள்புரிவாராக.

சிந்தாமணி பைண்டு வால்யம்கள்.

1925 பிப்ரவரியிலிருந்து 1925 ஜூலைவரை ஆறு இதழ்கொண்ட பைண்டு புத்தகம் ரூ. 3-0-0

1925 ஆகஸ்டிலிருந்து 26 ஜூலைவரை பன்னிரண்டு இதழ்கொண்ட பைண்டு புத்தகம் ரூ. 5-8-0

1926 ஆகஸ்டிலிருந்து 27 ஜனவரிவரை ஆறு இதழ்கொண்ட பைண்டு புத்தகம் ரூ. 3-0-0

1927 பிப்ரவரியிலிருந்து 27 ஜூலைவரை ஆறு இதழ்கொண்ட பைண்டு புத்தகம் ரூ. 3-0-0

1925 ஆகஸ்டு முதல் சந்தாதாராகவுள்ளவர்களுக்கும் 26 பிப்ரவரியிலிருந்து சந்தாதார் ஆனவர்களுக்கும் மட்டும் மேற்கண்ட ஒவ்வொரு பைண்ட் புத்தகமும் தபாற் செலவின்றி 3-ரூபாய்க்கு அனுப்பப்படும்.

பைண்ட் வால்யம்களுக்கு ஆர்டர் செய்வோர் முன் பணமனுப்பினாலன்றி புத்தகம் அனுப்பப் படமாட்டாது.

சொற்பப்பிரதிகளே இருக்கின்றன. வேண்டுவோர் விரைவாக ஆர்டர் செய்யும்.

மானேஜர், சிந்தாமணி ஆபீஸ்,
மயிலாபூர், சென்னை.

சகோதரி வி. பாலம்மாள் எழுதிய தமிழ் நாவல்கள்.

உண்மைக்காதல் அல்லது ஒற்றுமையின் வெற்றி.

Crown 8vo. 64 பக்கங்கள். விலை 0-5-0.

ஆசார சீர்திருத்தத்தின் அவசியத்தையும் பணத்திமிற் கொண்டவர்களின் துஷ்டச் செய்கைகளையும் கற்புடை மகளிரின் உயர்குணத்தையும் எடுத்துரைப்பது.

சுபோதராம சரிதம்.

Royal 16mo. 56 பக்கங்கள். விலை 0-6-0.

வடமொழி கற்க விரும்புவோர்களுக்கென சிந்தாமணியில் அர்த்தத்துடன் வெளிவந்து கொண்டிருக்கும் ராமாயண சுலோகங்களின் தனிப் புத்தகம். ஆறு காண்டங்களுமடங்கியது.

திலகவதி.

Crown 8vo. 320 பக்கங்கள். விலை 1-4-0.

கதாநாயகியான திலகவதி தனக்கேற்பட்ட பல கஷ்டங்களையும் சகித்து தீர்க்காலோசனையுடனும் கண்ணியத்துடனும் நடந்து கொள்ளல் படிக்கப் படிக்க உற்சாகத்தையளிக்கும். ஹிந்துக்குடும்ப சீர்திருத்தங்களைப்பற்றிய விவரங்களை இக்கதையில் நன்கறியலாம். பெண்களுக்குரிய கல்வி, தைரியம், பொறுமை, அடக்கம், சமயோசிதபுத்தி, தன் வகுப்பினரிடத்தன்பு, சாந்தம் இவைகளைத் தெளிவாயெடுத்துரைப்பது. பெண்கள் ஒவ்வொருவர் கையிலும் இருக்க வேண்டிய உயர்தரக் கதை. ஒரு முறை படிப்பதால் மட்டும் மனம் திருப்தி யடைந்து விடாமல் பன்முறை படிக்கவேண்டுமென்ற பேரவாவை விளைவிக்கும்.

தேவதத்தன் அல்லது தேச சேவை.

Royal 16mo. 64 பக்கங்கள் விலை 0-5-0.

தேசாபிமானத்தின் உயர்வையும் தொழிலாளர்களின் கஷ்ட நிலைமையையும் தேசாபிமானிகளின் கடமையையும், சுய நலப்பிரியர்களின் ஆர்ப்பாட்டச் செயல்களையும் பெண்மக்களின் உயர் குணத்தையும் நன்கு எடுத்துரைப்பது. முழுதும் படிக்கும் வரை புத்தகத்தைக் கீழே வைக்க மனம் வராது.

இதரப் பிரசுரங்கள்.

இந்தியக் கைத்தொழில் சிறப்பு.

Crown 8vo. 216 பக்கங்கள் விலை ரூ. 1.

முற்காலத்தில் இந்தியா படைத்திருந்த செல்வப்பெருக்கையும் இந்தியா செய்துவந்த தொழில் முறைகளையும் இந்தியா அயல் நாடுகளில் செய்து வந்த வியாபாரங்களின் சிறப்பையும் இந்திய நெசவுக்காரரின் வேலைத்திறமையும் இவைகள் அழிவுற்ற காரணங்களையும் விவரமாக எடுத்துரைக்கப்பட்டிருக்கிறது. இந்தியர்களுக்கு ஆடையை இந்தியா அளிக்கவல்லதா! என்ற சந்தேகத்தை நீக்கக்கூடியது. இந்தியா சுபிட்சமடையும் வழியை இப்புத்தகத்தைப்படிப்பதால் தெரிந்து கொள்ளலாம்.

ராஜ சேவையும் இந்தியரும்.

Demy 8vo. 210 பக்கங்கள் விலை 2-0-0.

உயர்தர உத்தியோகங்கள் எவ்வளவென்பதையும் அவைகளில் இந்தியர்களுக்குக் கிடைத்திருப்பது எவ்வளவென்பதையும் அதிகப்பங்கு பெற இந்தியர்களுக்கு உரிமையுண்டா வென்பதையும் விளக்கிக்காட்டுவது.

மேற் கண்ட ஆறு புத்தகளடங்கிய ஸெட் ஒன்றுக்கு ஆர்டர் செய்யும் சிந்தாமணி சந்தாதார்க்கு மட்டும் தபாற் கூலியின்றி 4-8-0 ரூபாய்களுக்கு வி. பி. யில் அனுப்பப்படும். சுபோத ராம சரிதம் சிந்தாமணி சந்தாதார்க்கு மட்டும் தபாற் கூலியின்றி ஆறு அணாவுக்கு வி.பி. யிலனுப்பப்படும்.

வேண்டுவோர்

சகோதரி வி. பாலம்மாள்,

சிந்தாமணி பத்திராதிபர்,

மயிலாப்பூர், சென்னை.

தமிழ் நாட்டுச் சிறுவர் சிறுமிகள் எளிதிற் படித்தறியும்படி அடியிற்கண்ட புத்தகங்கள் ஸ்ரீமதி P. மங்களாபாயி அவர்களால் மராட்டி பாஷையிலிருந்து தமிழில் மொழி பெயர்த்து வெளியிடப்பட்டிருக்கின்றன. மகா ராஷ்டிரத்தில் இவைகள் உலாவாத வீடுகளும் பாடசாலைகளும் கிடையா. இவைகளை நம் சிறுவர்கள் படித்தல் அவசியம்.

பால ராமாயணம் டபிள் கிரவுன் விலை அணா	0—6—0
பால பாரதம் ஷை 92-பக்கங்கள் அணா	0—8—0
பால பாகவதம் ஷை 87-பக்கங்கள் அணா	0—8—0

தபாற் கூலி வேறு.

வேண்டுவோர் மானேஜர், 'சிந்தாமணி' ஆபீஸ்,

மயிலாப்பூர், சென்னை, என்றெழுதவும்.

"சிந்தாமணி"

நான்காவது வருஷம்.

ஓர் உயர்தர மாதாந்தத் தமிழ் பத்திரிகை 1924 ஆகஸ்டிலிருந்து வெளிவருவது

பத்திராதிபர் : சகோதரி வி. பாலம்மாள்.

D. Crown 8vo. 64 பக்கங்கள். உயர்ந்த அபிப்பிராயங்கள். சிறந்த வியாசங்கள்.

வருஷ சந்தா (தபாற் கூலி உள்பட) உள்நாடு ரூ. 5 ; வெளிநாடு ரூ. 6.

தனிப்பிரதி அணா 8. மாதிரிப்பிரதி வேண்டுவோர் 8 அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

சிந்தாமணி இந்தியா, பர்மா, சிலோன், தென்னாபிரிக்கா, மலாய் நாடுகள் முதலிய தேசங்களிலிருக்கும் தமிழர்கள் வீடுகளில் உலாவுவதால் இதில் செய்யப்படும் விளம்பரங்கள் மிகவும் லாபகரமாகவே இருக்கும்.

விளம்பர விகிதங்கள்:—பிரதி மாதத்திற்கும் ஒரு பக்கம் ரூ.10; அரைப்பக்கம் ரூ. $6\frac{1}{2}$; கால் பக்கம் ரூ. 3. விளம்பரங்கள் தோன்றும் இதழ்கள் இனமாய் அனுப்பப்படும்.

முன் பணமின்றி விளம்பரங்கள் ஏற்றுக்கொள்ளப் படமாட்டா.

நீடித்தகால் விளம்பரங்களுக்குப் பிரத்தியேகமான விகிதங்கள். விவரத்திற்குப் பின்கண்ட விலாஸத்திற்கு எழுதவும்.

மானேஜர்,

சிந்தாமணி ஆபீஸ்,

ஸலிவன்ஸ் கார்டன் ரோட், மயிலாப்பூர், சென்னை.

பத்திராதிபர் அறிவிப்பு.

1. வியாச மெழுதுவோர் தயவு செய்து ஒரே பக்கத்தில் தெளிவாய் எழுதியனுப்புவதுடன் பெண்மக்களின் முன்னேற்ற விஷயமாகவே பெரும்பாலும் எழுத வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.
2. வியாச மெழுதுவோர்களின் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர்.
3. ஓரணா அனுப்பினால் பிரசுரிக்கப்படாத வியாசம் திருப்பியனுப்ப சௌகரியப்படும்.
4. வியாசங்கள், மதிப்புரைப் புத்தகங்கள் இவைகளை பத்திராதிபர், "சிந்தாமணி," "விவேகாச்ரமம்," ஸலிவன்ஸ் கார்டன் ரோட், மயிலாப்பூர், சென்னை, என்று எழுதவும்.
5. மாதிரிக் காபி வேண்டுவோர் எட்டணா ஸ்டாம்பு அனுப்பவும்.
6. நிருபம் எழுதுவோர் அவைகளில் வரக்கூடிய பாடல்களைப் பிழையின்றிக் கவனித்து எழுதுதல் முக்கியம்.
7. நிருபங்களில் விசேஷமாகப் பாடல்களைப் போட்டு நிறப்பிவிடாமல் விஷயத்தைத் தெளிவாயும் சுருக்கமாகவும், தொடர்ச்சியாய் வரக்கூடிய வியாசத்தை முழுவதும் ஒரே தடவையிலும் எழுதியனுப்பும்படி விஷயதானம் செய்வோர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.
8. எட்டணா முன்பண மனுப்பிச் சிந்தாமணி மாதிரிக் காப்பி பெற்றுக் கொண்டவர் சந்தாதாராகும் பக்ஷத்தில் மாதிரிக் காபி விலை எட்டணா வருஷ சந்தாவில் கணக்கிட்டுக் கொள்ளப்படும்.
9. சந்தாவனுப்புங்கால் சந்தா நம்பர், முழு விலாசம் இவைகளுடன் இன்னருக்காக இன்னார் அனுப்பிய தென்பதையும் தெளிவாய்க் குறிப்பிடல் அவசியம்.
10. சிந்தாமணியின் நிர்வாக விஷயங்கள், விளம்பர சம்பந்தமான கடிதங்கள் முதலியவைகளுக்குக் கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

மானேஜர்,

சிந்தாமணி ஆபீஸ்,

ஸலிவன்ஸ் கார்டன் ரோட், மயிலாப்பூர், சென்னை.

கேஸரியின்

லோத்ரா.

ஸ்திரீகளுக்குள்ள சகல கஷ்டங்களையும் நிவர்த்திக்கும்.

பயனடைந்த பெண்மணிகளின் அபிப்பிராயம்

ஸ்ரீமதி மிஸர்ஸ் காத்தர் எழுதுகிறார்: "நான் பத்து வருஷ காலமாய் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்த ருது சூலை, வயிற்று வலி, கேசரியின் 'லோத்ரா'வை உபயோகித்த பிறகு அத்தியாச் சரியமாய் நிவர்த்தியாயிற்று."

ஸ்ரீமதி கோபால பணிக்கர் எழுதுவதாவது:—'லோத்ரா' உபயோகித்ததால் நானும் என் சகோதரியும் ருது சூலைக் கஷ்டத்தினின்று நிவர்த்திக்கப்பட்டோம்.

இது எங்கும் கிடைக்கும்.

கேஸரி குடீரம்,

ஆயுர்வேத அவுஷத சாலை, எழும்பூர், மதராஸ்.



உமது வாழ்வில்

பெருத்த லாபம்.

எலெக்ட்ரோ கோல்ட் பிளேட் தங்க ஒட்டியாணம், 180-சஜ்ஜை கட்டியது விலை 1-க்கு ...	ரூ.	5	8	0
ஷை சாதா ஒட்டியாணம் 1-க்கு ...	ரூ.	4	0	0
7 கல்லிழைத்த இமிடேஷன் வஜ்ஜிரக்கம்மல் ஜதை 1-க்கு ...	ரூ.	1	4	0
இமிடேஷன் டயமண்ட் செதுக்கிய அம்ச பில்லை 1-க்கு ...	ரூ.	2	8	0
இமிடேஷன் டயமண்ட் செதுக்கிய ஒத்த வரிசை அட்டிகை 1-க்கு ...	ரூ.	7	0	0
இமிடேஷன் சம்பசரம் அல்லது மாட்டல் ஜதை 1-க்கு ...	ரூ.	2	8	0
எலெக்ட்ரோ கோல்ட் பிளேட் $\frac{1}{4}$-காசுமாலை 1-க்கு ...	ரூ.	4	8	0
எலெக்ட்ரோ பிலேட் பலமாதிரி வளையல்கள் ஜதை 1-க்கு ...	ரூ.	0	10	0
இமிடேஷன் டயமண்ட் பேசரி 1-க்கு ...	ரூ.	0	6	0
இமிடேஷன் லாபுலாக்கு 1-க்கு ...	ரூ.	0	8	0
ஒரு கல் கடுக்கன் ...	ரூ.	1	4	0

கே. என். ராதாகிருஷ்ண அண்டு பிரதர்ஸ்,
109, சைனாபஜார் ரோட், மதராஸ்.

ஸ்ரீராம கிருஷ்ண விஜயம்.

சனாதன தர்மப் பிரசாரம் செய்யும் சிறந்த தமிழ் மாதப் பத்திரிகை.

வருஷ சந்தா :— உள்நாடு ரூ. 3 வெளிநாடு ரூ. 4.

விலாசம்:—மானேஜர், ஸ்ரீராம கிருஷ்ண விஜயம், ஸ்ரீராம கிருஷ்ண மடம், மயிலாப்பூர், சென்னை.

குழந்தைகளின்

மித்திரன்.

பாலமித்ர மாத்திரை.

இதைக் குழந்தைகளுக்குக் கொடுத்து வந்தால், வியாதிகளை வேருடன் களைந்து தேக புஷ்டியையும், பலத்தையும், தேக காந்தியையும் கொடுத்து எப்போதும் தேஜசுடனும், புன் சிரிப்புடனும் இருக்கும்படியாகச் செய்கிறதோடு மனோவியாகுலத்தையும், அழுத முகத்தையும் அகற்றுகிறது.

300-மாத்திரைகளடங்கிய டப்பி 1க்கு ரூ. 1—0—0

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்
26 பிராட்வே, மதராஸ்.

வெளியாகி விட்டது!

வெளியாகி விட்டது!!

"வியாசக்கோவை"

இஃதோர் சிறந்த தேசிய நூல். இதில் தேசமுன்னேற்றத்திற்காகவும், முஸ்லிம்களின் முன்னேற்றத்திற்காகவுமான பல அரிய விஷயங்கள் காணப்படும். ஸ்ரீவைகுண்டம் வ. மி. ஷம்சுதீன் சாகிப் இதின் ஆசிரியர். டாக்டர் பி. வரதவராஜுலு அவர்களின் முன்னுரையுடன் கூடியது. இந்நூல் ஒவ்வொரு இந்தியன் கையிலும் இருக்க வேண்டியது. விலை ரூ. 1—0—0.

ஏற்கனவே பெயரைப் பதிவுசெய்து கொண்டவர்களுக்கு விலை அணா 0—12—0.

மனேஜர், "சிந்தாமணி"
ஸலிவன்ஸ் கார்டன் ரோட்,
மயிலாப்பூர், சென்னை.

சுதேச பரிபாலினி.

ரங்கூனிலிருந்து வெளியாகும் தமிழ் தினசரி பத்திரிகை.

பத்திராதிபர் : P. E, முதலியார்.

பர்மாவில் நடைபெறும் அரசியல் முதலிய சகல விஷயங்களையும் வெளியிட்டு வரும் தினசரி இது ஒன்றே. விளம்பரம் செய்வோருக்குப் பயனளிக்கக்கூடியது இதுவே.

வருஷசந்தா: உள்ளூர்: ரூ. 22 வெளியூர்: ரூ.26

விலாசம் : மானேஜர், சுதேச பரிபாலினி,
31-32 பார் ஸ்டிரீட், ரங்கூன்.

"தமிழ் நேசன்."

பத்திராதிபர் கெ. நரசிம்மய்யங்கார்.

இப்பெயருள்ள தமிழ் வாரப் பத்திரிகை கோலாலம்பூரினின்றும் பிரதி புதன்கிழமைதோறும் வெளிவருவதாகும். மலேயா நாட்டிலுள்ள தொழிலாளர்களின் முன்னேற்றங் கருதி முதலாளிகளுக்கும் தொழிலாளர்களுக்கும் பரஸ்பரம் அபிமானத்தையும் ஒற்றுமையையும் விருத்தி செய்யக்கூடிய வழியில் நடைபெறும். இப்பத்திரிகை தமிழரால் ஆதரிக்கக் கூடியதாகும். வருஷ சந்தா இந்தியா, பர்மா, இலங்கை முதலிய நாடுகளுக்கு ரூ. 7—0—0. வேண்டுவோர், மானேஜர், 'தமிழ்நேசன்,' 212, பத்துரோட், கோலாலம்பூர் (F.M.S.) என்று எழுதவும்.

தமிழ்ப் பிரசுரங்கள்.

1. நந்தன் சரித்திரம்.—ஆசிரியர் T. G. ஆராவமுத அய்யங்கார் அவர்கள், M.A. விலை அணா 10.

   Approved as a Library Book.

2. போஜ சரித்திரம்.—ஆசிரியர் K. S. ராமஸ்வாமி சாஸ்திரி அவர்கள், B.A., B.L. ஸப்ஜட்ஜ், தஞ்சாவூர், விலை அணா 10.

   Approved as a Text-book suitable for School use, vide *Fort St. George Gazette*, Part I-B, dated 19-5-1925.

3. ராஜ ராஜ சோழன் I.—ஆசிரியர் P. V. ஜகதீச ஐயர் அவர்கள், R. ரங்காசாரியார் அவர்களுடைய முன்னுரையுடன் கூடியது. விலை அணா 8.

   Approved as a Text-Book suitable for School use.

4. இட்டார்க்கு இட்ட பலன்.—ஆசிரியர் மிஸ். J. பொன்னுசாமி ராவ். விலை அணா 10.

   Approved as a suitable Text-Book, vide *Fort St. George Gazette*, **dated 24-7-23.**

5. திலகவதி.—சகோதரி V. பாலம்மாள் (சிந்தாமணி பத்திராதிபர்) எழுதியது. ராவ் ஸாஹெப் S. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் எழுதிய முன்னுரையுடன் கூடியது. விலை ரூ. 1—4—0.

   Approved as a Library Book.

6. தமிழ் வசன லக்ஷணம்.—G. தாமோதர முதலியார், B.A., எழுதியது. விலை அணா 12.

   Approved as a Text-Book for Schools and Colleges, vide *Fort St. George Gazette*, **21st October 1913.**

7. இரகுவம்சம் முதல் பாகம்.—(1—6 சருக்கங்கள்) பண்டித நடேச சாஸ்திரியார் அவர்கள் எழுதியது. விலை அணா 12.

8. இரகுவம்சம் இரண்டாம் பாகம்.—(7—12 சருக்கங்கள்) பண்டித நடேச சாஸ்திரியாவர் அவர்கள் எழுதியது. விலை அணா 12,

   Parts I and II are approved as suitable class-books, vide *Fort St. George Gazette*, **Part I-B, page 478, dated 3-6-24.**

9. சுகாதாரபோதினி.—(மூன்றுவது பாரத்திற்கு) K. வரதராஜ ராவ் இயற்றியது விலை அணா 8.

   Approved as a Text-book suitable for School use, vide *Fort St. George Gazette*, Part I-B dated 19-5-1925.

10. மனு சரித்திரம்.—சென்னை க்ரிஸ்டியன் காலேஜ் தமிழ் போதகாசிரியராயிருந்த ஆர். இரங்காசாரியார், M.A., L.T. அவர்கள் இயற்றியது. விலை அணா 10.

11. காளிதாசன்.—ஆசிரியர் K. S. ராமஸ்வாமி சாஸ்திரி அவர்கள், B.A., B.L. ஸப்ஜட்ஜ், தஞ்சாவூர். விலை அணா 12.

    Approved as a Text-book suitable for School use, vide *Fort St. George Gazette*, **Part I-B** dated 19-4-1927.

ஸ்ரீமான் V. M. M. ஆச்சாரி அவர்கள் 16—3—'26ல் டர்பனிலிருந்து எழுதுவது.

அன்புள்ள சகோதரிக்கு வந்தனம். க்ஷேமம்.

இதில் வைத்திருக்கும் போஸ்டல் ஆர்டரைப் பெற்றுக்கொண்டு நமது நாட்டில் திலகமாக விளங்கும் அருமை பெருமை பொருந்திய "சிந்தாமணி" என்னும் பத்திரிகையை கீழ்க்காணும் விலாசத்திற் கனுப்பி வரவும். தாங்கள் மோரிட்ஸ்பர்க் வாலிபர்களுக்கு விடுத்த செய்தியைப் பத்திரிகையில் பார்த்து மிகவும் ஆனந்தமடைந்தேன். தாங்கள் நமது பாத கண்டத்தில் நம் பெண்மணிகளின் முன்னேற்றங்கருதி சிரமம் பாராமலும் சுயநலத்தைக் கருதாமலும் தொண்டு புரிந்து வருவதைப் பார்க்க அதிசந்தோஷமடைவதுடன் தங்களுக்கு எல்லாம் வல்ல இறைவன் தீர்க்காயுளும் திடகாத்திரமும் அளித்துத் தாங்கள் எடுத்துள்ள கைங்கரியத்தை சித்திபெறச் செய்து தங்கள் நாமம் இவ்வுலகில் நீடித்திருக்கச் செய்யப் பிரார்த்திக்கிறேன்.

ஸ்ரீமான் மு. சி. சிற்றம்பலவன் அவர்கள் இலங்கையிலிருந்து 7—10—1926ல் எழுதுவது.

எம் சகோதரி ஸ்ரீமதி வி. பாலம்மாள் அவர்கள் திவ்விய சமூகத்திற்கு,

தங்களாலுயிருறும் "சிந்தாமணியின்" எழுச்சியால் தமிழ் மகளினுட் கிடந்த பேதமை அகல வாரம்பிக்கின்றது. அம்மா! நந்தமிழ் நாட்டுப் பெண்மணிகளின் தாழ்ந்த நிலைமையை நோக்கிப் பரிதவித்து அவர்கள் முற்காலத்து வாழ்ந்த பெண்மணிகளின் சீவியவியல்வை யொட்டுமாறு வற்புறுத்தி அந்நிலைமைக்கு இவர்களை யுயர்த்து மாற்றலைக் கொண்டுயும் "சிந்தாமணியின்" செம்மையை வரை இக்கடிதமுமிடந்தரா. எனினும் எம் சகோதரிகளடைந்த சீர்திருத்தத்தையும் அவர்கள் தங்களினிடை கொண்டிருந்த மருலை ஒழித்ததும் இதனால் நானடைந்த உற்சாகத்தையும் இஃதுபோன்று நாங்களடைந்த முன்னேற்றமே இச்சிந்தாமணியின் ஆற்றலை வெளிப்படுத்தும்.

அம்மா! தங்களிடமிருந்து புறப்படும் சிந்தாமணியின் வாசனையை நுகர்ந்த பெண்மணிகளிற் சிலரை நான் கண்டபொழுது அவர்கள் சிந்தாமணியின் கட்டுரைகளைத் தங்களுள்ளத்திற் பதித்தமையினால் அதைக் கடைப்பிடித்து தாங்கள் நடப்பதாலும் தாங்கள் முன்னிருந்த நிலைமையினின்றும் இப்பொழுது மறுபிறப்படைந்திருக்கின்றோம் எனக் கூறினார்கள். இதுமட்டோ!!! இச்சிந்தாமணியைக் கண்ணுறும் பெண்கள் ஒவ்வொருவரும் தங்களை யுணர்ந்ததுமல்லாமல் தாங்கள் இதுகாறும் நடந்துவந்த வழிகளை அறவே ஒழித்துவிட்டனர்.

அம்மா! தங்களால் வெளிப்படும் சிந்தாமணிக்கும் தங்களுக்கும் எம்பெருமான் நீண்ட ஆயுளைத் தந்து அருள் புரிவாராக.

ஸ்ரீமதி டி. நடராஜா அவர்கள் 13—6—26ல் பாஜாமிலிருந்து எழுதுவது.

தாங்கள் அனுப்பிய சிந்தாமணி இதழ்களைப் படித்து விஷயங்களின் ரசங்களை யுணர்ந்து மகிழ்ச்சியடைந்தேன். எங்கள் தமிழ் நாட்டின் கண்ணுள்ள சகோதரிகளின் முன்னேற்றத்தை விரும்பி தாங்கள் எடுக்கும் பிரயாசையும் இரக்கமும் எவரும் வியக்கத்தக்கதே. இவ்வரிய பத்திரிகை பெண்களுக்கு உற்ற துணையாயிருக்குமென்பதில் சந்தேகமில்லை. தங்கள் பத்திரிகை தழைத்தோங்கும்பொருட்டுத் தாங்கள் நீடூழி வாழச் சிவபிரான் கிருபை பாலிப்பாராக.

கணபதி துணை.

வேதாந்த தருக்க போதகாசிரியர் திருவாளர் சென்னை கோ. வடிவேலு செட்டியாரவர்கள் அபிப்பிராயம் 8—5—26.

ஸ்ரீமதி சகோதரி வி. பாலம்மாள் அவர்கள் சமூகத்திற்கு; தாங்கள் எனது பார்வைக்குத் தந்த தங்களது 'சிந்தாமணி' என்னும் பெயரிய மாதப்பத்திரிகை (மலர் 2 இதழ் 7) யை நான் முற்றுஞ் செவ்வையாகப் படித்துப் பார்த்தேன். பெண்மக்கள் அபிவிருத்தியாதற்குரிய விஷயங்கள் மிக அழகாகத் தெளிவான நடையிலெழுதப்பட்டு விளங்கும் தங்கள் பத்திரிகை ஒவ்வொரு வீட்டிலும் அத்தியாவசியமாயிருக்கவேண்டுமென்பதும், இப்பத்திரிகையைப் படிப்பவர் சாஸ்திரார்த்தம், மருத்துவ முறை, தேச சரித்திரம், இல்லற வொழுக்கம், கதைப்போக்கு முதலியவற்றுளின்றியமையாதான பலவற்றையும் மிகத் தெளிவாயறிந்துகொள்ளுதற்குரியவராவாரென்பது எனதபிப்பிராயமாம்.

நேரிசை வெண்பா.

சிந்தா மணியாய்த் திகழுஞ் சிந்தாமணியை
நந்தாது நாளு நலமாகப்—பந்தமறக்
கற்பார்க்கு நல்ல கவினுண்டாம் வாழ்வுண்டாம்
பொற்பாயீ தோங்க பொலிந்து.

7—2—25ல் டர்பனிலிருந்து ஸ்ரீமான் R. M. பிள்ளை அவர்கள் எழுதுவது.

தேவரீர் சகோதரி பாலம்மா அவர்களுக்கு, தங்களுக்குச் சேரவேண்டிய சந்தாவையனுப்பியிருக்கிறேன். நிற்க என்னுடைய மனைவி தங்கள் மாதாந்தப் பத்திரிகை சிந்தாமணியைப்பற்றி தன்னைப் போன்ற பெண்களிடம் பத்திரிகையிலுள்ள இனிய விஷயங்களைச் சொல்லி வருவதுடன் "சிந்தாமணி" கண்டு ஆனந்தங்கொண்டதாக என்மூலம் தங்களுக்கு அறிக்கை செய்யச் சொன்னதுடன் தங்களைப் பார்க்கப் பிரியமாயிருப்பதால் தங்கள் உருவப்படம் ஒன்றையனுப்பும்படிக்கும் எழுதச் சொல்லியிருப்பதால் ஒரு படம் அனுப்பிவைக்கவும்.

7—10—25ல் நேட்டாலிலிருந்து ஸ்ரீமதி மிஸ் குணரத்தினம் நாயுடு எழுதுவது.

சகோதரி அவர்களுக்கு,

தாங்களனுப்பிவரும் "சிந்தாமணி" எனும் பெயர்பெற்ற மாத சஞ்சிகையை மாதந்தோறும் வரப்பெறுகிறேன். அதன் சிறப்பை என்னென்று வரைவது? 'சிந்தாமணி' நீடூழி வாழ ஸ்ரீ கண்ணபிரான் கருணைபுரிவாராக.

ஸ்ரீமதி அம்புஜவல்லி அம்மாள் 19—9—'26ல் எழுதுவது.

பிரியமுள்ள சகோதரி பாலம்மாளுக்கு,

சென்ற இரண்டு வருடங்களாய் நடந்துவரும் இச்சிந்தாமணியை ஆவலுடன் படித்து வருகையில், அதில் வெளிவரும் விஷயங்கள் சிறந்தவைகளாகவும், ஸ்திரீகள் முன்னேற்றத்திற்கு சாதகமானவைகளாகவும், தற்காலப் போக்கிற்கு ஏற்றவைகளாகவும் இருக்கக்காண சந்தோஷப்படுகிறேன். மேலும் சிந்தாமணியில் வெளிவரும் விஷயங்கள் தெளிந்த சுலபமான நடையில் வரையப்பட்டிருப்பதானது அதிக உயர்ந்த தமிழ் கல்வியானது இலக்கண பரிச்சயமாவது இல்லாதவர்களும் அவரவர்கள் நுண்ணறிவிற்கு எட்டியவாறு ஏதோ சில விஷயங்களை எடுத்துக் கூற இடந்தருவதாய் இருக்கிறது.

ஸ்ரீமதி N. குப்பம்மாள் அவர்கள் 24—3—26ல் டேலுக் ஆன்ஸனிலிருந்து எழுதுவது.

பூமகள் திலகம்போல் நின்றிலங்கும் அன்பிற்கினிய சகோதரி வி. பாலம்மாள் அவர்களுக்கு எனது நன்றியறிதலான வந்தனம். தங்களுடைய சிந்தாமணி என்ற உயர்தர மாதத் தமிழ்ப் பத்திரிகை தமிழ் மக்களனைவரும் ஆதரிக்கக்கூடியவாறு அமைந்திருத்தல் போற்றத் தக்கதாம். இவ்வுயர்தரப் பத்திரிகை இன்னும் பல வழிகளிற் சிறப்புற்று விளங்கத் தமிழ் நாடெங்கும் பரவவேண்டுமென்பது எனது எண்ணம். ஆகையால் யான் சந்தாதாராகச் சேர வேண்டுவதுடன் என்னால் கூடுமானவரை வியாசங்களையும் எழுத நினைக்கிறேன். பெண் கல்வியைப் பெருகச் செய்யும் செல்வியே! தங்களுடைய பதிலை எதிர்பார்க்கிறேன்.

ஸ்ரீமதி பெரிய நாயகம் (மிஸஸ் P. R. பத்தர்) அவர்கள் 13—3—'26ல் டர்பனிலிருந்து எழுதுவது.

தெய்வீகம் பொருந்திய சகோதரி வி. பாலம்மாள் அவர்கள் திவ்விய சமூகத்திற்கு, தாங்கள் பிரசுரித்துவரும் "சிந்தாமணி"யை வாசித்து வந்ததில் ஒவ்வொன்றும் மிகவும் உற்சாகத்தையும் நல்வழிக்கு ஆதாரவையும் அளிப்பதுடன் இவ்வரிய பெரிய வியாசங்களும் பண்டைக் காலத்து சரித்திரங்களும் தமிழ் நாட்டுப் பெண்மணிகளின் முன்னேற்றங் கருதி அவர்கள் தற்கால நிலைமையினின்றும் உயர்நிலை யெய்துவதற்கு வேண்டிய கல்வி, ஒழுக்கம், நாகரிகம் முதலிய மகளிர்க்குரித்தான நற்குணங்களைப் போதிப்பதான விஷயங்கள் தங்கள் பத்திரிகையில் வரையப்பட்டுள்ளன. ஸ்திரீகள் விஷயத்தில் இவ்வளவு சிரமம் எடுத்துக்கொண்டிருக்கும் தங்களுக்கு நன்றியை எவ்விதம் பாராட்டுவதென்று எனக்குத் தெரியவில்லை.

ஸ்ரீமான் R. M. A. L. மாணிக்கம் பிள்ளை அவர்கள் 20-6-26ல் மைடானிலிருந்து எழுதுவது.

சகோதரி வி. பாலம்மாள் அவர்களுக்கு எனது மனமார்ந்த வந்தனம். பெண்கள் விஷயமாய் கவனம் செலுத்தி அவர்கள் முன்னேறும் வழியைப்பற்றி தாங்கள் முயற்சியெடுத்துக்கொண்டதைப்பற்றியும் சிரமம் பாராது பத்திரிகை நடத்திவருவதுபற்றியும் சகோதரர்கள் சந்தோஷமடைகிறார்கள். தங்களுக்கு கடவுள் பூரண ஆயுளைக் கொடுத்து சிந்தாமணியை என்றும் நடத்திவரும்படியாய் சதா கடவுளைப் பிரார்த்தித்துக்கொண்டிருக்கிறோம்.

24—9—25ல் சித்தியவானிலிருந்து ஸ்ரீமான் R. M. P. R. ராமசுவாமி செட்டியார் அவர்கள் எழுதுவது.

அம்மா,

ஒருகாலத்தில் நாகரிகமே உருவாக விளங்கி மற்ற தேசங்களுக்கு வழிகாட்டியாகவிருந்த நம் நாடானது பல காரணங்களினால் நவநாகரிகத்தில் மூழ்கித் தத்தளித்துக்கொண்டிருக்கும் இச்சமயத்தில் பொதுவாகத் தமிழ் மக்களின் வளர்ச்சியையும் சிறப்பாக நம் பெண்மணிகளின் வளர்ச்சியையுமே முக்கிய நோக்கமாகக்கொண்டு பல அறிஞர்களின் அரிய கட்டுரைகளுடன் சிறந்த அறிவாளியும் தேசாபிமானியுமாகிய தங்களால் நடத்தப்பெறும் நமது "சிந்தாமணி" மேலும் மேலும் அதிக சிறப்புடன் நீடூழி காலம் நிலவுமாறு எல்லாம் வல்ல இறைவன் திருவருள் புரிவார்.

ஸ்ரீமதி செ. ராசம்மாள் ஸிலோனிலிருந்து 2—11—1926ல் எழுதுவது.

சாத்விகம் தங்கிய சகோதரிக்கு நமஸ்காரம்,

தாங்கள் நந்தமிழ் நாட்டிற்கும் விசேஷமாக அநிலுதித்துள்ள பெண்மக்களுக்கும் மிகவும் பிரயாசையுடன் வெளியிட்டு வரும் சிந்தாமணியை கையில் எடுத்தவர்கள் முற்றும் வாசியாமல் வைக்க விரும்பாததுடன் அடுத்த சஞ்சிகைகளையும் பார்க்க விரும்புகின்றனர். தங்களைச் சகோதரியாக அடையப்பெற்ற எங்கள் பாக்கியமே பாக்கியம். தாங்கள் புரியும் இந்நன்றிக்கு பிரதியுபகாரஞ் செய்ய எம்மால் இயலாதாயினும், தங்களுக்கும் தங்கள் சிந்தாமணிக்கும் நீடித்த ஆயுளைக் கொடுக்குமாறு படைத்தளித்துக் காக்க வல்ல மழும் பொருளைப் பன்முறை வேண்டுகிறேன்.

27—4—26ல் சிலோனிலிருந்து ஸ்ரீமான் டி. ஜே. பரமானந்தன் அவர்கள் எழுதுவது.

சிந்தாமணி சஞ்சிகையைப் படித்ததிலிருந்து எனக்குண்டான மனமகிழ்ச்சிக்கோரளவில்லை. விசேஷமாய் தமிழ் நாட்டு ஸ்திரீகளின் நன்மைக்கென்று சகல கஷ்ட நிஷ்டூரங்களையும் பாராது மெத்தப் பிரயாசையுடன் தாங்கள் நடத்திவரும் சஞ்சிகையை எல்லாம் வல்ல இறைவன் மேன்மேலும் ஆசீர்வதிப்பாராக. "சிந்தாமணி" நீடூழி வாழ்க. தாங்கள் அன்புடன் எனக்கு சஞ்சிகையும் நிருபமுமனுப்பியதற்கு மனமார்ந்த நன்றியைச் செலுத்துகிறேன். அனுப்பியிருக்கும் சந்தாவைப் பெற்றுக்கொண்டு என்னையும் ஓர் சந்தாதாராகப் பதிவுசெய்து கொள்ளக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஸ்ரீமான் ஜி. பக்கிரிசாமி முதலியார் அவர்கள் 22—4—25ல் சிங்கப்பூரிலிருந்து எழுதுவது.

சிந்தாமணி பத்திராதிபர் அவர்களுக்கு,

தாங்கள் வெளியிட்டு வரும் சிந்தாமணி என்னும் தமிழ் மாதப்பத்திரிகையின் 1924 டிசம்பர் இதழ் எனது நண்பர் மூலமாக சமீபத்தில் எனக்குக் கிடைத்துக் கண்ணுற்றேன். அதிலடங்கிய சில விஷயங்களைப் பார்க்க என் மனது குதூஹலமடைந்தது. ஆகையால் என்னையொரு சந்தாதாராகச் சேர்த்துக்கொண்டு பழைய பிரதிகளையுமனுப்பக் கோருகிறேன்.

ஸ்ரீமான் மு. சா. கபாலி அவர்கள் 9—2—26ல் பினாங்கிலிருந்து எழுதுவது.

நம் பாரத நாட்டில் அவதரித்து செந்தமிழ்த் திலகம்போல் விளங்கும் சிந்தாமணி வரப் பெற்றேன். உள்ளம் மகிழ்ந்தேன். பெண் கல்வி முன்னேற்றத்தைப்பற்றியும் நம் தாய் நாடு தூங்கிக்கொண்டிருந்ததைத் தட்டி எழுப்பி நல்கி செய்த நன்றிக்கு.........வைகமும்......... மாற்றலரிது. நம் சகோதரிக்கு நீடித்த ஆயுளளித்து இம்முயற்சிக்குக் கடவுள் கருணை புரிய வேண்டுகிறேன்.

ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்.

சிந்தாமணி:—மாதந்தோறும் மேன்மேலும் பல சீர்திருத்தங்கள் பெற்று, சுக்கில பக்ஷத்துச் சந்திரனைப்போல ஒளிபெற்று விளங்கிவரும் இப்பத்திரிகையின் பங்குனி மாத இதழ் கண்டு மிகவும் மகிழ்வுற்றோம். இப்பத்திரிகை தோன்றியபொழுது, வெகு காலம் நடைபெறுமோ என நாம் ஐயுற்றதுண்டு. நமது ஐயம் தீர்ந்தது. நம் சகோதரிகளிலொருவர் நம்மவர்க்காக உழைக்க முன்வந்திருப்பதைக் கண்டு உவகை கொள்கிறோம். முதலில் 32 பெரிய பக்கங்கள் கொண்டு வெளிவந்த இப்பத்திரிகை இப்போது 64 பக்கங்கள் கொண்டுள்ளது. கட்டுரைகளுக்குத் தலைப்பில் அழகிய சித்திரப் படங்களும் விளங்குகின்றன. பத்திராதிபர் தமது கல்விச் செல்வத்தையும் அனுபோகத்தையுங் கொண்டு அரிய வியாசங்களையும் இனிய கதைகளையும் எழுதி வருவதோடு அறிவிற் சிறந்த பெண்மணிகளையும் தமது பத்திரிகைக்கு விஷயதானஞ் செய்யும்படித் தூண்டி வருவது மிகவும் மெச்சற்பாலது. உள்ளே 'தமிழ் நாட்டுப் பெண்மக்களின் முன்னேற்றத்தை முக்கியமாகக் கொண்டுள்ள பத்திரிகை' என வரையப்பட்டிருப்பினும், இப்பத்திரிகை சிறப்பாகப் பெண்மக்களுக்கும் பொதுவாக ஆண் பெண் ஆகிய இருபாலருக்கும் பயன் தருவதாகும்.

பங்குனி மாதத்து இதழிலே வெளிவந்துள்ள சில கட்டுரைகளை இங்கு குறிப்பிடுகின்றோம். "பெண்கள் சுதந்திரம், மனைவி மக்களும் முக்தி மார்க்கமும், இந்திய ஸ்திரீ ரத்னங்கள், பர்வத குமாரி, ஸ்ரீராதாகிருஷ்ண லீலைக் கும்மி, ஸெலிமா பேகம் அல்லது மொகல் மன்னரின் அந்தப்புரம், கலாவதி, மஹா சிவராத்திரி".

இவ்வுயர்தரப் பத்திரிகை இன்னும் பல வழிகளில் சிறப்புற விளங்கி தமிழ்நாடெங்கும் பரவவேண்டுமென்பதே எமது எண்ணம்.

ஸ்ரீமதி என். குப்பம்மாள் அவர்கள் 20—4—27ல் டெலுக் ஆன்ஸனிலிருந்து எழுதுவது.

அலைகடல் சூழ் அவனியின்கண் அன்பே ஓர் உருவாக உதித்த சகோதரி வி. பாலம்மாள் அவர்களுக்கு,

தெய்வீகந்தங்கிய அம்மா, தங்களுடைய திரு உருவை நேரில் காணவும் தங்களுடைய தேனினுமினிய அன்பு நிறைந்த வார்த்தைகளைக் கேட்டு ஆனந்திக்கவும் கருணை புரிந்த என்னையன் ஸ்ரீராமச்சந்திர மூர்த்தியை என்னவிதம் வர்ணிப்பதென்று தெரியவில்லை. அம்மா! நான் டெலுக் ஆன்ஸனிலிருந்து வந்த அன்றே இவ்விடத்தில் எங்களுக்குத் தெரிந்தவர்களிடம் சிந்தாமணியின் பெருமையைப்பற்றியும், நமது இந்திய சகோதரிகளுக்காக தங்கள் தேகசுகத்தை ஓர் பொருட்படுத்தாமல் இவ்வளவு சிரமமெடுத்து இந்தியாவிலிருந்து இந்நாட்டிற்கு விஜயம் செய்ததைப்பற்றியும் தெரிவித்ததில் சிலர் சந்தாதாராக சேர விருப்பங்கொண்டிருக்கின்றார்கள். சரஸ்வதி தேவியின் அருள் நிறைந்த எனதன்னையே! தாங்கள் கோலாலம்பூருக்குப் போகும்பொழுது ஏழைமீது கிருபை கூர்ந்து தாப்பாவிற்கு விஜயம் செய்தால் தங்களுடைய அந்தஸ்திற்குத் தகுந்தவிதம் எங்களுக்கு மரியாதை செய்ய சக்தியில்லாவிட்டாலும் எங்களால் கூடுமானவரையில் முயற்சியெடுக்கின்றோம். தாங்கள் எப்பொழுது ஈப்போவை விட்டுப் புறப்படுவீர்கள்? தங்களுடைய ஆத்ம சரீர சுக சவுக்கியத்திற்கு ரகுவீரனைப் பணிந்து வருகின்றேன். இவ்விடத்தில் கடவுள் கிருபையாலும் தங்களுடைய ஆசீர்வாதத்தினாலும் எல்லோரும் க்ஷேமம். சிரம்பான் போஸ்ட்மாஸ்டர் மனைவிக்கும் ஓர் லெட்டர் எழுதியிருக்கின்றேன். அவர்களும் சந்தாதாராக சேருவார்கள். அளவற்ற வந்தனத்தோடு இக்கடிதத்தை மூடிக்கின்றேன்.

Mr. C. R. SRINIVASA IYENGAR, "Ramayana Vilas', Mylapore, writes :—

"Chinthamani" is, so far as I know, the only Tamil Monthly, or for the matter of that, any kind of newspaper edited and published by a lady in South India. A more pleasing feature about it is that instead of being the editor of it in name only and conducting it usually backed up by members of the other sex (as is really the case with some so-called Ladies' Magazines I have known) she is all-in-all and uniformly self-reliant so far as the editing is concerned, has gone on sustaining it for the last four years with her inexhaustible leaders and amusing and instructive short-stories.

In this she has the incalculable advantage over her sisters of being the pupil and daughter of a very learned lady, a Pundit in fact; and consequently herself a very creditable student of Sanskrit, Tamil and Canarese. As if these were not a wide scope for her talents she has devoted herself to the uplift and ameleoration of the millions of her voiceless sisters of the land. She speaks for them, she thinks for them, she writes for them and she fights for them almost single-handed for till now I have not come upon any other who could stand by her side and like the Romans of old, hold the bridge against an army. Further she throws herself heart and soul into all activities that bear upon the question of women's rights and duties. I am glad to note that she has another aspect in that she is a talented author and speaker.

The Magazine that she edits is coming up very quickly to take the place by the side of those at whose helm are the members of the sterner sex.

But I have to own that there is a regrettable feature about it; as in the States and in similar advanced centres of the world, there are papers printed, published, edited and written by women and women alone. Sister Balammal has not the pleasure and privilege of not depending for contribution or financing upon the members of the other sex: May be her sisters have not educated themselves to that level where they could share her work; may be they have not the clear eye to see that the very best use they could make of the time and the money they could spare is to start, build up and grow such concerns and, like the beautiful rose in the valley of Kashmere cover the face of Mother India with noble women of of whom she could be really proud.

Well, the editor is a host in herself, her impressive personality, her polished manners and the driving force in her words and actions cannot fail in the near future to find fruitful response in the hearts of many a gem of Indian women who now lie hidden in the dark unfathomable caves of private life.

புதிய ஸங்கீத புத்தகம்!

பிரசித்திபெற்ற நூலாசிரியர்,
வித்வான் கெ. வி. ஸ்ரீனிவாச அய்யங்கார் இயற்றியது.

ஸங்கீத சிந்தாமணி

விலை ரூபா 3—0—0.

இது சங்கீத வித்யார்த்திகட்கும், உபாத்தியாயர்கட்கும் இன்றியமையாத ஓர் அரிய புத்தகம். இதுவரையிலும் வெளிவராத தியாகராஜ கீர்த்தனைகள், இன்னும் அநேக பிரசித்திபெற்ற வித்வான்களின் நூதன கீர்த்தனைகள் முதலியவைகளை ஸ்வரதாளங்களுடனும் ராக லக்ஷணங்களுடனும் அச்சிடப்பட்டிருக்கின்றன.

குறிப்பு :—நவம்பர் மாதம் 30-ஆம் தேதிக்குள் இப்பத்திரிகையின் பெயரை குறிப்பிட்டு ஆர்டர் செய்பவர்கட்கு தபாற் செலவு இனும்.

முழு விவரத்திற்கு கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

எம். எஸ். ராமுலு கம்பெனி,
புத்தக வியாபாரிகள், ராயபுரம், மதராஸ்.

ஸ்ரீமான் டாக்டர் கே. முத்துகுமாரு அவர்கள் (J. P.) பினங்கிலிருந்து 10—3—'27ல் எழுதுகிறார் :—

பிரியமுள்ள சகோதரி பாலம்மாளுக்கு,

சென்ற மூன்று வருடங்களாகத் தாங்கள் நடாத்திவரும் "சிந்தாமணி" என்னும் மாதச் சஞ்சிகையை வாசித்து சந்தோஷமடைந்தேன். தமிழ்ப் பெண்களின் தாழ்ந்த நிலையையும், கல்வியின்மையையும், தேசாபிமானக் குறைவையும் நன்கறிந்த தாங்கள் இத்தகைய பத்திரிகையை நடத்த முன்வந்தது தமிழ் நாட்டின் நற்காலமேயாகும்.

சென்ற பலவருடங்களாகத் தாங்கள்செய்து வருகின்ற தேசத்தொண்டிற்கும் சமூக ஊழியத்திற்கும் இப்படிக்கான ஓர் அரிய சாதனம் இன்றியமையாததென்று எல்லோரும் ஒப்புக்கொள்ளுவார்கள்.

சிந்தாமணியின் பக்கங்களிலுள்ள ஒவ்வோர் விஷயமும், பிரதானமாகத் தமிழ்ப் பெண்கட்கும், பொதுவாகத் தமிழ் மக்கட்கும் நல்லறிவையும், நன்மையையும், சுயமதிப்பையும், தேசியப்பற்றையும் உண்டாக்கக் கூடியதென்பது எனது துணிபு.

மேலும் சமையல் சாஸ்திரம், குடும்ப சாஸ்திரம், சிசுபரிபாலனம் முதலிய அங்கங்களை "சிந்தாமணி" ஏற்றுவந்தால் முன்னிலும் அதிக பலனைத் தமிழ் மக்கட்கு அளிக்குமென்பதிற் சந்தேகமில்லை.

இவ்வரிய தொண்டைச்செய்துவரும் தாங்கள் இம்மலேயா நாட்டிற்கு வந்து எங்களையும், எங்கள் பெண்மணிகளையும் கௌரவம் செய்வது நாங்கள் செய்துகொண்ட பாக்கியந்தான்.

அன்புள்ள சகோதரியே! உம்மையும் உமது அருமைச் "சிந்தாமணி"யையும் மலாய் நாட்டுத் தமிழ் மக்களாகிய நாங்கள் அபிமானித்து ஒவ்வொருவரும் சந்தாதாராகச் சேர்ந்து உங்கள் உயரிய நோக்கத்தையும், தேசத்தொண்டையும் அபிவிருத்தி செய்ய முன்னணியில் நின்று வேலைசெய்யக் கடமைப்பட்டுள்ளோம். சர்வ வல்லமையுள்ள கடவுள் தங்களுக்கு நீடிய ஆயுளையும் நோயற்ற வாழ்வையும் கொடுத்துத் தாங்கள் செய்துவரும் தொண்டை மேன்மேலும் விருத்தி செய்து ஆசீர்வதிப்பாராக.

சிந்தாமணி சந்தாதாருக்கு ஒரு நற்செய்தி.

சோதிடம்! சோதிடம்

பிறந்த ஊர், வருஷம், மாதம், தேதி, நேரம் இவைகளைக் குறித்தனுப்பினால் ஜா கணிதம் பண்ணி, ஸ்புடஞ் செய்து, ஜாதக மூலம், இனிவரும் பலன்கள், செ பாவம், ஆயுர்பாவம், களத்திரபாவம் முதலியவைகளையும் வியாதி முதலிய எல் யும் நீக்கும்படியான ஜபஹோம சாந்தி முதலிய ஜாதக சம்பந்தமான எல்லா அடியில் கண்டவரிடத்தில் தெரிந்துகொள்ளலாம். பிறந்த வருஷம், மாதம், தே வர்களுக்கு நஷ்டஜாதகமும் கணிக்கப்படும்.

சார்ஜு விபரத்துக்கு நேரில் எழுதவும்.

எம். நரசிம்மய்யர்
சோதிட வித்வான், சங்கைப்பாரி ரோடு, ஈப்

மலாய் நாட்டு சந்தாதாருக்கு

மானேஜர் முக்கிய அறிவிப்பு.

நம் சிந்தாமணியானது ஒவ்வொரு ஆங்கில மாதக் கடைத் தேதியி வேண்டியிருப்பினும் பல எதிர்பாராத அசந்தர்ப்பங்களால் மறுமாத முதல் வார போது வெளிவந்துகொண்டிருக்கிறது. ஒருவர்விடாது உள்நாட்டு வெளிநாட் களுக்கு ஒரேநாளில் தபாலாபீசில் போஸ்டு செய்யப்பட்டு வருகிறது. இப்ப சகோதரர் சிலருக்கு போஸ்டு செய்யப்படும் சிந்தாமணியானது வந்து சேருவ கேட்க வியப்பாக விருக்கிறது. ஒருவிதத் தப்பின்றி வெகு பொறுப்பாக நம் வொருவருக்கும் விலாசமிட்டு அனுப்பப்படுவதால் இவ்விதம் காபிகள் கைதவறு யில் களவுபோவதே காரணமென ஊகிக்கவேண்டியிருக்கிறது. ஆகையால் நம் சந்தாதார் ஒவ்வொருவரும் மறுமாத 20-தேதிக்குள் தமக்குப் பத்திரிகை கி உடனே தமது போஸ்டாபீசிலும் தெரிவித்துத் தாமதமின்றி நமக்கும் அறிவிப் குள்ள போஸ்டுமாஸ்டர் ஜனரலுக்கு அக்கடிதங்களைக் காண்பித்து இனிமே நிகழாவண்ணம் தடுப்பதற்கும் தவறிப்போன பிரதிகளுக்கு மாற்று அனுப்புவத சௌகரியமாயிருக்கும் என தெரிவித்துக்கொள்கிறோம்.

ஸ்ரீமான் உ. கா. தேவருயன் செட்டியார் அவர்கள் 21—5—27ல் கல்லலிலிருந்

அன்பு நிறைந்த சோதரியே!

நலன் வேண்டுவது மற்றே. தங்களால் வெளியிடப்பெறும் சிந்தா பாரத நாடும் முக்கியமாகப் பெண்மக்களும் முன்னேற்றமடையப் பல அரிய பெரி மலிந்து கிடக்கின்றன. நம் நாடு தற்காலமிருக்கும் நிலைக்கு தாங்கள் இத்தொண் வந்தது மிகையே. பரோபகாரமே பரம மோக்ஷமென்றெண்ணும் தங்கட்கும் நட சிந்தாமணிக்கும் நீண்ட ஆயுளையும் பல நலங்களையும் தரவேண்டுமென எல்லாம் வல்ல குலக்கடவுளாம் குமர நாயகனைப் பலகாலும் பிரார்த்திக்கின்றேன்.

207622

(as is
he is
e on
ising
the
ntly
ese
and
for
most
her
she
n of
that
place
n the
nted,
l has
upon
ves to
ar eye
they
l rose
en of
hed

2

(1)	(2)	(1)	(2)